www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
மார்ச்.08-14,1998
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 247

# போரும் பொய்களும்





## எவர் வருவாரோ?

## மாறும் மலையகம்



## மறுபடியும்



## அதிரடிப் பேட்டி

## பூலான் சரண்

## ராஜேஸ்குமாரின் புதிய தொடர்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## வளரும் மனோபாவம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தலைநகரில் வாழும்
தமிழ் மக்கள்
வேண்டாத விருந்தாளிகளாகவும்
சந்தேகப் பிராணிகளாகவும்
உளவியல் வதைக்கு
உள்ளாகி வருகின்றனர்!

பாதுகாப்பு என்ற போர்வையில்
மனித உரிமை மீறல்கள்
கோலோச்சி வருகின்றன!

முன்னெப்போதும் இல்லாதளவில்
பாதுகாப்பு விதிமுறைகளில்
இனவாதம் மேலோங்கியுள்ளது!

முன்னைய ஆட்சிக் காலங்களிலும்
கெடுபிடிகள் இருந்தன.
ஆனாலும், சுட்டிக்காட்டினால்
பத்தில் ஒரு பிரச்சனைக்காயினும்
பரிகாரம் காணமுடிந்தது!

இன்றைய ஆட்சியில்
மேடைகளில் முழங்க
பிரமுகர்கள் இருக்கிறார்கள்!

இனப்பிரச்சனைக்கு
அரசியல் தீர்வு பற்றி
உலகின் செவியில் விழுமளவு
உரத்துப் பேசவும்
ஆட்சி பீடத்தில்
ஆட்கள் உள்ளனர்!

ஆனால், இங்கு
தமிழ் மக்கள் படுகின்ற
துயர்களை எடுத்துச்சொன்னால்
காது கொடுத்து கேட்பதுடன்
கருத்துக்கெடுத்து
பரிகாரம் காணமட்டும்
எவரும் இல்லை!

விடுதிகளைவிட்டு
தமிழ் மக்களை
கொளுத்தும் வெயிலில்
விரட்டியடித்தனர் பொலிசார்!

ஆட்சி பீட மேலிடமோ
பாதுகாப்பு மேலிடமோ
அந்த நடவடிக்கையை
ஆமோதிப்பது போலத்தான்
பார்த்துக் கொண்டிருந்தன!

நள்ளிரவு வேளையில்
தமிழ் பெண்களை
புகைப்படம் எடுத்தனர்!

யாரோ சிலருக்கு
ஏற்பட்ட வக்கிர ஆசைக்கு
வடிகால் தேட
நடத்தப்பட்ட நடவடிக்கை அது!

இரவு உடையுடன்
புகைப்படம் எடுத்தால் என்ன-
பகல் உடையுடன்
படம் பிடித்தால் என்ன-
சாதாரண மக்களை
சந்தேகப் பிராணிகளாக
கேவலப்படுத்தும்
அணுகுமுறையே அதுவாகும்!

பெண்களை மட்டுமல்ல
ஆண்களைக்கூட
வீடுகளுக்குள் புகுந்து
சந்தேக அடிப்படையில்
புகைப்படம் எடுப்பது
மனித உரிமை மீறல்தான்!

அத்தகைய அத்துமீறல்களுக்கு
அதிகாரம் கொடுத்தது யார்.
அதுதான் இனி விதிமுறையா
அல்லது விதிவிலக்காக
நடந்துவிட்ட சம்பவமா?

அதனை விளக்கக்கூட
இன்றைய ஆட்சியில்
எவரும் இல்லை!

கடந்த ஆட்சிக்காலத்தில்
நடந்த அத்துமீறல்களை
இன்றைய ஆட்சியாளர்கள்
விரல் நுனியில்
வைத்திருக்கிறார்கள்!

இன்று-தங்கள்
ஆட்சிக் காலத்தில்
நடந்துவரும்
அத்துமீறல்களை மட்டும்
புறங்கையால் தள்ளி
அலட்சியப் படுத்துகிறார்கள்!

தமிழ் மக்களை
எப்படி நடத்துவது என்று
பாதுகாப்புத் தரப்பின்
எந்த மட்டத்திலிருப்பவரும்
தீர்மானிக்கக் கூடியவராகிறார்.

ஒரு சாதாரண
பொலிஸ் கான்ஸ்டபிளோ
ஒரு சிப்பாயோ
தன் விருப்பப்படி
விதிமுறை வகுக்க முடிகிறது!

தமிழ் மக்கள்மீது
அதிகார துஷ்பிரயோகம்
நடத்தப்படுமானால்கூட
பாதுகாப்புமீதான அக்கறை-
தேசப்பற்று என்றெல்லாம்
அர்த்தம் கொடுக்கப்படுகிறது!

இந்நிலையில்
முன்னைய காலங்களைவிட
ஆயிரம் மடங்கு அதிகமான
அந்நிய மனோபாவம்
தமிழ் மக்களிடம் ஏற்பட
இன்றைய கெடுபிடிகள்
வழி கோலிக் கொண்டிருக்கின்றன!

■ ■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

## தபசு காலத்தில்...!

"உபவாசத்தோடும், அழுகையோடும், புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடம் திரும்பிவாருங்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் உங்கள் வஸ்திரங்களை அல்ல, இதயங்களைக் கிழித்து உங்கள் தேவனாகிய கர்த்தரிடம் திரும்புங்கள். (யோவேல் 2:12,13)

தபசு காலம் தொடங்கி விட்டது. தபசு காலத்தில் ஏன் எல்லாரும் உபவாசம் இருக்கிறார்கள்?

இயேசுகிறிஸ்து கல்வாரிச் சிலுவையில் தன்னை ஒப்புக்கொடுக்கும் முன் பல பாடுகளை அனுபவித்தார். அந்த நாட்களை நினைவு கூர்வதாகும்.

தபசு காலத்தில் வீணான ஆடம்பரங்களைத் தவிர்த்து, ஒரு சந்தி இருந்து, ஆலயங்களில் பிரார்த்தனைகளில் ஈடுபடுவது போன்றவை மட்டும்தான் உபவாசம் என்று பலர் நினைக்கிறார்கள். இவை மட்டும் உபவாசமாகாது.

மேலே கூறப்பட்ட திருமறை வாசகங்கள் அதைத்தான் உணர்த்துகின்றன.

இந்த நாட்களில் தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, இறைவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

அதுமட்டுமன்றி பசியுள்ளவர்களுக்கு உணவளித்தும், துரத்துண்டவர்களுக்கு இடமளித்தும், இன்னும் நம்மால் இயலக்கூடியவற்றை இந்நாட்களில் செய்ய வேண்டும்!

ஜி. செல்வா.

# ஆன்மீகம்



## பெற்றோருக்கு கண்ணியம் அளியுங்கள்!

பெற்றோருக்குக் கண்ணியம் அளிப்பது பற்றி மொழிந்துள்ள ஹதீஸ்கள் சில:-

* உங்கள் சுவனமும், நரகமும் உங்கள் பெற்றோரின் பாதத்தடியில்! (நபிமொழி)

* "அல்லாவின் திருப்தி தந்தையின் திருப்தியில் தங்கி இருக்கின்றது; அதுபோல, அல்லாவின் கோபம் தந்தையின் வெறுப்பில் தங்கியிருக்கின்றது. (நபிமொழி)

* யாரேனும் ஒருவர் தனது பெற்றோருக்குப் பணிவிடை புரிந்தால், அவருக்கு ஈருலக நன்மைகள் கிடைக்கும்: பெற்றோருக்கு உதவுவதால் அவரது ஆயுள் நீடிக்கும். உணவில் அபிவிருத்தி ஏற்படும். (நபிமொழி)

* பெற்றோருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்கள் ஏதேனும் பணியொன்றினை ஆரம்பிக்கும் பொழுது, அது எத்தகையதாயினும் பெற்றோரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்; நீங்கள் அவர்களுடன் இணக்கமாக இருப்பீர்களாயின், அது உங்களுக்கான சுவன வாசலைத் திறந்து கொள்வதற்கான ஓர் அம்சமாக இருக்கம். (நபிமொழி)

தொகுப்பு: ரிஸான் ஸஹான்-தோஹா.

## கவிதைப் போட்டி இல.244

### பரிசுக்குரிய கவிதை



### தேடுதல்!

தாஜ்மஹாலைக் கட்டிவிட்டேன்;
காதலியைக் காணவில்லை-
பெயர் மட்டும்
காணாமல் போனோர்
பட்டியலில்!

ஹிசாமா பைஸ்- கருத்துறை (தெற்கு)

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்.**

### உழைப்பு

இது
ஷாஜஹான் கட்டியது
என்பது பொய்!
பல தொழிலாளர்கள்
சிந்திய இரத்தம்-
என்பதே மெய்!!

எஸ். பிரபா- பதுளை.

### பளிங்கு மாளிகை

ஏழையின் காதலை
ஏளனம் செய்யும்
பணக்காரரின் பணத்துக்கு
சவால்விடும்
சரித்திரப் படைப்பு!

திருமதி முகுந்தன்-
பலாங்கொடை.

### காதல்

காதல் ஒரு தியானம்!
ஏனெனில்
ஞானிகள் காதலித்தார்கள்..
ஆகவே-காதல் செய்பவர்கள்
ஞானிகள்.

எஸ். தினேசீ- சத்துருக்கொண்டான்.

### யாருக்கும் தெரியாமல்

இதைவிட புனிதமாக
எத்தனை மஹால்கள்
இதயத்தில் கட்டப்பட்டு,
இன்று உடைக்கப்பட்டு,
ஷாஜகானை விட சோகமாக
எத்தனை எத்தனைபேர்
யாருக்கும் தெரியாமல்
தம்முள்ளே வாடுகிறார்கள்!

யாழ்- மதிதாசன்.

### தப்பியது...

வட-கிழக்கில் இருந்தால்
வசதியாய் இருந்திருக்கும்-
'அகதிமுகாம்' அமைப்பதற்கு.
வேண்டாம்...!
வட-கிழக்கில் இருந்திருந்தால்
இடிந்திருக்கும் 'செல்லடியால்!'


சிவசேகரம் சிவகுமார்- கல்லடி, மட்டக்களப்பு.

### அமர காதல்

காதலினால் உருவான சன்னதி- இதை
காலமெல்லாம் போற்றும் இளம் சந்ததி!

சி.மு. சுந்தரேசன்- மஸ்கெலியா.

## கவிதைப் போட்டி இல.247



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 14.03.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.247, தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

### நல்ல காலம்!

தாஜ்மஹாலே! நல்லகாலம்
நீ அங்கிருந்ததால்
தப்பிக் கிடக்கிறாய்!
இங்கிருந்திருந்தால்...?

செல்வி இ. தமிழரசி-
ஈச்சந்தீவு, கிண்ணியா.

### நீதி

சின்னங்களும் கொடிகளும்
ஒருவனின் புகழே
பேசி நிற்கும்!
அதற்கான தியாகங்கள்
உழைப்புக்கள்...!

சுபா வரன்- கண்டி.

### காதலுக்கு மரியாதை

சிந்திய கண்ணீரும்
வியர்வைத் துளிகளும்
மங்காத சங்கமத்தால்
பாங்கான பளிங்கு!

க. நாகராசா- நுணாவில்,
சாவகச்சேரி.

# வாசக(ர்)சாலை



உலாவரும் தினமுரசே!

காலம் மாறலாம், பழகும் மனிதர் மாறலாம், ஆனால் உன் நினைவுகள் என்றும் மாறாது. உன்னை ஒருமுறை கைகளில் ஏந்தி கண்களில் தவழவிடும் 'அனைவரையும் பார்க்கப் பார்க்க தூண்டும் உனது அம்சங்கள். 'எழுத்துச் சித்தர்' பாலகுமாரன் அவர்களின் 'இனி என் முறை' அசத்தல்! யார் அந்த கந்தசாமி? ஒரு முறை அவரது புகைப்படத்தினை பிரசுரிப்பீர்களா?

செல்வன் எட்வேட் நிஷாந்தன், பெரியநீலாவணை-1.

அன்பின் முரசுக்கு!

நீர் தாங்கிவரும் அனைத்தும் என் மனதைக் கவர்ந்தன. அதில் இனிய தொடரான 'மேக்கப் புன்னகை' என்னை அசத்துகின்றது.

அ. வசந்திமலர், கிரேகட் கம்பலவீதி.

முரசின் அரசியல் கணிப்பு உண்மையில் யதார்த்த பூர்வமானது. ஆளும் கட்சி- எதிர்க்கட்சி இரண்டினதும் நோக்கம்-அடுத்த தடவை யார் ஆட்சியை அமைப்பது, என்பதாகும். ஒரு நியாயமான தீர்வுப்பொதியை வழங்கும் எண்ணம் இரு கட்சிகளுக்குமே கிடையாது.

சுவையான அம்சங்களுடன் சுகமான சிந்தனைக்கு விருந்து படைத்த 'இராமாயணம்' முடிவுறப் போகிறது. அடுத்த தொடர் எதுவாக இருக்கும்! முரசின் தொடர்கள் சிந்தையை தொட்டல்லவோ செல்கின்றன....!

வ. பிர்தௌஸ்- கிண்ணியா-05.

அரசாங்கம், தமிழர் பிரச்சனை என்பது வேறு, புலிகளின் பிரச்சனை என்பது வேறு என்று கூறிவரும் கூற்றானது சிறுபிள்ளைத் தனமான-நகைப்புக்குரிய கூற்றாகும். பேரினவாதிகளின் கருத்திலிருக்கும் இக்கூற்றை ஒரு போதும் நாட்டு மக்கள் ஏற்கப்போவதில்லை. அரசியல் இலாபத்தை கருத்திற் கொண்டு இனப்பிரச்சனைத் தீர்வை இழுத்தடிக்கும் எந்த அரசாங்கமும், எந்த அரசியல் கட்சியும் ஒருபோதும் நிரந்தர அரசியல் தீர்வைக் காண முன்வரப்போவதில்லை. மாறாக புலிகள் மீது விதிக்கப்பட்ட தடை உத்தரவை நீக்கி இதய சுத்தியுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு அவர்களை அழைப்பதுதான் சாலச்சிறந்தது.

வை.எம்.தாஹிர் கரீம், கல்முனை-06.

பாலகுமாரனின் 'இனி என் முறை'யில் இல்லை ஏதும் குறை! டயானாவின் கதைதான் நம்மையும் நெகிழவைத்து கண்ணீரில் கரைக்கிறது. புவனாவுக்கு பாராட்டு.

செல்வி. ஏ. சங்கீதா, கொழும்பு-06.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.**

### தீ கண்டு அஞ்சி...

அன்புள்ள முரசுக்கு,

'ஆயிரம் பூக்கள் மலரட்டும், ஆயிரம் கருத்துக்கள் தோன்றட்டும்' என்று அதிரடி அய்யாத்துரையார் கூறியிருந்தார். அது மிகச் சரியே! இனவாத செய்தி ஊடகத்தினரும், அரச பிரசார சாதனங்களும், ஏன் தமிழ்க் கட்சிகளும்கூட மன உறுதியை தவிடுபொடியாக்கும் விதமாகவே செய்திகளை, கருத்துக்களை வெளியிட்டு வருவதைக் காணலாம். உரிமைத்தீயை அணைத்தால்தான் தாங்கள் எரிந்துபோகாமல் தப்பிப் பிழைக்கலாம் என்பதால், தமிழ்க் கட்சிகளும் சலுகை ஆசைகள் காட்டி மக்களை மயக்க முற்படுகின்றன. இந்நிலையில் மக்களை நம்பிக்கையூட்டி வைத்திருக்க 'முரசு' உட்பட சகல தமிழ்ப் பத்திரிகைகளும் முனைப்பாக பங்காற்ற வேண்டும். அதுவே எம்போன்றோரின் அவா.

என். தனபாலன், மட்டக்களப்பு.

அன்பின் முரசே! 'வாரம் ஒரு நாடு' என்னும் பகுதியினூடாக நாங்கள் அறியாத நாடுகள் பலவற்றை அறிமுகப்படுத்தும் உனது பணி பாராட்டுக்குரியது.

செல்வன் ஏ.சி.சமீம், ஏறாவூர்.

இனிய முரசே! உனது வருகையை எதிர்பார்த்து காத்திருக்கும் பல்லாயிரம் விழிகளில் ஒன்று எனது விழி. நீ தாங்கி வரும் அனைத்து அம்சமும் அமோகம். அதிலும் என்னை மிகவும் கவர்ந்தவை: பல உண்மைகளை வெளிப்படுத்தும் 'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' தொடர், நாரதரின் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்' என்பவை. இவை தவிர சினிமா மோகத்தில் தலைகால் தெரியாத இரசிகர்களுக்கு, சினிமா நடிகர்களது உண்மை நிலையை புட்டுப் புட்டு வைப்பது- மிகவும் அருமை!

செல்வி டி. ஷகிலா, யாழ்ப்பாணம்.

என் இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் சூப்பர். அதிலும் 'காதலர் தின ஸ்பெசல்' சிறுகதைகள் பாராட்டக் கூடியவனவாக அமைந்திருந்தன. 'இளமை என்றால்' சிறுகதை நெஞ்சத்தை அள்ளிச் சென்றது. இதனைத் தந்த முரசுக்கு எனது வாழ்த்துக்கள். 'காதிலை பூ கந்தசாமி'யின் கற்பனை எம்மை சிரிக்க வைப்பதோடு சிந்திக்கவும் வைக்கின்றது.

டில்சான், ஹந்தஸ்ஸ.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

### கட்டிப்பிடிப்பும் கண்டன அறிக்கைகளும்

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இழுபறிக்குள் மூக்கை நீட்டிக்கொண்டு திரிகின்றன தமிழ்க் கட்சிகள். நன்றாகக் கொடுத்திருந்தார் இராஜதந்திரி. இரவு உடையுடன் பெண்களை நிறுத்தி புகைப்படம் எடுக்கிறார்கள். சும்மா வெறுமனே பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுப்பது மட்டும்தான் தமிழ்க் கட்சிகளால் செய்யக்கூடிய பரிகாரம். அதுகூட அப்படி அறிக்கையும் விடாவிட்டால் மக்கள் தங்களை மதியார்கள் என்பதால்தான். அரசுக்கு ஆதரவாக தோள் கொடுத்தபடி, அவ்வப்போது கண்டன அறிக்கை விடுவதும், ஜனாதிபதிக்கு தந்தி கொடுப்பதும் யாரை ஏமாற்ற? அரசு நம்மை அவமதிக்கிறது. இந்த தமிழ்க் கட்சிகளோ நம்மை முட்டாள்களாக நினைக்கின்றன. நாளை தமிழ்ப் பெண்களை நிர்வாணமாக நிறுத்தி புகைப்படம் எடுத்தால்கூட தமிழ்க் கட்சிகள் அரசுடன் கட்டிப் பிடித்து நின்றுகொண்டு கண்டன அறிக்கைவிட்டு நம் கண்ணில் மண்ணைத் தூவத் தயங்கமாட்டார்கள்.

வி. ஜீவராசா, கொழும்பு-05.

### காதில் பஞ்சு

'வடக்கையும், கிழக்கையும் வெட்டிப் பிரிப்போம்!' என்றார் மாண்புமிகு நீதியமைச்சனார். தமிழ்க் கட்சிகள் காதுகளில் பஞ்சு வைத்துக் கொண்டன. "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்பட விடோம்," என்று சமீபத்தில் சூளுரைத்தார் வெளிநாட்டு அமைச்சர் கௌரவ கதிர்காமர். மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் வேண்டும் என்று உதட்டளவில் பேசும் தமிழ்க் கட்சிகள் அப்போதும் காதில் பஞ்சு வைத்துக்கொண்டன. எதிர்க்கட்சியை மட்டும் வாய்க்கு வந்தபடி கிழித்துத் தள்ளுகிறார்கள். நாளை ஐ.தே.க. ஆட்சியைப் பிடித்தால் சுதந்திரக் கட்சியை கிழிப்பார்களாக்கும்! வெத்து வேட்டுக் கட்சிகள்!

இ. பேரின்பநாதன், 'வவுனியா.

### சபாஷ் இராஜகுமாரன்

இனிய முரசே!

அற்புதமான தமிழ் நடையில் எழுதப்பட்டுவந்த 'இராமாயணம்' நிறைவுக் கட்டத்தை அடைந்தபோது, ஆத்ம நண்பர் ஒருவரை பிரிவதுபோன்ற வேதனை ஏற்படுவதை தவிர்க்கமுடியவில்லை. இராஜகுமாரன் மிகச் சிறப்பாக வாரா வாரம் இன்பத் தமிழில் எழுதியிருந்தார். 'மகாபாரதம்' தந்த இராஜகுமாரன், இராமாயணம் மூலமும் தன் புலமையை நன்குணர்த்தி விட்டார். இரு பெரும் இதிகாசங்களை முழுதாக தந்த 'முரசு'க்கும் பாராட்டுக்கள். இராஜகுமாரனின் அடுத்த படைப்பும் அற்புதமாக அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

ஆர். பாலசுந்தரம், திருக்கோணமலை.



படிப்பகம்

www.padippakam.com

# "தேசிய அபிலாசைகளுக்கு எதிரான சூழ்ச்சி!"

# தீர்வுப் பொதி பற்றி புலிகள் தெரிவிப்பு

"அரசாங்கத்தின் தீர்வுப்பொதி என்பது தமிழரின் தேசிய அபிலாசைகளுக்கு எதிரான சூழ்ச்சித்திட்டம்!" என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் இயக்க உத்தியோக பூர்வ வெளியீடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் சமீபத்திய வெளியீட்டில் மேற் கண்ட கருத்து வெளியாகியுள்ளது.

### நாலு வருடத்தில்

17 வருடகாலம் நடைபெற்ற ஐக்கிய தேசிய ஆட்சிக் காலத்தைவிட ஜனாதிபதி சந்திரிக்காவின் நான்கு வருட ஆட்சிக் காலமே கொடுமையானது என்றும் புலிகள் விபரித்துள்ளனர். ஐ.தே.கட்சி 17 வருடகாலத்தில் செய்த கொடுமைகளை சந்திரிக்கா அரசாங்கம் நான்கு வருடத்தில் செய்துள்ளது என்று புலிகள் கூறியுள்ளனர்.

மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "உருப்படியான தீர்வுத்திட்டம் ஒன்றை தமிழ் மக்கள் எதிபார்த்து நிற்க, சந்திரிக்கா அம்மையார் அவர்களோ தமிழரின் தேசிய அபிலாசைகளைக் கொன்று புதைக்கும் சூழ்ச்சித் திட்டத்தைக் கொண்ட நிர்வாக முறைமைகளை, அரசியல் தீர்வுத்திட்டம் என்று பெயர் சூட்டி வெளியிட்டுள்ளார்.

சிங்கள, தமிழ் இனப்பிரச்சனையை கூர்மையடையச் செய்தது ஐ.தே.கட்சி அரசாங்கம்தான் என்று சுட்டுவிரல் நீட்டிக் கொண்டு, தனது ஆட்சியில் இரத்த ஆறு ஓடச் செய்துவிட்டார். இனப்பிரச்சனையை இடியப்பச் சிக்கலாக்கியுள்ளார்.

### தவறான அழைப்பு

முழுமையான முறையில் ஒரு போரை நடாத்திக் கொண்டிருக்கும் சந்திரிக்கா அம்மையாரை இராணுவவாதியாக நினைக்காமல், சமாதானத்திற்காகப் பாடுபடும் ஒரு ஆட்சியாளர் என்றே மேற்குலக நாடுகள் தவறாக அழைக்கின்றன.

சந்திரிக்கா அம்மையாரின் சாதுரியச் செயற்பாடுகளும் பேச்சுக்களும் அத்தகையதொரு தவறான புரிதலை சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இனப்பிரச்சனை என்ற ஒன்றே இந்த நாட்டில் இல்லை என்று கூறிய ஐ.தே.கட்சி அரசாங்கத்தின் கருத்திற்கு மாறாக, நாட்டில் இனப்பிரச்சனை உண்டு என்றும், தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப் பட்டுள்ளன என்றும் சந்திரிக்கா அம்மையார் அடிக்கடி கருத்து வெளியிடுவார்.

17 வருடகாலமாக ஐ.தே.கட்சி ஆட்சியில் வெளியிடப்படாத ஒரு அரசியல் தீர்வுத்திட்டத்தை தனது மூன்று வருட ஆட்சிக்காலத்தில் வெளியிட்டு விட்டதாகக் கூறுவார்.

யாழ் நூலகத்தை பொலிசாரே எரித்தனர். ஐ.தே.கட்சி அரசாங்கம்தான் எரிக்க உத்தரவிட்டது என்றும் குற்றம் சாட்டுவார்.

ஒரு யதார்த்தபூர்வமான ஆட்சியாளராக சந்திரிக்கா அம்மையாரை சர்வதேசம் கருதியதற்கு மேற்குறித்த வகையில் அவரது வார்த்தைகளும், செயல்களும் முக்கிய காரணிகளாகும்.

எனினும் நீதிக்காக குரல் கொடுப்பதாகக் கூறிக்கொண்டு ஐ.தே.கட்சி அரசாங்கத்தைவிட மிகக் கடுமையான முறையில் செயற்பட்டார்.

1981இல் அழிக்கப்பட்ட யாழ்நூலக எரிப்பை கண்டனம் செய்தவர், 1995இல் யாழ்ப்பாணம்மீது குண்டுமழை பொழிந்து மாபெரும் இடம்பெயர்வுக்குக் காரணமாக இருந்தார்.

### தீர்க்கவில்லை

இனப்பிரச்சனை உண்டு என்று கூறியவர் அதைத் தீர்த்து வைப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை.

வாழ்வியல் ரீதியாக தமிழ் மக்கள் பெரும் துன்பத்தை எதிர்கொண்டபோதும் போர் முனையிலும் அரசியல் அரங்கிலும் சிறீலங்கா அரசுக்கு தற்போது பாதகமான நிலையே தோன்றத் தொடங்கியுள்ளது.

படையினர் நிலைகொண்டுள்ள பகுதிகளில் நடைபெறும் பாலியல் வல்லுறவுகள், கைதாகி காணாமல் போதல்கள், சோதனைச் சாவடி வாழ்க்கை போன்றவை அரசாங்கத்தின் உண்மை முகத்தை சர்வதேசத்திற்கு உணர்த்தி வருகின்றன." இவ்வாறு விடுதலைப் புலிகள் பத்திரிகை தெரிவித்துள்ளது.

### சர்வதேசப் பிரசாரம்

சர்வதேசப் பிரசாரத்தில் புலிகள் இயக்க கிளைகளும், புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்களும் மறுபடியும் தீவிரமாகக் குதித்துள்ளன.

தலைநகரில் தமிழ் மக்கள் துன்புறுத்தப் படுவதாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலர் அனுதாபம் கொள்ள ஆரம்பித்துள்ளனர். தலைநகரில் தங்கு விடுதிகளில் இருந்து தமிழர்கள் வெளியேற்றப்பட்ட நடவடிக்கை போன்றவை வெளிநாட்டு இராஜதந்திரிகளின் கவனத்தைக் கவர்ந்துள்ளன.

மேற்படி சம்பவங்களை தமிழ்க் கட்சிகள் மனித உரிமை மீறல் பிரச்சனையாக முன்னெடுக்காமல் இருந்தது குறித்து வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவர் அதிருப்தியும் தெரிவித்திருந்தார்.

எனினும் வெளிநாடுகளில் உள்ள புலிகள் இயக்கத்தினரும், புலிகள் இயக்க ஆதரவாளர்களும் மேற்படி சம்பவங்களை மனித உரிமை அமைப்புக்களதும், சர்வதேச இராஜதந்திரிகளினதும் கவனத்திற்குக் கொண்டு செல்லத் தொடங்கியுள்ளனர்.

புகைப்படங்கள், வீடியோப் பிரதிகள், ஆங்கில வெளியீடுகள் மூலம் புலிகளின் பிரசாரங்கள் தீவிரம் பெற்று வருகின்றன.

இதே சமயம் அரசும் தனது தூதரகங்கள் ஊடாக வெளிநாடுகளில் புலிகளுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கி விட்டுள்ளது. ■

# மலையக இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில்?

## சந்தேகப் பார்வைகளால் அதிருப்தி

## குண்டு வெடிப்புக்கள் தொடருமாம்

மலையக தமிழ் இளைஞர்கள் புலிகள் இயக்கத்தில் இணைந்து வருவதாக படை வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இதனையடுத்து மலையகப் பகுதிகளில் தேடுதல் மற்றும் கைது நடவடிக்கைகள் அதிகமாகி வருகின்றன.

மலையகத்தில் குண்டு வெடிப்புக்கள் இடம் பெறுவதற்கு முன்னரே தமிழ் இளைஞர்கள் அங்கு சந்தேகக் கண்கொண்டே நோக்கப்பட்டனர். கைதுகளும் இடம்பெற்றன.

இது தொடர்பாக பாராளுமன்றத்தில் மலையக பா.உக்கள் பல தடவை குரல் கொடுத்தனர். இந்த நடவடிக்கைகளால் மலையகமும் வடக்கு-கிழக்குப் போல மாறிவிடும் என்றும் கூறிவந்தனர். அதனை யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆனால் இப்போது மலையக கட்சிகள்மீதும் சந்தேகப் படத் தொடங்கியுள்ளனர் என்று மலையக அரசியல் பிரமுகர் ஒருவர் முரசுக்கு தெரிவித்தார்.

மலையகம் பிரதானமான அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் தோட்டத் தொழிற்துறை சார்ந்த பிரதேசம் என்பதால், அங்கு புலிகளின் தாக்குதல்கள் தொடரும் என்பது எதிர்பார்க்கவேண்டிய ஒன்றேயாகும். வடக்கு-கிழக்குக்கு வெளியே கொழும்பில் மட்டுமல்லாமல், தமிழ் மக்கள் அதிகம் வசிக்காத பகுதிகளில்கூட புலிகளின் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. மலையகத்தில் நடைபெறும் தாக்குதல்களை மட்டும் இனவாதக் கண்ணோட்டத்துடன் நோக்குவதும், முடிச்சுப் போடுவதும் நேர்மாறான விளைவுகளையே ஏற்படுத்தும் என்றும் அந்தப் பிரமுகர் கவலை தெரிவித்தார்.

### மறைவிடம்?

மலையகத்தில் புலிகளின் இரகசிய மறைவிடம் ஒன்று இருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் பலத்த சந்தேகம் கொண்டுள்ளனர்.

தலவாக்கல நகரப் பகுதியில் 19.02.98 அன்று அதிகாலை இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாக 'புலிகளின் குரல்' வானொலியில் அன்று காலை 8 மணிச் செய்தியிலேயே தெரிவிக்கப்பட்டுவிட்டது.

குண்டு வெடிப்பை அடுத்து அங்கிருந்து தொலைத் தொடர்பு சாதனம் மூலம் வன்னிக்கு தகவல் அனுப்பப்பட்டிருக்காவிட்டால் அத்தகவல் உடனடியாக எட்டியிருக்க வாய்ப்பில்லை என்று பாதுகாப்பு தரப்பினர் சந்தேகிக்கின்றனர். ■

# இந்தியாவில் ஆட்சி மாற்றம்!

## தமிழ்நாட்டில் காங்கிரஸ் வீழ்ச்சி

இந்தியாவின் பொதுத் தேர்தலில் எவர் வருவாரோ என்ற எதிர்பார்ப்புக்கு ஓரளவு பதில் கிடைத்தாகிவிட்டது. பாரதிய ஜனதாவும், காங்கிரஸ் கட்சியும்தான் ஆட்சி அமைக்க போட்டி போடப்போகின்றன. அமையும் ஆட்சியைக் கவிழ்க்கவும் காக்கவும் இவற்றுக்கிடையேதான் பலப்பரீட்சை தொடரப்போகிறது.

நிலையான ஆட்சிக்குரிய உத்தரவாதம் இம்முறையும் ஏற்படவில்லை. எனினும் பாரதிய ஜனதா கட்சியின் செல்வாக்கு உயர்ந்து வருகிறது. மதசார்பற்ற மாநிலம் என்று கருதப்பட்டுவந்த தமிழ்நாட்டிலும் பாரதிய ஜனதா தன் செல்வாக்கை நிலை நாட்டிக் கொண்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சோனியா வரவால் காங்கிரஸ் காப்பாற்றப்பட்டுள்ளது. எனினும் இழந்த வாக்கு வங்கிகளில் பாதியைக்கூட மறுபடி சோனியாவால் மீட்க முடியவில்லை. மீட்க முடிந்திருந்தால் தனியாக ஆட்சி அமைக்க முடியாவிட்டாலும், தனிப்பெரும் கட்சி என்ற ஸ்தானத்தையாவது தக்கவைத்திருக்கலாம்.

தமிழ் நாட்டில் அ.தி.மு.க. கூட்டணி தி.மு.க.கூட்டணிக்கு பலத்த அடியைக் கொடுத்துள்ளது. கோவைக் குண்டு வெடிப்பும் அ.தி.மு.க.- பாரதிய ஜனதா கூட்டணிக்கு சாதகமான அம்சம் என்றாலும்கூட, அதற்கு முன்னரே வெற்றி வாய்ப்பு அதிகம் இருந்தது என்பதே உண்மை.

ஜெயலலிதாமீது கோபம் காரணமாக உண்மை நிலவரத்தை மதிப்பிடத்தவறிய சில தமிழகப் பத்திரிகையாளர்கள்தான் முடிவுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

புலிகளுக்கு ஆதரவானவர் என்று கருதப்படும் வை.கோ. மாபெரும் வெற்றி பெற்றுள்ளார். "இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு தமிழீழமே தீர்வு" என்று அவர் தனது பிரசாரங்களிலும் துணிந்து கூறிவந்தார். அதே போன்ற நிலைப்பாடு உடைய பாட்டாளி மக்கள் கட்சியும் வெற்றி பெற்றுள்ளது.

அதேசமயம் ராஜீவ் கொலையை வைத்து இம்முறையும் அனுதாபம் தேட முற்பட்ட காங்கிரஸ் கட்சி தமிழ் நாட்டில் படுதோல்வி அடைந்துள்ளது. சோனியாவே பிரசாரத்திற்கு சென்றும்கூட தமிழ் நாட்டில் காங்கிரஸ் மரண அடி வாங்கியிருக்கிறது. ■

# காணாமல்போனார் மகள்!

## ஏங்கியே இறந்தார் தாய்!

யாழ் குடாநாட்டில் கைதாகி காணாமல் போனவர் ஆறுமுகம் சிவாஜினி. இவர் கொழும்புத்துறையைச் சேர்ந்தவர். துரையப்பா மகாவித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் பயின்றுகொண்டிருந்தவர். 1996ம் ஆண்டு சந்தேகத்தின் பேரில் கைதாகி காணாமல் போனார்.

அதனால் முகாம் முகாமாக ஏறி இறங்கி தன் மகளின் கதி அறிய முயன்றார் தாயாரான தவமணி (50). இன்று வருவார் நாளை வருவார் என்று எதிர்பார்த்து ஏமாந்தார். ஒழுங்காக சாப்பிடாமல் நோயாளியாகி படுக்கையில் வீழ்ந்தார்.

"ஜனாதிபதி கமிஷன் போட்டு தேடித் தருவாராம்" என்று தாயாரிடம் கூறப்பட்டது. அதனால் சற்று குணமாகி வந்தார். கமிஷன் போடுவதாகக் கூறியும் இரண்டு மாதமான நிலையில் அந்த நம்பிக்கையும் பொய்த்தது.

இறுதியாக கடும் நோய்வாய்ப்பட்டு அவர் மரணமானார். இவ்வாறு பல தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளது பிரிவால் நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ளனர். ■

# வன்னியில் காடுகள் அழிப்பு

வன்னிப் பகுதியில் நிலைகொண்டுள்ள 'ஜயசிக்குறுய்' படையினர் தமது பாதுகாப்புக்காக காடுகளை அழித்து வருவதாக கூறப்படுகிறது.

தமது நிலைகளில் இருந்து இருமருங்கும் 500 யார் தூரம்வரை உள்ள காடுகளை அழிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

புலிகளின் அணிகள் பதுங்கி இருந்து தாக்கலாம் என்று கருதியே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், காடுகள் அழிந்து போவதால் வடக்கின் கால நிலைகள் மட்டுமல்லாமல், நாடு முழுவதினதும் கால நிலைகள் மிக மோசமாக பாதிக்கப்படும் என்று இயற்கைவியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தென்னிலங்கையில் இவ்வாறான இயற்கை வள அழிப்புக்கள் நடைபெறுமானால் எத்தனையோ அமைப்புக்களும் மதப் பிரமுகர்களும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருப்பர். வடக்கில் என்பதால் வாளாவிருக்கின்றனர் என்றும் அவர்கள் கூறியுள்ளனர். ■

# அதிகாரியைக் காப்பாற்றிய வீரர்

## கடல் நடுவே நடந்த சம்பவம்

கடற்படை அதிகாரி ஒருவர் தலையிலும் உடலிலும் காயங்களுடன் நீரில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது, தானும் காயங்களுடன் அவதிக்குள்ளான கோப்ரல் ஒருவர் அதிகாரியைக் காப்பாற்றச் சென்றுள்ளார். தன்னை விட்டுவிட்டு அவருடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு அதிகாரி கோப்ரலைக் கேட்டும், கோப்ரல் அதிகாரியை அமிழ்ந்து விடாமல் காப்பாற்றியிருக்கிறார். இவர்கள் இருவரும் பின்னர் காப்பாற்றப்பட்டு இராணுவ ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

குணமான அதிகாரி பின்னர் அந்த இளம் கோப்ரலை அதே மருத்துவமனையில் தேடிக்கண்டுபிடித்து தனது நன்றியறிதலைக் காட்டிக் கொண்டார். அவரை அணைத்து கண்ணீர் சிந்தினார். சமீபத்தில் பருத்தித்துறை கடலில் புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னரே மேற்படி உருக்கமான சம்பவம் நடந்துள்ளது.

இவ்வாறு எத்தனையோ பேர் படைகளில் பல வீரச் செயல்களைச் செய்திருக்கிறார்கள். இவ்வாறு சிறு பதவிகளிலுள்ளவர்களின் செயல்கள் செய்தித் தாள்களிலோ வானொலி, தொலைக்காட்சிகளிலோ இடம் பிடிப்பதில்லை. அதிகாரி அந்தஸ்தில் உள்ளவர்களின் 'சிறு சம்பவமும் பெரிதாக விளம்பரப்படுத்தப்படுகின்றன என்று 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது. ■

# குரல்கொடுக்காத தி.மு.க.

## வை.கோ. சாடல்

தமிழ்நாட்டின் தேர்தல் முடிவுகள்பற்றி பி.பி.சி. தமிழோசை 3.3.98 காலை 6.30க்கு ஒரு சிறப்பு நிகழ்ச்சியை ஒலிபரப்பியது.

சிவகாசித் தொகுதியில் அமோக வெற்றிபெற்ற ம.தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமியை தமிழோசையைச் சேர்ந்த ஆனந்தி கண்ட பேட்டி நேரடியாகவே ஒலிபரப்பப்பட்டது.

தமிழ்நாட்டில் தி.மு.க. படுதோல்வி கண்டமைக்கான பல காரணங்களைக் குறிப்பிட்ட வை.கோ. "ஈழத்தில் தமிழ் மக்கள் விடும் இரத்தக் கண்ணீரைத் துடைப்பதற்கு கருணாநிதி எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கத்தவறியமையும் தி.மு.க. தோல்விக்கு ஒரு காரணமாகும்!" என்றார். ■

# சிறுத்தை அணி தாக்குதல்

## கடற்படை முறியடித்தது

கிளாலியில் உள்ள கடற்படை இறங்கு தளம்மீது 25.02.98 அன்று இரவு 11.50 மணியளவில் கடற்புலிகளின் சிறுத்தை அணியினர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர். எனினும் எதிர்பார்க்கப்பட்டளவுக்கு தாக்குதல் அமையவில்லை. பத்துக்கு மேற்பட்ட படகுகளில் சென்ற சிறுத்தை அணியினர் தாக்குதலைத் தொடுத்தனர். கடற்புலிப் படகுகள் வருவதை முதலில் அவதானித்துவிட்ட கடற்படையினர் உஷாராகிவிட்டனர். அதனால் கடும் மோதல் மூண்டது.

சிறுத்தை அணியில் மூவர் பலியாகினர். இறங்குதுறையில் நிறுத்தப்பட்டிருந்த வோட்டர் ஜெட் படகு ஒன்று சிறுத்தை அணித்தாக்குதலால் பாரிய சேதம் அடைந்தது. மற்றும் இரண்டு படகுகளும் சேதத்திற்கு உள்ளாகின. கடற்படை தரப்பில் மூன்றுபேர் காயமடைந்தனர்.

மோதல் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் இறங்குதுறையில் இருந்த களஞ்சிய அறை ஒன்றும் தம்மால் அழிக்கப்பட்டதாக புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது. அதுபற்றி அறியமுடியவில்லை. ■

# புலிகள் மரண தண்டனை!

## உறவினர் அதிருப்தி

மட்டக்களப்பில் புலி இயக்கத்தினரின் வசமுள்ள ஈச்சந்தீவுச் சந்தியில் வைத்து தாமோதரம் பகீரதன் (25) என்ற இளைஞன் புலி இயக்கத்தின் பெண் போராளிகளால் பொது மக்கள் முன்னிலையில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அப்பகுதி வாசிகள் தெரிவிக்கிறார்கள். இச்சம்பவம் பெப்ரவரி 21ம் திகதியன்று இடம் பெற்றது.

பல்வேறு குற்றச் சாட்டுக்களின் பேரில் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதம் 17ம் திகதி இந்த இளைஞர் புலி இயக்கத்தினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப் பட்டிருந்தார்.

மேற்படி இளைஞருக்குத் தாம் பகிரங்கமாக மரண தண்டனை வழங்கப் போவதைப் புலி இயக்கத்தினர் சுற்றியுள்ள பல கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கு அறிவித்திருந்தனர். கொல்லப்பட்ட இளைஞர் மட்டக்களப்பு-மகிழ வெட்டுவானைச் சேர்ந்தவர்.

ஆறு குற்றச் சாட்டுக்கள் கொண்ட குற்றப் பத்திரிகை வாசிக்கப்பட்ட பின்னரே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அவரது உறவினர்கள் தெரிவிக்கிறார்கள். பகீரதனை விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக புலி இயக்கத்தின் உள்ளூர் தலைமை (தாத்தா) கூறிய மறுநாளே அவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும், அவர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் தனிப்பட்ட பிரச்சனையின் காரணமாக வேண்டுமென்றே சுமத்தப்பட்டவை என்றும் இது விடயமாகத் தாங்கள் புலிகளின் மேலிடத்திற்குத் தொடர்பு கொண்டுள்ளதாகவும் உறவினர்கள் கூறியுள்ளார்கள்.

பகீரதன் கொல்லப்படுவதற்கு இரு தினங்களிற்கு முன்னர் அவர் ஆசிரியராகத் தெரிவாகியிருக்கிறார் என்று அறிவிக்கப் பட்டது. முகாமையாளராகத் தெரிவாவதற்கும் முதலாமிடத்தில் அவர் தகுதியுள்ளவராக இருந்தார். ■

# பொலிசாருக்கு புலிகள் இலஞ்சம்

## ஜனாதிபதி கூறியதாக செய்தி

"புலிகள் இயக்கத்தினர் பொலிசாருக்கு 50 இலட்சம் ரூபாவரை இலஞ்சமாகக் கொடுத்துத் தங்கள் செயற்திட்டங்களை சுலபமாக முடித்துவிடுகின்றனர்," என்று தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, தன்னைக் காணவந்த ஆளும் கட்சியைச் சேர்ந்த 16 பாராளுமன்ற உறுப்பினர்களடங்கிய குழுவினரிடம் தெரிவித்ததாகக் கூறப் படுகிறது.

கடந்த பெப்ரவரி மாதம் 24ம் திகதியன்று அலரிமாளிகையில் வைத்தே இத்தகவலை ஜனாதிபதி வெளியிட்டார்.

பாராளுமன்றப் பிரதிநிதிகள் குழுவினைக் காண்பதற்கு முன்னர், ஜனாதிபதி, பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட ஒரு கூட்டத்தில் பங்கு பற்றியபோதே, பொலிசாருக்கு புலிகள் இலஞ்சம் கொடுப்பது பற்றிய தகவல் தனக்குக் கூறப்பட்டதாக அவர் எம்.பிக்களிடம் தெரிவித்துள்ளார்.

விலைவாசி ஏற்றம், இலஞ்ச ஊழல், மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சனைகள் தொடர்பாகவே மேற்படி 16 எம்.பி.க்களும் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான பிரத்தியேக ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

பெப்ரவரி 24ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு இவர்களைச் சந்திப்பதற்கு ஒப்புதல் அளித்த ஜனாதிபதி, அன்றிரவு 9.00 மணியளவிலேயே- சலிப்புற்ற எம்.பிக்கள் வெளியேற ஆயத்தமானபோது- வந்து சேர்ந்தாராம்.

தனது தாமதத்துக்குக் காரணம், பொலிசார் மீது சுமத்தப்பட்ட இலஞ்சக் குற்றச்சாட்டு தொடர்பான கூட்டமே, என்று எம்.பிக்களிடம் ஜனாதிபதி விளக்கம் அளித்ததாகக் கூறப்படுகிறது. இத்தகவலை 'சண்டே லீடர்' வெளியிட்டுள்ளது. ■

# சர்வதேசப் பெண்கள் தின நிகழ்ச்சிகள்!

மார்ச் மாதம் 08ம் திகதியன்று சர்வதேசப் பெண்கள் தின நிகழ்ச்சிகள் நாடு பூராவிலுமுள்ள பல உள்நாட்டு, வெளிநாட்டு உதவி அமைப்புக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளன.

ஊர்வலங்கள், கருத்தரங்குகள், புகைப்பட- ஓவிய சுவரொட்டிக் கண்காட்சி, நாடகம், நூல் வெளியீடு, கதை- கட்டுரைப் போட்டி, வீதி நாடகம், கறுப்புக் கொடி எரிப்பு என்பனவற்றுடன் பல்வேறுபட்ட கலை கலாசார நிகழ்ச்சிகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

நுவரெலிய சிங்கள- தமிழ் கிராமியப் பெண்கள் சம்மேளனம், பதுளை ஊவா சமூக அபிவிருத்தி நிலையம், ஜே.வி.பி. (ஜனதா விமுக்திப் பெரமுன-மக்கள் விடுதலை முன்னணி), ஜூலை வேலை நிறுத்தப் போராளிகள் கூட்டமைப்பு, பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம், உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனம், பெண்கள் அபிவிருத்தி நிலையம், பாதிக்கப்பட்ட பெண்கள் நிறுவனம், சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், பெண்கள் நிறுவனமும் சட்ட மற்றும் சமூக நிறுவனமும், அரச சார்பற்ற பெண்கள் நிறுவனங்களின் கூட்டு போன்றனவும் இன்னும் பல நிறுவனங்களும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளன. ■

# 10 கோடி ரூபா செலவில் தொழில் நுட்பக் கல்லூரி

"சுமார் 10 கோடி ரூபா செலவில் பொலன்னறுவையில் தொழில் நுட்பக் கல்லூரியொன்று நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது. 1000 மாணவர்கள் கல்வி கற்கக் கூடியதான இக்கல்லூரியில் 105 பாடங்கள் போதிக்கப்படும்.

பல வறிய மாணவர்கள் உயர் கல்வி பெறுவதில் எதிர்நோக்கும் தடைகளை நீக்கும் பொருட்டு தொழில் நுட்பக் கல்லூரிகள் அமைக்கப்படுகின்றன" என்று அக் கல்லூரியைத் திறந்து வைத்து உரையாற்றிய தொழிற் பயிற்சி, கிராமியக் கைத்தொழில் அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

பெப்ரவரி 23ம் திகதி தொழில் நுட்பக் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது. அவ்வை பவத்தில் பிரதியமைச்சர் சந்ரசிறி கஜதீர, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோரும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர். ■



படிப்பகம்

www.padippakam.com

# அகதிகளை விரட்டத் திட்டம்
## எங்கு போவது? என்ன செய்வது?

வவுனியாவிலுள்ள தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும் 271 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 1089 பேர் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

இம்முகாம் வவுனியா விமான படைத் தளத்துக்கு அருகில் இருப்பதனால், இங்கு வாழ்ந்து வருபவர்கள் அனைவரையும் உடனடியாக வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எங்கே போவது என்று தெரியாமல் இவர்கள் தடுமாறிக் கொண்டிருக்கிறார்கள்.

கிளிநொச்சியிலிருந்து 246 குடும்பங்களும், முல்லைத்தீவிலிருந்து வந்த 18 குடும்பங்களும் வவுனியாவிலிருந்து 7 குடும்பங்களும் இதில் அடங்குவர். இவர்களுக்கு- குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும் அத்தனை பேருக்கும் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகிறது. சமைத்த உணவு வேண்டாம் என்று கூறுவோருக்கு- குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும்- ஆக 5 பேருக்கு மட்டுமே போதுமான உலர் உணவுப் பண்டங்கள் வழங்கப்படுகின்றன. தவிர இவர்கள் வாழ்க்கை நடத்துவதற்கும் இம்முகாமில் போதுமான இடவசதியோ மலசல கூடங்களோ கிடையாது. ஒரு குடும்பத்துக்கு ஆக 15x15 அடி பரப்பளவுள்ள இடமே வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த அகதிகளை முகாமிலிருந்து வெளியேறுமாறு கூறப்பட்டுள்ளதால் அவர்கள் மீண்டும் வேறு அகதி முகாம்களில் அடைபட்டிருக்க விரும்பவில்லை.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் வசிப்பதற்கேற்ற காணியும், தற்காலிக உறைவிடம் ஒன்றினை அமைக்க ஏதுவான பணமும் தந்தால் தாங்கள் போகத் தயார் என்று அதிகாரிகளிடம் தெரிவித்தபோது, அதற்குச் சாதகமான பதில் எதுவும் தரப்படவில்லையாம்.

இந்த முகாமிலுள்ள அகதிகளின் சார்பாக நம்து சிறப்பு நிருபரிடம் கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த கே. வரதராஜனும் உருத்திரபுரத்தைச் சேர்ந்த வி. இரத்னகிருஷ்ணனும் "தங்களுடைய இரண்டும் கெட்டான் நிலையைத் தெரிவித்தனர்.

# தொடரும் வெற்றிடம்! காரணம் யார்?

(கண்டி நிருபர்)

நாடு எங்கிலும் உள்ள தமிழ்மொழி மூலப்பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டு வரும் இவ்வேளையில் மத்திய மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் பாடசாலைகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்கள் மாத்திரம் இன்னும் நிரப்பப்படாதது குறித்து அதிருப்தி தெரிவிக்கப்படுகின்றது.

268 வெற்றிடங்கள் பற்றிய பட்டியலை கல்விச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி, பல மாதங்களாகியும் இந்த நியமனங்கள் வழங்குவதில் அசிரத்தையாக இருப்பது 'மாகாண கல்வி அமைச்சா? அல்லது கல்வி, உயர் கல்வி அமைச்சா?' என பாதிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களும், பாடசாலை அதிபர்களும் அங்கலாய்க்கின்றனர். ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக நீண்ட காலமாக கஷ்டப் பிரதேசத்தில் பணிபுரியும் முஸ்லிம் ஆசிரியர்கள் இடமாற்றம் கோரி வருடங்கள் பலவாகியும் அதனைப் பெற முடியாத நிலைக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர். ஆசிரியர் தட்டுப்பாடு காரணமாக கல்ஹின்னை அக்குறணை, குண்டசாலை, உடுநுவரை பிரதேச பாடசாலைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

# நிரபராதிகளுக்கு நீதி மறுப்பு!
## ஆசிரியர்களுக்கு வந்த சோதனை

யாழ்ப்பாணம் வடமராட்சியில் இருந்து நான்கு நேர்மையான அரச ஊழியர்களுக்கு நடந்த அநீதியைப் பாருங்கள். இவர்களில் இருவர் பாடசாலை அதிபர்கள். ஒருவர் உதவி அதிபர். நாலாமவர் கணக்காளர். இவர்கள் நால்வரும் வடமராட்சி இராணுவ அத்தியட்சகரின் உத்தரவின்பேரில் 25.07.97 வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை இராணுவ முகாமிற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு 10 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டார்கள்.

பின்பு அங்கிருந்து கொழும்பிற்கு அனுப்பப்பட்டார்கள். அங்கு நாலாம் மாடியில் 3 வாரம் தடுத்து வைத்து விசாரணை செய்யப்பட்டு பின்பு 24.08.97 களுத்துறை சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்.

நவம்பர் மாதம் 26ம் திகதி நிரபராதிகள் என்று நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஆனால், வடமராட்சியில் இருந்து காங்கேசன்துறை, கொழும்பு, களுத்துறை, எனக் கொண்டு சென்ற சிறி லங்கா இராணுவம் அவர்களை அவர்களது இருப்பிடங்களுக்கு கொண்டு செல்ல எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனினும் சம்பந்தப்பட்ட நான்கு நிரபராதிகளும் பல சிரமத்தின் மத்தியில் தமது சொந்தச் செலவில் 31.12.97 விமானமூலம் யாழ் வடமராட்சிக்கு போய்ச் சேர்ந்தனர்.

போனவர்களுக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

வடமராட்சியில் கடமையாற்றிய மூன்று ஆசிரியர்களும் இராணுவத்தினரின் தலையீட்டால் வலிகாமப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

முன்னர் அதிபர்களாக இருந்த இருவருக்கும் புதிய பாடசாலைகளில் அப்பதவிகள் வழங்கப்படவும் இல்லை.

வழக்கில் நீதிவழங்குவது யார்? நீதிமன்றமா? இராணுவத்தினரா? என்று ஆசிரியர்கள் அங்கலாய்க்கின்றனர்.

# பொலிசார் மறுப்பு

மலைநாட்டு பகுதியிலிருந்து கொழும்புக்கு வேலைக்குச் செல்லும் இளைஞர், யுவதிகளை இலங்கை தேசிய அடையாள அட்டை இருந்தும் கைது செய்கிறார்கள்.

பொலிஸ் அத்தாட்சி பெறுவதற்காக இங்குள்ள கிராம சேவகரிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் இருந்து கடிதம் பெற்று அதை பொலிசில் ஒப்படைத்தும், பொலிசார் அத்தாட்சி கொடுக்க மறுக்கிறார்கள்.

இப்பகுதியில் இருக்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இது குறித்து தகுந்த நடவடிக்கை எடுப்பார்களா? இல்லாவிடின் மலையக இளைஞர்களின் எதிர்கால நிலைமை என்னாவது? தலைநகரப் பக்கமே வராதே என்கிறார்களா?

என். மரியநாயகம், கேஸ்வத்தை, ஹுணுகலை.

# பேரூந்தில் தமிழ் மறுப்பு

அட்டன், கம்பளை, நாவலப்பிட்டிய, வலப்பனை, கொத்மலை, ஹங்குரான்கெத்த, நுவரெலியா ஆகிய பேரூந்து டிப்போக்கள் ஒன்றிணைந்து 'நுவரெலியா பஸ் கம்பனி' என்ற பெயரில் தற்போது செயற்படுகின்றது. மேற்படி டிப்போக்களிலுள்ள பேரூந்துகளில் 'நுவரெலியா பஸ் சமாகம' என்று தனிச் சிங்களத்தில் மாத்திரம் எழுதப்பட்டுள்ளது. பெரும்பாலும் தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற பகுதிகளில் சேவையிலீடுபடும் இப்பேரூந்துகளில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகும்.

எனவே 'நுவரெலியா பேரூந்து நிறுவனம்' என்று மேற்படி பேரூந்து வண்டிகளில் தமிழில் இடம்பெற செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கையெடுப்பார்களா?

சோ. ஸ்ரீதரன், பொகவந்தலாவ.

# தேர்தலுக்கு தயார்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாண சபையின் ஐந்தாண்டு கால ஆட்சி முடிவடைந்து வருகிறது. அதனால் அடுத்து வரவுள்ளதாகக் கருதப்படும் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட ஐ.தே.கட்சி தயாராகிவருகிறது. இப்பொழு திருந்தே பல தொகுதிகளில் கட்சியை புனரமைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது.

அண்மையில் உடுநுவரைத் தொகுதியில் கட்சிக்கு அங்கத்தவர்களைத் திரட்டும் முயற்சி பெரும் வெற்றி அளித்ததாக அப்பகுதி எம்.பி. திரு லக்கி ஜயவர்தன 'முரசு' நிருபரிடம் தெரிவித்தார்.

இதேபோன்று ஹரிஸ்பத்துவ, கலகெதர ஆகிய தொகுதிகளிலும் இவ்வாறான முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பொது நலன் கருதி பல சேவைகளுக்கு முன்னோடியாக அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் இடம்பெற்று வருகின்றன. மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சியான பொ.ஜ.ஐ.முன்னணி இது தொடர்பாக எத்தகைய ஆர்வத்தையும் காட்டாமல் இருப்பதாக அக்கட்சியின் பிரமுகர் ஒருவர் 'முரசு'க்குத் தெரிவித்தார். 17.5.93ல் மத்திய மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச செயலக ஊழியர் கைது!

மட்டக்களப்பில் வாகரைப் பிரதேசம் பாதுகாப்புப் படையினரின் கண்காணிப்புக்கு அப்பாற்பட்ட பகுதியாகும். அதனால் அப்பகுதிக்குச் சென்று வருவோர் மீது பாதுகாப்புத் தரப்பினர் இயல்புக்கு மாறான சந்தேகம் கொண்டுள்ளனர்.

வாகரைப் பிரதேச செயலகத்தில் இலிகிதராகக் கடமையாற்றும் சா.அறிவழகன் என்பவர் ஓட்டமாவடி-தியாவட்டவான் சோதனைச் சாவடியில் வைத்துக் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இரகசியமாகக் கிடைத்த தகவலை வைத்தே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இதனிடையே சென்ற 16.02.98 அன்று வாழைச்சேனை சுற்றி வளைப்பின்போது கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சுபீட்சத் (சமுர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளர் மா.பராசுராமன் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்று பிரதேச செயலாளர் கூறினார். தன்னிடம் முன்னர் அவர் விடுவிக்கப்பட்டார் என்று கூறப்பட்ட போதிலும் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்று கைது செய்யப்பட்டவரின் தாய் தன்னிடம் முறையிட்டுள்ளதாகப் பிரதேச செயலாளர் திரு.கே.கதிர்காமநாதன் மேலும் தெரிவித்துள்ளார்.

# வசதிகளின்றி வைத்தியர்கள் அவஸ்தை!

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்புப் பொது வைத்தியசாலையில் கடமை புரிவதற்காக வந்துள்ள வெளி மாவட்டத்தைச் சேர்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் வைத்தியர்களான 10 பேருக்கும் மிக மோசமான நிலையில் தங்கும் விடுதி வசதி அளிக்கப்பட்டுள்ளது. பாழடைந்த இடங்கள் போன்று காட்சியளிக்கும் வைத்தியசாலையின் ஒரு ஒதுக்குப் புறக் கட்டடத்தில் மின் விளக்குகள்கூட இல்லாத நிலையில், ஜன்னல்கள் உடைந்து, மின் விசிறிகள் பழுதடைந்த நிலையிலும் 4 பேர் அவர்களது மூட்டை முடிச்சுகளுடன் ஒரு அறையில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மிகப் பாழடைந்த-சுகாதார வசதிகளற்ற கட்டடத்தில் இந்த வைத்தியர்கள் தங்கியிருப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. இந்த இடத்தின் சுற்றாடலில் குப்பை கூழங்கள் சேற்று நீரால் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் நுளம்புகள் பெருகியுள்ளதோடு பகல் வேளையிலும் நுளம்புத் தொல்லை காணப்படுகிறது. அங்குள்ள குறைபாடுகள் குறித்து தாம் மேலிடத்திற்குப் பல முறை எடுத்துச் சொல்லியும் அவை கவனத்தில் எடுக்கப்படவில்லை என்று வேதனை தெரிவிப்பதோடு, மட்டக்களப்புப் பொது வைத்தியசாலையில் சாதாரண மருந்து வகைகளுக்குக் காணப்படும் தட்டுப்பாட்டையும் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். மட்டக்களப்புப் பொது வைத்தியசாலை கிழக்கின் போதனா வைத்தியசாலையாகக் கருதப்பட்ட போதிலும் அடிப்படையில் பல்வேறுபட்ட குறைபாடுகள் அங்கு காணப்படுகின்றன.


சித்தர் மாந்திரீகம்

அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒருதடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 25ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
30/16, MALLIKA LANE,
WELLAWATTA, COLOMBO-06.
TELE PHONE: 500067.

25ந் திகதி முதல் 30ந் திகதி வரை

SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை

விளம்பரப் பகுதி

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
கல்வி நெறிகள்

★ 90 Days Spoken English
★ 90 Days Spoken Sinhala
★ Method of Book-Keeping
★ Method fo Computerised Book-Keeping & Accountancy (MCBA)

மேற்படி பாடநெறிகள் நேரிலும்/ தபால் மூலமும் நடைபெறுகின்றன. வகுப்பு நேர விபரங்களை நேரிலோ, தொலைபேசியிலோ, தபால் மூலமே அறிந்து கொள்ளலாம.
மேலதிக விபரங்களுக்கு கீழ்க் காணும் விண்ணப்ப படிவத்துடன் தொடர்பு கொள்க.

விரும்பும் பாடநெறி:..........
பெயர்:..........
முகவரி..........

BRIGHT BOOK CENTRE (PVT) LTD.
S-27, First Floor, P.O. Box-162,
Colombo Central Super Market Complex.
Colombo -11. Tel: 434770, 074-718592

காண்டம்

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

ரிஷி. S.மணி

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218





மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச் சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது பிறந்த திகதி மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் திறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
பி.கே. சாமி J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
162, KOTAHENA STREET,
MAY FIELD ROAD, COLOMBO-13.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464
Tel-00941431137
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்-
342463-344831





ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)





இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி....
நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்
★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்
NAGOOR Travels & Tours
அங்கீகார இல: 1094
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
439392
Royal - 071-35132

வெள்ளவத்தையில்
ROYAL SHELTER PROMOTER'S இன்
ROSE GARDEN APARTMENT'S
No. 5, FRANCIS ROAD.
தொடர் மாடி வீடுகள்
2 BED ROOM, HALL, PANTRY
2 TOILETS / BATHROOM
DISH ANTENNA LIFT வசதி
உடனே குடியேறலாம்.
இன்னும் சில வீடுகள் மட்டுமே உள்ளன.
ROYAL SHELTER PROMOTER'S
18/1, 1ST CHAPEL LANE,
COLOMBO-06.
T.P: 581768

மனோதத்துவ வைத்தியம்
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை கீழ்க்காணும் இடங்களிலும் சந்திக்கலாம்.
ஓட்டமாவடி மார்ச் 4,5ம் திகதிகளில்
Dr. முகைதீன் டிஸ்பென்செரி, ஓட்டமாவடி.
T.P. 065-57345
கல்முனையில் மார்ச் 7,8,9,10ம் திகதிகளில்
T.M.M பாமசியிலும் T.P. 065-29329
மற்றைய நாட்களில் Dr. P. Arumugam
No. 33, Tissa Weerasingam Sq,
Boundary Road, Batticaloaவிலும் சந்திக்கலாம்.
வவுனியாவில் மார்ச் 14,15,16,17ம் திகதிகளில்
வவுனியாவில் 2ம் குறுக்கு தெரு, ஞான வைரவர் கோவில் வீதி, VANNI INNல் சந்திக்கலாம்.
T.P. 024-22074ல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கவனத்திற்கு! புதியசெல்லிடல் No. 072-609388




படிப்பகம்

www.padippakam.com

# வன்னிக் களம்
# எட்டாத இலக்குகள்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

**13.05.97** செவ்வாய்க்கிழமை சுபநேரம் பார்த்து தொடங்கப்பட்ட 'ஜயசிக்குறுய்' பலத்த இழப்புக்களுடன் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

03.03.98 செவ்வாய்க் கிழமையுடன் 'ஜயசிக்குறுய்' ஆரம்பமாகி ஒன்பது மாதங்களும் 21 நாட்களும் பூர்த்தியாகியுள்ளன.

வவுனியா- யாழ் நெடுஞ்சாலையின் மொத்தத் தூரம் கிட்டத்தட்ட 73 கிலோ மீட்டர். இதில் பத்து கிலோமீட்டர் ஓமந்தை வரை சண்டையின்றி படை நகர்ந்தது.

மிகுதி 63 கிலோமீட்டர் தூரத்தை கைப்பற்றுவதற்காகத்தான் கடும் போர் மூண்டது.

வவுனியா-யாழ் சாலையில் 22 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள புளியங் குளம் வரைதான் படையினர் தற்போது நிலை கொண்டுள்ளனர்.

புளியங்குளம் சந்தியில் புலிகளின் பலமான காப்பரண்கள் உள்ளன. அவற்றைத் தாண்டிச் செல்ல ஆறுமாத காலமாக முயன்றும் முடியவில்லை.

**அதன் பின்னர்தான் புளியங்குளத்துக்கு கிழக்கே உள்ள பெரியமடு, நயினாமடு பகுதிகளில் இருந்தும், புளியங்குளத்துக்கு மேற்கே உள்ள புதூர் வழியாகவும் உட்பாதைகளால் முன்னேறி புளியங்குள சந்தியை சுற்றிவளைக்கவும், அது முடியாவிட்டால் புளியங்குளத்திற்கு அடுத்ததாக உள்ள கனகராயன் குளத்தை பிடிக்கவும் படையினர் நகர்வுகளை மேற்கொண்டனர்.**

இவற்றில் புதூர் வழியாக முன்னேறும் முயற்சிகள் பயனளிக்கவில்லை. புதூரில் இருந்து மன்னகுளம் சென்ற விசேஷ அதிரடிப்படை அணி புலிகளின் முற்றுகைத் தாக்குதலால் மொத்தமாக அழிக்கப்பட்டது. 04.12.97 இல் நடைபெற்ற அத்தாக்குதலின் பின்னர் புதூரில் இருந்து குறிப்பிடத்தக்க முன்நகர்வு எதையும் படையினர் மேற்கொள்ளவில்லை.

**ஆனால், வன்னிக்கு அழைத்துச் சென்ற பத்திரிகையாளர்களிடம் புதூர் சார்ந்த பகுதியைக்காட்டி இதுதான் மன்னகுளம் என்று கூறப்பட்டிருக்கிறது.**

மன்னகுளத்தில் இருந்த புலிகளின் முகாமை தாக்கச் சென்ற தமது படையினர் தான் பலியாகினர் என்பதை 04.12.97 இல் நடைபெற்ற மன்னகுளம் மோதலின் பின்னர் படையினரே ஒப்புக்கொண்டிருந்தனர்.

மன்னகுளம் சென்ற அதிரடிப் படையினர் திரும்பி வரவில்லை என்பதுடன், அவர்களது உடல்கள் புலிகளால்தான் ஒப்படைக்கப்பட்டன. அதன் பின்னர் மன்னகுளம் நோக்கி படைகள் நகர்ந்ததாக படையினர்கூட கூறியதில்லை.

**எனவே மன்னகுளம் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக பத்திரிகையாளர்களுக்கு ஊர் காட்டியது போன்றதுதான் ஏனைய இடப்பிடிப்பு விபரிப்புக்களும் என்பது தெளிவு. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.**

புளியங்குளத்துக்கு கிழக்கே உள்ள நயினாமடு, பெரியமடு பகுதிகளில் இருந்து குறிப்பிடத்தக்க நகர்வுகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

எனினும் அந்த தரை நகர்வு முயற்சியும் படையினரால் எதிர்பார்க்கப்பட்ட பயனை இதுவரை தேடிக் கொடுக்கவில்லை.

இதில் முக்கியமான போர்க்கள நிலவரம் ஒன்றை கவனித்தாக வேண்டும்.

புலிகளைவிட பற்பல மடங்கு ஆட்பலம், கனரக ஆயுத, வாகன பலம், வான் படையினரின் வான்மார்க்க கவசப் பலம் என்பவற்றோடு முன்னேறிய 'ஜயசிக் குறுய்' படையினரால் எப்பாடு பட்டும் புளியங்குளத்தை தாண்ட முடியவே இல்லை.

வவுனியா-யாழ் நெடுஞ்சாலையில் நடந்த சண்டைகளில் படையினருக்கு ஏற்பட்ட முதலாவது பாரிய தோல்வியாக அதனை கூறலாம்.

**அத் தோல்விக்குப் பின்னர்தான் நெடுஞ்சாலை வழியிலான தரைநகர்வை புளியங்குளத்துடன் நிறுத்திக்கொண்டு, நெடுஞ்சாலைக்கு சமாந்தரமாக இருபுறமும் உட்பாதைகள் வழியாக புதிய சண்டை முனைகளையும், தரைநகர்வுகளையும் தொடங்கினர் படையினர்.**

புளியங்குளத்துக்கு மேற்கே புதூர் வரைதான் படையினரால் நகர முடிந்தது. ஆனால் கிழக்கே உள்ள நயினாமடு, பெரியமடு படைநிலைகளில் இருந்து கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம், மற்றும் கனகராயன் குளத்தை அண்டிய சில பகுதிகளில் படையினர் நிலை கொள்ள முடிந்தது.

கிழக்குப் பக்கமான தரைநகர்வு மூலமே மாங்குளம், ஒட்டிசுட்டான் வீதியில் உள்ள கரிப்பட்ட முறிப்புவரை படையணி ஒன்று சென்று நிலைகொண்டது.

**05.10.97 அன்று கரப்புக்குத்தி, விஞ்ஞான குளம் பகுதிகளில் படையணிகளை உள்ளே இழுத்துவிட்டு, புலிகள் நடத்திய முற்றுகைத் தாக்குதலால் மேற்படி புதிய தரை நகர்வு தந்திரத்தில் பலத்த பின்னடைவு ஏற்பட்டது.**

அதன் காரணமாக வவுனியா- யாழ் நெடுஞ்சாலையின் கிழக்குப் புறமாக உட்பாதைகளால் முன்னேறி நெடுஞ்சாலையில் உள்ள புளியங்குள சந்தியையோ, அல்லது அதற்கு அடுத்ததாக உள்ள கனகராயன் குளச் சந்தியையோ சென்றடையும் படையினரின் தந்திரம் பலிக்கவில்லை.

நெடுஞ்சாலையை கிழக்குப் புறமிருந்து படைகள் நெருங்கவிடாதவகையில் புலிகளின் தாக்குதல் தொடர்ந்தது. பின்னர் மழைக்காலம் வந்துவிட்டதால் இயற்கையும் குறுக்கிட்டது. அதாவது வவுனியா-யாழ் நெடுஞ்சாலைக்கு சமாந்தரமாக பாய்ந்து செல்லும் கனகராயன் ஆறு கரை புரண்டோடியதால் அதனைக் கடப்பதும் முடியாததாகியது.

**படையினரால் தற்போது கனகராயன் குளம் என்று குறிப்பிடப்படுவது நெடுஞ் சாலைக்கு கிழக்காக உள்ளே உள்ள சில பகுதிகள் தான். இப்பகுதியில் கடந்த நாலு மாதகாலமாக படையினர் நிலைகொண்டுள்ளனர்.**

மாங்குளம் ஒட்டிசுட்டான் வீதியில் இருப்பது கரிப்பட்ட முறிப்பு. அங்கும் கடந்த நாலு மாதகாலமாக படையினர் நிலைகொண்டுள்ளனர். எனினும் கரிப்பட்ட முறிப்பில் முழுப் பகுதியிலும் படையினர் நிலைகொண்டிருப்பதாக அர்த்தமாகாது.

கரிப்பட்ட முறிப்பு, ஒலுமடு போன்றவை அடர்ந்த காட்டுப் பகுதிகளாகும். ஒலுமடுவில் சேனைக் காடுகள் உள்ளன.

அதனால் புலிகள் மட்டுமின்றி, படையினரும் பதுங்கிக் காத்திருந்து தாக்கும் நடவடிக்கைகளில் அப்பகுதிகளில் ஈடுபடமுடிந்தது.




புலிகளும் படையினரின் பதுங்கியிருந்த படையினரிடம் பலியாகியுள்ளனர். படையினரும் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். கரிப்பட்ட முறிப்பின் அருகே உள்ளது ஒலு மடு. கரிப்பட்ட முறிப்பில் இருந்து ஒலுமடுவை முழுதாகச் சென்றடைய வேண்டுமானால் நான்கு கிலோ மீட்டர் தூரம் கடந்தாகவேண்டும்.

**ஆனால் கரிப்பட்ட முறிப்புக்கு சென்ற சில நாட்களின் பின்னர் ஒலுமடுவில் படையினர் நிலைகொண்டுள்ளதாக படைத்தரப்பு செய்தி வெளியிட்டிருந்தது.**

**அதே படைத்தரப்புத்தான், இப்போது கரிப்பட்ட முறிப்பில் இருந்து ஒலுமடு நோக்கி படையினர் முன்னேற முயற்சிப்பதாகவும், கடும் மோதல் நடப்பதாகவும் செய்திகளை வெளியிட்டுள்ளது.**

அதுமட்டுமல்ல, சில வாரங்களுக்கு முன்னர் படை அதிகாரி ஒருவர் கூறும்போது, மாங்குளத்தை சென்றடைய இன்னமும் இரண்டு கிலோமீட்டர் தூரம் மட்டுமே இருப்பதாக கூறியிருந்தார்.

ஆனால், ஒலுமடுவை படையினர் கைப்பற்றினால்கூட அங்கிருந்து மாங்குளம் செல்ல மேலும் கிட்டத்தட்ட நாலு கிலோமீட்டர் தூரத்தை கடக்கவேண்டும்.

உண்மையில் கரிப்பட்ட முறிப்பில் ஒரு பகுதியையும், ஒலுமடுவில் சிறுபகுதியையும் உள்ளடக்கிய பிரதேசத்தில்தான் படையினர் நிலைகொண்டுள்ளனர். அங்கிருந்து மாங்குளம் நகருக்கு செல்ல வேண்டுமாயின் கிட்டத்தட்ட எட்டு கிலோமீட்டர் தூரத்தை கடந்தாகவேண்டும்.

மாங்குள நக்கரை படையினர் நெருங்கினால்கூட நகரைக் கைப்பற்றுவது எளிதல்ல. புளியங்குளத்தில் இருந்து புளியங்குள சந்தி வரை இரண்டு இரண்டரை கிலோமீட்டரை கைப்பற்ற ஆறுமாதமாக முயன்றும் முடியவில்லை.

கனகராயன் குளத்தை கைப்பற்றிவிட்டோம் என்று கூறுவதைப்போல, ஒலுமடுவுக்கு போன உடனேயே மாங்குளம் நம் கையில் என்று படையினர் அறிவிக்கலாம். ஏன் இப்போதுகூட அறிவிக்கலாம். யார் கேட்கமுடியும்.

**மாங்குளத்தில் இருந்து 20 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளதும், நெடுஞ்சாலைக்கு மேற்கே உள்ளதுமான மூன்று முறிப்பில் நடந்த சண்டையை மாங்குளம் அருகே நடைபெற்ற சண்டை என்று விபரிக்கப்படுகையில், மாங்குளத்தில் இருந்து எட்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து கொண்டு மாங்குளம் நம் கையில் என்று கூறினால் ஆச்சரியமில்லைதான்.**

ஆனால், கடந்த நாலு மாதகாலமாக ஜயசிக்குறுய் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையே சுற்றிச் சுற்றி ஒரே பகுதிகளுக்குள் தான் சண்டைகள் நடந்து வருகின்றன.

தொடர்ந்து ஒரே பகுதியின் பெயரை கூறிக்கொண்டிருந்தால், படைகள் முன்னேறவே இல்லையா? என்ற கேள்வி தென்னிலங்கையில் எழும்.

அதனால் புதிய புதிய ஊர்ப்பெயர்கள், இடப்பெயர்களை கூறியாக வேண்டி இருக்கிறது. அவ்வாறு கூறுவதற்காகவே யுத்த தந்திர ரீதியில் எவ்வித பிரயோசனமும் இல்லாத தரைநகர்வுகள் கூட நடத்தப்படுகிறதோ என்று சந்தேகமாக இருக்கிறது.

**சமீபத்தில் வெளியான போர்க்களச் செய்தி ஒன்றில், மாங்குளத்தை கைப்பற்ற கடும் சமர். ஒலுமடுவில் மோதல். குஞ்சுக் குளத்தில் சண்டை என்று கூறப்பட்டது.**

செய்தியை கேட்பவர்களுக்கு குஞ்சுக குளம் என்பதும் மாங்குளத்துக்கு செல்லும பாதையில் உள்ள பகுதிபோலத்தான் தோன்றும்.

ஆனால், குஞ்சுக்குளத்திற்கும் மாங்குளத்திற்கும் இடையே உள்ள தூரம் கிட்டத்தட்ட 22 கிலோமீட்டர்.

வவுனியா-யாழ் சாலையின் மேற்குப் புறமாக, புளியங்குளத்திற்கு மேற்குத் திசையில் புளியங்குளத்திலிருந்து 15 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள இடம்தான குஞ்சுக்குளம். அதனைக் கோயிற் குஞ்சுக் குளம் என்றும் அழைப்பர்.

இது ஓமந்தைக்கு வடக்கே 2 1/4 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள இரம்பைக்குளத்தி விருந்து வட-மேற்காக பாதை பிரிந்து செல்கின்றது. அங்கிருந்து 9 கிலோமீட்டர் தூரத்தில் பாலமோட்டையுள்ளது. பாலமோட்டையிலிருந்து குஞ்சுக்குளம் 7 கிலோமீட்டர் தொலைவிலுள்ளது. அப்பாதையால் நேரே சென்றால் 6 1/4 கிலோமீட்டரில் (குஞ்சுக்குளத்திலிருந்து) இருப்பது மூன்று முறிப்பு.

**புளியங்குளத்திற்கு மேற்கே புதூர் வழியாக மன்னகுளம் ஊடாக கனகராயன் குளத்தை சென்றடையும் முயற்சிகள் தோல்வி கண்ட பின்னர், புதூருக்கு கீழே இறங்கி பாலமோட்டை வழியாக மூன்று முறிப்புக்கு செல்லும் தரை நகர்வு ஒன்று 15.02.98 அன்று மேற்கொள்ளப்பட்டது.**

படையினருக்கும் புலிகளுக்கும் இடையே பாலமோட்டைக்கு அருகே உள்ள பகுதிகளில் மோதல் மூண்டது. 50ற்கு மேற்பட்ட படையினர் பலியாகினர்.

அடர்ந்த காட்டுப்பகுதி சார்ந்த பிரதேசங்கள் என்பதால், படையணிகளை நகரவிட்டு, திடீரென்று அதிரடி தாக்குதல் ஒன்றை புலிகள் நடத்தினர்.

**அதன்பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர். இச் செய்தியைத்தான் மாங்குளம் நோக்கி முன்னேறிய படைகளுக்கும், புலிகளுக்கும் இடையே மாங்குளம் அருகே மூன்று முறிப்பில் மோதல் என்று கூறப்பட்டது.**

இம்மாதம் 02.03.98 அன்றும் மீண்டும் அதே பாதை வழியாக தரைநகர்வு ஒன்றை படையினர் மேற்கொள்ள முயன்றபோது புலிகள் மோட்டார் தாக்குதல் தொடுத்தனர்.

15.02.98 அன்று மோதல் நடந்த அதே பகுதியை அண்டியதுதான் குஞ்சுக்குளம் பகுதியாகும். ஆனால் புதிய பகுதி ஒன்றில் மாங்குளம் அருகே சண்டை நடந்தது என்று தோன்றக்கூடிய வகையில் செய்திகள் கூறப்பட்டன.

**புளியங்குளத்தில் இருந்து நெடுஞ்சாலை வழியாக தொடர்ந்து முன்னேற முடிய வில்லை.**

**புளியங்குளத்தின் கிழக்குப் புறமாக உட்பாதை வழியாகவும் சாலையை சமீபிக்க முடியவில்லை. அதனால்தான் நெடுஞ் சாலையில் மேற்குப் புறமிருந்து உட்பாதை வழியான தரைநகர்வு முயற்சிக்கு பலத்த பிரயத்தனம் நடக்கிறது.**

அந்தப் பலவீனம், வெளியே தெரியாமல் இருக்கத்தான் சகல முயற்சிகளையும் மாங்குளத்தை கைப்பற்றும் முயற்சிகளாகவும், சகல மோதல்களையும் மாங்குளம் அருகே நடக்கும் மோதல்களாகவும் கூறிவருகின்றனர்.

**கரிப்பட்ட முறிப்பில் இருந்து முன்னேற முனையும் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே இருவாரங்களாக நடைபெற்று வரும் சண்டைகளை மட்டுமே மாங்குளம் அருகே நடைபெறும் சண்டைகள் என்று குறிப்பிடமுடியும்.**

கடந்த நாலு மாதகாலமாக 'ஜயசிக்குறுய்' படையினர் குறிப்பிடத்தக்க நகர்வுகளை மேற்கொள்ள முடியவில்லை. வவுனியா, யாழ்சாலையில் உள்ள முக்கிய நகர்கள் சந்திகள் என்பவற்றை கைப்பற்றவும் இயலவில்லை.

ஆனால், 'ஜயசிக்குறுய்' படையினர் சென்று சேரவேண்டிய இடமான கிளிநொச்சி நகரின் மத்திய பகுதியை புலிகள் பிடித்துக் கொண்டனர்.

**இன்றுவரை கிளிநொச்சி நகரின் மத்திய பகுதியில் படையினரிடம் இருந்து கைப்பற்றிய காப்பரண்களில் புலிகள் இருக்கின்றனர்.**

மாங்குளம் சண்டை பற்றிய ஓயாத செய்திகள் மூலம் கிளிநொச்சி நிலவரம் பற்றிய கேள்விகளுக்கே இடமில்லாமல் செய்துவிட்ட படைத்தரப்பின் பிரசார உத்தியை பாராட்டத்தான் வேண்டும்.

கிளிநொச்சி-பரந்தன் சமர்களில் பலியான படையினரின் முழுத்தொகை பற்றியும் அப்படியே அடுக்கியாகிவிட்டது.

**கரிப்பட்ட முறிப்பில் 24.02.98 இல் நடைபெற்ற சண்டையின் பின்னர் தமது தரப்பில் ஆறுபேர் மட்டுமே பலியானதாக படைத்தரப்பு அறிவித்தது. அச் சண்டையில் பலியானவர்களில் பதினாறு படையினரின் சடலங்களை புலிகள் ஒப்படைத்த போது அவற்றையும் படையினர் பெற்றுக் கொண்டனர்.**

தமது தரப்பு இழப்பு பற்றி படையினர் கூறும் கணக்கு உண்மையான எண்ணிக்கையில் பாதிகூட இல்லை என்பதையே மேற்கண்ட நிகழ்வு தெளிவாக காட்டியிருக்கிறது.

கரிப்பட்ட முறிப்பில் இருந்து புறப்பட்ட படையணியை சில தூரம் முன்னேற அனுமதித்துவிட்டு திடீர் பாய்ச்சல் ஒன்றை புலிகள் நடத்தியிருந்தனர். முன்னேறிய படையின் ஒரு சிறு பிரிவு

> **ஒன்பது மாதச் சமர்**
>
> நெடுஞ்சாலையில் முன்னேற முடியவில்லை.
> உட்பாதை வழியாக மேற்கு நகர்வை தொடரமுடியவில்லை!
> புலிகளின் பலத்தை அழிக்கும் இலக்கை எட்ட முடியவில்லை.

புலிகளின் முற்றுகையில் சிக்கிக் கொள்ள, ஏனைய படையினர் பின் நகர்ந்தனர். பலியான படையினரில் ஆறு உடல்கள் தவிர ஏனைய உடல்களையும் ஆயுதங்களையும் கூட படையினரால் எடுத்துச் செல்ல முடியாதளவுக்கு தாக்குதல் உக்கிரமாக நடத்துள்ளது. புலிகள் தரப்பில் ஆறுபேர் பலியாகினர்.

**20 சடலங்களை புலிகள் கைப்பற்றியதோடு நவீன ஆயுதங்கள், பத்தாயிரம் ரவைகள், பலியான படையினர் அணிந்திருந்த ரவைத் தடுப்பு கவசங்கள் என்பவற்றைக் கைப்பற்றினர்.**

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக தரைப்பாதை திறக்கப்படும் என்பதுதான்

நாரதர்

பாதுகாப்புத் தரப்பின் சமீபத்திய காலக்கெடு.

ஒருவேளை அப்படி முடிந்தால்கூட பாரிய ஆட்பல சேதத்துடன்தான் படையினர் நிலைகொண்டாக வேண்டியிருக்கும். சேதமான படையணிகள் புலிகளின் அதிரடி தாக்குதல்களுக்கு சுலபமான இலக்குகளாகிவிடலாம்.

**பாதைத் திறப்பை தடுப்பது என்பதை விட தமது படைபலத்தை பலவீனமாக்கும் நோக்கத்தோடு புறப்பட்ட 'ஜயசிக்குறுய்' படையினரின் ஆட்பல, ஆயுதபல இழப்பை முடியுமானவரை அதிகமாக்குவதே புலிகளின் நோக்கம்.**

**அரசினதும், படையினதும் உண்மையான நோக்கம் தரைப்பாதை திறப்பாக இருக்கவில்லை. புலிகளின் தளத்தின் இதயத்தில் தாக்குதல் தொடுத்து, புலிகளின் அணிகளை சண்டைக்கிழுத்து பாரிய அழிவை ஏற்படுத்துவதும், அதன் மூலம் புலிகளை ஓரம் கட்டுவதுமே.**

அது சுலபமல்ல என்பது தெரிந்துவிட்ட நிலையில்தான், வெளிக்கு சொல்லப்பட்ட காரணமான, தரைப்பாதை திறப்பை தமது உண்மையான நோக்கமாக உயர்த்திப் பிடிக்கின்றனர் அரச தரப்பினர்.

# அதிரடி அய்யாத்துரை



**கள்ளச் சுவாமி பிரேமானந்தாவுக்கு** யாழ்ப்பாணம் சுன்னாகத்தில் ஆசிரமம் ஒன்று இருக்கிறதாம். அங்கும் பெண்கள் மயம்தானாம். பஜனைகளும் நடக்கிறதாம். நாற்காலியொன்றில் பிரேமஸின் செருப்புக்கள் என்று வைத்து பூஜை செய்கிறார்கள். (அடப்பாவிகளே!) பிரதேசசபை முக்கியஸ்தர்களும் கள்ளச் சாமியின் ஆசிரமப் பக்கம் நடமாடுவதாகத் தகவல். தமிழ்நாட்டிலும் அரசியல் புள்ளிகள் உபயத்தில் தான் பிரேம்ஸ் பெண்களை சாப்பிட்டார். இடைக்கிடையே விநியோகமும் செய்தார். சுன்னாகத்தில் சிஷ்யர்கள் என்ன செய்கிறார்களோ?

**மகா சிவராத்திரிக்கு** கீரிமலையில் தீர்த்தமாட அனுமதி. அழுக்குக் கேணியில், உடுப்பு மாற்றவும் இடம் இல்லாமல் பக்த கோடிகள் பட்டபாடு பெரும்பாடு. பச்சை உடையினர் கடைகள் திறந்து வியாபாரம் செய்தவை. நன்றாக பகிடிகளும் விடப்பட்டதாம். ஒரு இளம் பெண்பிள்ளை 'விக்ஸ் ரொபி' கேட்க, 'அது இல்லை, வாழைப்பழம் வேணுமோ?' என்று கேட்டவையாம். தமிழ் படிக்கத் தொடங்கியிருப்பதால் மேற்படி புலமையான பகிடியெல்லாம் விட்டு நல்லுறவைப் பேண முடியுது பார்த்தியளோ!

**அவர் ஒரு தமிழ்க் கட்சித் தலைவர்.** ரெண்டு எழுத்தாருக்கு சார்பானவர் அல்ல. சம்பத்தில் அவரிடம் பேசிய நண்பர் ஒருவருக்கு அவர் சொன்னாராம்: "இரண்டு எழுத்தார் விழுந்தால், நாங்கள் கோவணத்தோடுதான் நிற்க வேணும்!" யதார்த்தமாகச் சிந்திக்கிறார். எனக்குள்ள கேள்வி என்ன தெரியுமோ? கோவணத்தோடு நிற்கவிடுவினம் என்று எந்த நம்பிக்கையை வைத்து சொல்லுகிறார்?!

**யாழ் சபைகளுக்கு** உதவுதல் என்று வெளிநாட்டு தூதர்கள் திக் விஜயம் செய்யினம். ஒரு கோடி ஒதுக்கீடு, அரைக்கோடி ஒதுக்கீடு என்று அதிகாரத் தரப்பாரும் தமிழ்க் கட்சிகளுக்கு உத்தரவாதம் கொடுக்கினம். "பார்த்தியளோ எவ்வளவு இலட்சம் இலட்சமாக எங்களை நம்பித் தருகினம்" என்று சனத்தைப் பார்த்து தமிழ்க் கட்சிகள் கொலரைத் தூக்கிவிட்டுக் கொள்ளுகினம். சபைகளைச் சாட்டி வெளிநாடுகளில் வாங்குறதில் பத்தில் ஒரு பங்குகூட வடக்குக்கு போய்ச் சேருமோ? "இறால் போட்டு சுறாப் பிடிக்கிற கதைகள்தான் ஒதுக்கீடு அறிவிப்புக்கள்" என்றும் அரசல் புரசலாக கதைபடுகிறது.

**ஜெர்மன் தூதுக்குழுவை** சந்தித்த தமிழ்க் கட்சிகள், அரசின் தீர்வுத் திட்டத்தை தீர ஆராய்ந்து வருவதாகக் கூறின என்று பத்திரிகைகளில் வந்த செய்தியை வாசிக்க பக்கத்தில் இருந்த நண்பர் 'புர்ர்ர்' என்று சிரிச்சுப் போட்டார். "ஏன் ஐயா சிரிக்கிறீர்?" என்றேன். "இவை கொடுத்த யோசனைகள் எந்தக் குப்பைத் தொட்டியில் கிடக்கென்று ஆராயினமாக்கும்!" என்றார். கண்டறியாத சிரிப்பு. இயலுமானதைத்தானே செய்ய வேணும்!

**யாழில்** நிதி வசூலித்த கட்சி ஒன்றிடம் நிதியை மீளப் பெற்று உரியவரிடம் ஒப்படைத்தவையாம் பாதுகாப்புத் தரப்பார். சகல கட்சிகளையும் அழைத்து புத்திமதிகள் சொன்னதோடு அன்போடு எச்சரிப்பும் விடுக்கப்பட்டதாம். தேர்தல் அறிவித்த சூட்டோடு யாழ் சென்ற மேற்படி கட்சியின் நிதி வசூலிப்பு பற்றி யாழ் பத்திரிகையும் விளாசியிருந்தது.

**'மோகினிப் பேய்'** அடிக்கும் என்று பயந்து திரிவது அக்காலம். கொழும்பில் மோகினிப் பேயிடம் இல்லாத பயம் குண்டு மோகினியிடம் ஏற்பட்டிருக்குது. பொலிஸ் நிலையங்களில் ஏராளமானோர் குண்டு மோகினி பற்றி புகார் பண்ணியுள்ளனராம். வேப்பமர உச்சியிலே போய் ஒன்று நிக்குதென்று சொல்லுறமாதிரி, தெகிவளைச் சந்தியிலே குண்டு மோகினி நிண்டதெண்டு கதை கதையாகச் சொல்லுகினம். யார் சொல்லுறது அசல் கதை: யார் சொல்லுறது நகல் கதை? என்று கண்டுபிடிக்கிறதுதான் யமக் கஷ்டம்!

**ரெண்டு எழுத்து தலைவருக்கு** பத்து வருடத்திற்கு வடக்கைக் கொடுக்க நினைத்ததாக அம்மையார் கூறியது பொய்யல்ல. அதை வெளியே சொன்ன காரணம், தன்னை நியாயமாகக் காட்டி அவரை ஓரம் கட்டத்தான்! ஆனால் நினைத்தது ஒன்று; நடந்தது வேறொன்று! எதிர்க்கட்சிக்கு மெல்ல அவல் கிடைத்துவிட்டது. ரெண்டு எழுத்து தலைவர் சலுகைகளுக்கு மயங்காதவர் என்பதை அம்மையாரே உலகுக்கு அறிவிச்சமாதிரியும் ஆகிப்போட்டுது. நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் அதிலென்ன ருசி?

**இவ்வாரப் பொன்மொழி:**
"உண்மையான நண்பனை
சந்தேகிப்பவன்
அவன் பொய்யனாக
நடக்கக் காரணமாகிறான்!"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது



171

# தொடர் தாக்குதல்கள் திணறியது இந்தியப்படை

**தெ**ன்னிலங்கையில் ஜே.வி.பி. வீழ்ச்சியடைந்த பின்னர் பிரேமதாச அரசுக்கு புதுத் தெம்பு ஏற்பட்டிருந்தது.

இந்தியப் படையும் முழுமையாக வெளியேறிவிட்டால் தனது அரசாங்கத்திற்கான மரியாதை தென்னிலங்கையில் அதிகரிக்கும் என்பது பிரேமாவின் நம்பிக்கை.

அதேசமயம் இந்திய அரசும் சில இராஜதந்திர வலை வீச்சுக்களில் ஈடுபட்டது. பிரேமதாசாவுக்கு ஒரு பாடம் படிப்பிப்பதற்காக புலிகளுடன் மறுபடி நட்பை ஏற்படுத்திக் கொள்ளக்கூட இந்திய அரசு தயாராக இருந்தது.

"எங்களுக்குள் பேசிக்கொள்வோம் உங்களுக்கு தேவையான உதவிகளை இந்திய அரசு செய்து தரும்." என்று இந்திய உளவு நிறுவனமான 'றோ' மூலம் ஆசை வலை வீசப்பட்டது.

ஆனால், இந்திய அரசை பிரபாகரன் நம்பத் தயாராக இருக்கவில்லை. அன்போடு அழைத்துச்சென்று புதுடில்லியில் வைத்து ராஜீவ் காந்தியும் இந்திய அரசும் நடந்து கொண்ட முறைகளை பிரபாகரன் மறக்கவும் இல்லை.

பிரபாகரனை ஆசை வலையில் வீழ்த்த முடியவில்லை என்றதும், மற்றொரு இராஜதந்திர முயற்சியை முடுக்கி விட்டது இந்திய அரசு.

வடக்கு-கிழக்கு மாகாணசபை ஈழப் பிரகடனம் செய்யப் போவதாக ஈ.பி.ஆர்.எல்.எஃப். முதலமைச்சர் வரதராஜப் பெருமாளும் ஏனையோரும் கூறிக்கொண்டிருந்தனர் அல்லவா.

அதற்கு மூலகாரணமாக இருந்தது இந்திய அரசுதான். வடக்கு-கிழக்கு மாகாண சபை ஈழப் பிரகடனம் செய்யுமானால் நிலமை விபரீதமாகும் என்று இலங்கை அரசு அஞ்சும். மறுபடி இந்திய அரசிடம் மண்டியிடும் என்று நினைத்தனர்.

ஆனால், மாகாணசபை அரசின் பலம், மாகாணசபைக்கு ஆதரவான கட்சிகளின் பலம் என்பவை தங்களுக்கு ஒரு அச்சுறுத்தல் அல்ல என்பதை பிரேமதாசாவும், ரஞ்சன் விஜயரத்னவும் தெரிந்து வைத்திருந்தனர்.

புலிகள் தம்முடன் உறவாக இருப்பதால், 'இந்தியப் படை வெளியேறிய மறுநிமிடமே' மாகாண அரசாங்கத்தை கவிழ்த்துவிடலாம் என்பதும் அவர்களது நம்பிக்கை.

இந்தியப் படையையே திணறடித்துக் கொண்டிருக்கும் புலிகளுக்கு, மாகாண சபை எம்மாத்திரம்? என்று இலங்கை அரசு நினைத்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

## பிரேமா கடிதம்

இந்தியப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைப்பதில் ஏற்பட்ட தாமதத்திற்கு புலிகள் கூறிய காரணங்களில் ஒன்று, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடந்துவருகிறது என்பதாகும்.

ஆனால், இந்தியப் படையினரும், இந்திய அரசும் புலிகள் வேண்டுமென்று குற்றம் சாட்டுகின்றனர் என்று கூறியிருந்தனர்.

ஆனால், இந்தியப் படையை உடனடியாக வாபஸ்பெறமுடியாமைக்கு காரணம் தெரிவித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி இலங்கை ஜனாதிபதி பிரேமாவுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

வடக்கு-கிழக்கில் குறிப்பாக கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் நடைபெறுவதாக ராஜீவ் குற்றம் சாட்டியிருந்தார்.

புலிகள் சொன்னபோது எதனை அலட்சியம் செய்தனரோ, அதே காரணத்தை இலங்கையில் இருந்து படையை வாபஸ் பெறுவதை தாமதிப்பதற்கான பிரச்சகைளில் ஒன்றாக பின்னர் கூறுவதற்கு முனைந்தது இந்தியத் தரப்பு.

ராஜீவின் கடிதத்துக்கு பிரேமா பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் கடிதப் போர் ஒன்றையே நடத்தத் தொடங்கி இருந்தனர். தங்கள் தங்கள் இராஜதந்திரங்களை அக் கடிதங்களில் கூர்த்தீட்டிப் பார்த்துக் கொண்டனர்.

இது பிரேமா அனுப்பிய கடிதத்தின் சுருக்கம்:



பயிற்சி முகாமில் புலிகள்

"1989 ஜூன் மாதம் 2ம் திகதி நான் தங்களுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டதைப் போன்று, ஜனாதிபதித் தேர்தலின்போதும், பாராளுமன்றத் தேர்தலின்போதும், நான் அளித்த முக்கியமான வாக்குறுதிகளில் ஒன்றாக இந்திய அமைதிப் படையினரின் வாபஸ் பெறுகையும் இடம்பெற்றுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில், 'இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதுடன், இந்தியப் படையினர் வாபஸ்பெற்றுச் செல்லுமாறும் கோருவோம்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆகவே, 95 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இந்தியப் படையினரின் வாபஸ் பெறுகைக்கு தெளிவான பணிப்பாணையை அளித்துள்ளனர்.

உங்கள் கவனத்திற்கு இதுவரை கொண்டுவரப்படாத முக்கியமான அபிப்பிராயம் ஒன்றையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் மூன்று இனங்களையும் சேர்ந்த மக்களில் பெரும்பாலானோர் இந்தியப் படையினரை உடனடியாக வாபஸ் பெறவேண்டும் எனக் கோரிவருகின்றனர்.

அரசாங்க ஆதரவு பெற்ற குடியேற்றக் கொள்கையை தொடர்ந்தும் அமுல் செய்வதன் மூலம் தமிழ் பேசும் பிரதேசங்களின் குடித்தொகை சமநிலையைக் குலைப்பதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டு முயற்சிப்பதாக நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள்.

நான் அக் கருத்தை வன்மையாக மறுக்கிறேன். இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் அப்பகுதிகளில் எவ்வித மான குடியேற்றங்களும் இடம் பெற்றிருக்கவில்லை.

தங்களுடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம், தாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை களையும் பணியில் ஈடுபட்டிருந்தீர்கள்.

அப்பணி முற்றும் பூர்த்தியாகவில்லை. அத்துடன் அவர்களை பேச்சுவார்த்தையில் பங்குகொள்ள வைக்கவும் முடியவில்லை.

இந்தியப் படையினர் வாபஸ் பெற்றுக் கொண்ட பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் தங்கள் ஆயுதங்களை கைவிடுதலை உறுதிப்படுத்தும் வல்லமை எமக்கு இருக்கிறது.

இலங்கை அரசின் திட்டவட்டமான கோரிக்கையின் பேரிலன்றி, இலங்கைக்குள் இந்திய அரசாங்கத்திற்கு அல்லது அதன் ஆயுதப் படைகளின் எந்தவொரு நடவடிக்கையும் இறைமையுடைய நாட்டின் உள்விவகாரங்களில் மேற்கொள்ளப்படும் ஒரு பாரதூரமான தலையீடாகவும், சர்வதேச சட்டத்தின் மீற முடியாத நியதிகளை மீறுவதாகவே அமையும். தங்களுடைய நோக்கம் அதுவல்ல என்பதே எனது நம்பிக்கை."

## ராஜீவ் கோபம்

பிரேமதாசாவின் மேற்கண்ட கடித வாசகங்கள் ராஜீவ் காந்திக்கு எரிச்சல் ஊட்டியிருக்கும் என்பது திண்ணம்.

பிரேமதாசாமீது ராஜீவ் காந்தி எந்தளவு கோபத்துடன் இருந்தார் என்பது பின்னர் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி மூலம் புலனாகியது.

ராஜீவ் காந்தி பலியான பின்னர் நீண்ட நாள் கழித்து ஜனாதிபதி பிரேமதாசா இந்திய விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அச் சமயம் தனது பாரியார் ஹேமா சகிதம் சோனியாவை சந்திக்க விரும்பியிருந்தார். ஆனால், பிரேமதாசாவை சந்திக்க சோனியா மறுத்துவிட்டார்.

இந்தியப் படையினரை புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யுமாறு பிரேமதாசா கேட்டிருந்தும், இந்தியப் படையினர் புலிகளை தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர்.

பிரபாகரன் எங்கிருக்கிறார் என்ற தகவலைப் பெறுவதுதான் இந்தியப் படையினதும், உளவு அமைப்புக்களதும் பிரதான நோக்கமாக இருந்தது.

முல்லைத்தீவில் சாதாரண உடையில் நடமாடி புலிகள் பற்றிய தகவலைத் திரட்டிக் கொண்டிருந்த ஒருவரைப் பற்றி புலிகளுக்கு தகவல் கிடைத்தது.

அடிக்கடி அங்கு இந்தியப் படையினர் வந்து செல்வதை அவதானித்த புலிகள் பலநாட்களாக தாக்குதலுக்கு இலக்கு வைத்திருந்தனர்.

01.07.89 அன்று முல்லைத்தீவு நகருக்கு குறிப்பிட்ட உளவாளி வந்தபோது புலிகள் இயக்க பிஸ்டல் குழுவினர் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

கொல்லப்பட்ட உளவாளியின் பெயர் சுகுமாரன். 'றோ' உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்.

## மோதல்கள்

யாழ்ப்பாணம் நெல்லியடியில் இந்தியப் படையினரும் அவர்களுடன் இணைந்து செயற்பட்ட இயக்கமொன்றின் உறுப்பினர்களும் இணைந்து புலிகளின் அணி ஒன்றை சுற்றிவளைக்க முற்பட்டனர்.

புலிகள் பதிற்தாக்குதல் நடத்திக் கொண்டு சுற்றிவளைப்பை உடைத்து தப்பிச் சென்றனர். அம்மோதலில் ஐந்து படையினரும், இயக்க உறுப்பினர்கள் சிலரும் பலியாகினர்.

அதே நாள் முல்லைத்தீவு அளம்பில் பகுதியில் இந்தியப் படையினரின் ரோந்துப் படையணிக்கும் புலிகளுக்கும் இடையே பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றது. கிட்டத்தட்ட இரண்டு மணி நேரமாக மோதல் தொடர்ந்தது.

இந்தியப் படை தரப்பில் சிலர் கொல்லப்பட்டனர். மோதலின் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டைப் பகுதியில் பனங்கள்ளை மூக்குமுட்ட குடித்துவிட்டு ஈ.என்.டி.. எல்.எஃப். உறுப்பினர்கள் சிலர் கூட்டமாகச் சென்று கொண்டிருந்தனர்.

அப்பக்கமாக வந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் அவர்களை இனம் கண்டு கொண்டு சுடத் தொடங்க, ஈ.என்.டி. எல்.எஃப். உறுப்பினர்கள் தப்பியோட முற்பட்டனர். ஒருவர் பலியானார். நான்குபேர் காயமடைந்தனர். 09.07.89 அன்று அச் சம்பவம் நடைபெற்றது.

10.07.89 அன்று பருத்தித்துறை இந்தியப் படை காவலரண்மீது அதிரடி தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. இந்தியப் படையினர் மூன்று பேர் பலியாகினர். புலிகள் தரப்பில் சேதம் எதுவும் இல்லை.

யாழ்ப்பாணம் இளவாலைச் சந்தியில் இந்தியப் படையினர் நின்று கொண்டிருந்தனர். அப்பக்கம் சென்ற பெண்கள்மீது அவர்களது கண்கள் பாய்ந்து கொண்டிருந்தன.

10.07.89 அன்று இளவாலைச் சந்திக்கு வந்து சேர்ந்த இந்தியப் படையினரை நோக்கி புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தியதில், நான்கு இந்தியப் படையினர் பலியாகினர்.

மட்டக்களப்பு பாண்டிருப்பு பகுதியில் இருந்த இந்தியப் படை காவலரண் ஒன்று 13.07.89 அன்று தாக்கியழிக்கப் பட்டது. மூன்று படையினர் பலியாகினர். புலிகள் தரப்பில் சேதம் இல்லை.

15.07.89 அன்று முல்லைத்தீவு ஒட்டுசுட்டானில் இருந்து நெடுங்கேணிக்கு வாகனத் தொடராக சென்று கொண்டிருந்தது இந்தியப் படை.

காட்டுப்பகுதியில் பதுங்கி நிலை எடுத்திருந்த புலிகள், கண்ணிவெடிகளையும் புதைத்து வைத்திருந்தனர்.

வாகனத் தொடர் நெருங்கியதும் கண்ணிவெடி வெடிக்க, புலிகளின் துப்பாக்கிகளும் சீறத் தொடங்கின.

அதே சமயம் பின்னே வந்த வாகனங்களில் இருந்த படையினர் கீழே குதித்து வாகனங்களை கவசமாகக் கொண்டு நிலை எடுத்து தாக்கத் தொடங்கினர்.

அதனால் புலிகளின் அணிகளால் ஆயுதங்களை கைப்பற்ற முடியவில்லை. பலியான சிப்பாய்களின் உடல்களையும், ஆயுதங்களையும் தூக்கி ஏனைய வாகனங்களில் போட்டுக் கொண்டு இந்தியப் படையினர் சென்றனர்.

இரண்டு வாகனங்கள் சேதமாகின. குறைந்தது பத்துப் படையினராவது பலியாகி இருக்கக்கூடும்.

மட்டக்களப்பு பழுகாமம் பகுதியில் ஈ.என்.டி.எல்.எஃப். இயக்க உறுப்பினர்கள் மூவரை புலிகள் சுட்டுக் கொன்றனர். இச்சம்பவமும் 15.07.89 அன்றுதான் நடைபெற்றது.

17.07.89 அன்று மட்டக்களப்பு கல்முனையில் இந்தியப் படையினர் நடந்து ரோந்து சென்றனர். இச் செய்தி புலிகளுக்கு எட்டிவிட்டது.

எங்கு வசமாக மாட்டுவார்கள், எப்போது தாக்கலாம் என்று இலக்குத் தேடித் திரிந்த புலிகளின் தாக்குதல் குழுவொன்று வந்தது.

ரோந்து சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. படையினரும் திருப்பித் தாக்கினர். மோதலின் முடிவில் இரண்டு இந்தியப் படையினர் பலியாகினர். அவர்களுடன் துணையாகச் சென்ற ஈ.என்.டி. எல்.எஃப். உறுப்பினர்கள் மூவர் காயமடைந்தனர்.

ஒரு புறம், இந்தியப் படையை வெளியேறுமாறு கோரும் இலங்கை அரசின் நெருக்குதல், மறுபுறம் புலிகளின் தொடர் தாக்குதல்கள், இந்திய அரசுக்கு 'ஏனடா அங்கே போய் கால் வைத்தோம்?' என்றாகிவிட்டது.

(தொடர்ந்து வரும்)

# பிரபாவுக்கு வீசப்பட்ட வலைகள்

**பி**ரபாகரனிடம் பத்து வருட காலத்திற்கு வடக்கை ஒப்படைக்க தயாராக இருந்ததாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியிருந்தார். அவர் கூறியதை அமெரிக்க சஞ்சிகை 'ரைம்' சமீபத்தில் வெளியிட்டது.

அதனால் ஏற்பட்ட சர்ச்சைகள் யாவரும் அறிந்ததே. பிரேமதாசாவும் கொடுக்க முன்வந்தார், "விஜயதுங்கா கூட கொடுக்க இசைந்தார் என்றெல்லாம் பொதுஜன முன்னணியினரும் பதிலுக்கு பதிலாகப் பல தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்திய அரசுகூட மாகாண சபை நிர்வாகத்தில் 99 வீதத்தை புலிகளிடம் ஒப்படைக்க முன்வந்திருந்தது.

மொத்தத்தில், பல சந்தர்ப்பங்களில் பலர் பிரபாகரனுக்கு அதிகாரத்தை கையளித்து கைக்குள் போடப்பார்த்தனர் என்பதை புலிகளுக்கு எதிரானவர்களது தகவல்களே உறுதி செய்கின்றன.

இந்த நேரத்தில் தமிழ் நாட்டைச் சேர்ந்த அரசியல் தலைவர் பழ.நெடுமாறன் எழுதிய நூலில் இருந்து சில பகுதிகளை தருகிறேன். இந்த மதிப்பீடு சரியா என்பதை உங்கள் முடிவுக்கே விட்டு விடுகிறோம்.



லெனின் நடத்திய புரட்சிக்கு ரசிய இராணுவம் ஒத்துழைத்தது.

மசேதுங் நடத்திய புரட்சிக்கு சோவியத் ஒன்றியம் இடைவிடாது உதவியது.

வியட்நாம் விடுதலைக்கு சோவியத்தும், சீனாவும் ஒத்துழைத்தன.

இந்திய விடுதலைக்காக நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போராடியபோது ஜெர்மன், ஜப்பான், இத்தாலி போன்ற நாடுகள் உதவின.

பாலஸ்தீன போராட்டத்திற்கு 120 நாடுகளுக்கு மேல் ஆதரவு தருகின்றன.

ஆனால் பிரபாகரன் அவர்களுக்கு எந்தவொரு நாட்டின் உதவியும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் அவர் தமது போராட்டத்தை வெற்றிகரமாக முன்நடத்திச் செல்வதன் இரகசியம் என்ன?

பிரபாகரனின் இலட்சிய உறுதிதான் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அடித் தளமாக இருந்து வருகிறது. இவருக்கு முன் தமிழீழ மக்களின் தலைவர்களாக இருந்த பலருக்கு இந்த இலட்சிய உறுதி இல்லாததன் விளைவாகவே தமிழீழப் போராட்டம் பல பின்னடைவுகளைச் சந்தித்தது.

சிறைவாசம் சிலரது சித்தத்தை குலைத்தது. இராணுவ கொடுமைகள் சிலரை நடுங்க வைத்தது. பதவி ஆசை பலரைப் பல்லிளிக்க வைத்தது. ஆனால் சிறீலங்கா அரசும், இந்திய அரசும் எவ்வளவோ ஆசை வலைகளை விரித்துப் பார்த்தன. படைபலத்தை காட்டி மிரட்டிப்பார்த்தன.

ஆனாலும் பிரபாகரனின் இலட்சிய உறுதியைக் குலைக்க முடியவில்லை.

அடர்ந்த கானகத்தின் நடுவே அமைக்கப்பட்டிருந்த பாசறையில், தம்பி பிரபாகரனுடன் நான் பேசிக் கொண்டிருந்தபோது அவர் கூறிய சில வார்த்தைகள்;

"அண்ணா! தமிழீழ இலட்சியத்தை ஒரு பொழுதும் கைவிடமாட்டேன். எங்கள் போராட்டத்தின் முடிவில் தமிழீழம் மலரும். அல்லது நான் மடிவேன். அதைத் தவிர வேறு இடைப்பட்ட வழி எதுவுமே இல்லை."



படிப்பகம்

www.padippakam.com

# அலசுவது- இராஜதந்திரி

# எழுச்சி பெற்றுவரும் தமிழ்த் தேசிய உணர்வு

# வீழ்ச்சி பெற்றுவரும் தமிழ்க் கட்சிகள்!

தலைநகர விடுதிகளில் இருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்டதை நியாயமான நடவடிக்கை என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே கூறியிருக்கிறார்.

அப்பட்டமான அநியாயம் ஒன்றுக்கு ஆளும் கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவரே வக்காலத்து வாங்கியிருக்கிறார். ஆயினும் எந்தவொரு தமிழ்க் கட்சியும் அமைச்சரின் நியாயப்படுத்தல் தொடர்பாக கண்டனத்தை தெரிவித்திருக்கவில்லை.

**ஆளும் கட்சியின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ப எதிர்க்கட்சியை கண்டித்து அறிக்கை விடுகின்ற தமிழ்க் கட்சிகள், ஆளும் தரப்பினரின் ஏடாகூடமான அதிகாரத் தோரணையான பேச்சுக்கள் தொடர்பாக கண்டும் காணாததுபோல இருந்து வருவதையே அவதானிக்க முடிகிறது.**

தமிழர் விடுதலைக் கூட்டணி முதற்கொண்டு ஆயுதப் போராட்டத்தை கைவிட்டு மிதவாதப் பாதைக்கு திரும்பியுள்ள தமிழ்க் கட்சிகள்வரை தமிழ்பேசும் மக்களின் மனோநிலைக்கு நேர் எதிரான நிலைப்பாட்டிலேயே உள்ளன.

**இக் கட்சிகளில் கூட்டணியினர்தான் 1976 மே மாதம் 14ம் திகதி வட்டுக்கோட்டையில் கூடி தமிழ் பேசும் மக்கள் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதற்கு தமிழ் ஈழமே முடிந்த முடிவு என்று தீர்மானம் இயற்றினர்.**

அதன் முன்னரும் தமிழர் சுயாட்சிக் கழகத் தலைவர் நவரத்தினம் போன்றோரால் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதும்கூட, கூட்டணியினரால் முன்னெடுக்கப்பட்டபோதே அக்கோரிக்கை மக்கள் ஆதரவு பெறத் தொடங்கியது.

கூட்டணியினர் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்த காலகட்டம்தான் அக் கோரிக்கை பரவலான ஆதரவைப்பெற முக்கிய காரணமாகவிருந்தது.

தரப்படுத்தல் மூலம் தமிழ் மாணவர்களின் கல்விக்கு குழிதோண்ட சிறிமாவோ அம்மையாரின் அரசு முன்வந்தபோது தமிழ் மாணவர்கள் கிளர்ந்தெழுந்தனர்.

**தமிழ்ச் சமூகத்தின் உயிர்நாடியாக விளங்கிய கல்வியில் கைவைப்பது மூலம், தமிழ்ச் சமூகத்தைப் பலவீனமடையச் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கையே தரப்படுத்தலாகும்.**

எனவே, தமிழீழக் கோரிக்கைக்கான தூண்டுதல்களில் முக்கியமான காரணிகளில் ஒன்றாக தரப்படுத்தல் அமைந்திருந்தது.

எனினும், தமிழ் மக்கள் தாமாக முன்வந்து வீதியில் இறங்கி, "எங்களுக்கு தமிழீழம் பெற்றுத் தாருங்கள். தமிழ்ழமே முடிந்த முடிவு" என்று கூட்டணியினரிடம் கேட்கவில்லை. கோரிக்கையும் விடவில்லை.

ஆனால், சிறீலங்கா சுதந்திரமடைந்த காலம் முதல், ஆட்சி அதிகாரத்தை தங்கள் கையில் வைத்திருந்த பேரினவாத ஆட்சியாளர்களினால் ஏமாற்றப்பட்டும், உதாசீனப்படுத்தப்பட்டும், தேசிய கௌரவம் சேதப்படுத்தப்பட்டும் வந்த தமிழ் பேசும் மக்கள் ஆட்சியாளர்கள்மீது நம்பிக்கை இழந்திருந்தனர்.

தனிச் சிங்கள சட்டம், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என்பவற்றின் மூலம், தமிழ் பேசும் மக்களின் மொழி, நிலம் என்பவற்றை விழுங்கத் தொடங்கிய ஆட்சியாளர்கள், கல்வியிலும் கைவைப்பதற்காக தரப்படுத்தலை கொண்டுவந்தபோது நம்பிக்கையீனம் விசுவரூபம் எடுத்திருந்தது.

**தமிழ் மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் 'நமக்கென்றொரு நாடு இருந்தால்தான் தலைநிமிர்ந்து வாழலாம்' என்ற கருத்து தலைதூக்கியிருந்தது.**

மாணவர்கள், இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்ட எழுச்சியை கவனித்த கூட்டணித்தலைமை, மக்களிடம் அரசுமீது ஏற்பட்ட நம்பிக்கையீனங்களையும் நாடி பிடித்தறிந்து தமிழீழக் கோரிக்கையை முன்வைத்திருந்தது.



அக் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோது நூற்றுக்கு நூறுவீதமான தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டனர் என்று அர்த்தமாகாது. நூற்றுக்கு ஐம்பது வீதமான மக்கள்தான் முதலில் ஏற்றுக்கொண்டனர்.

**அதன் பின்னர் தமிழீழக் கோரிக்கையின் நியாயங்களை வலியுறுத்தியும், சுதந்திரம் பெற்ற சுண்டைக்காய் நாடுகளின் வரலாறுகளை உதாரணம் காட்டியும், பல்வேறு உணர்ச்சிமயமான பிரசாரங்கள் மூலமும் பரந்துபட்ட மக்களிடம் தமிழீழக் கோரிக்கை கொண்டு செல்லப்பட்டது.**

அதேபோன்றுதான், கூட்டணியினரால் தமிழீழக் கோரிக்கையை தொடர்ந்து முன்னெடுக்க முடியாதபோது, "ஆயுதப் போராட்டமே அவசியம் என்றும், உடனே ஆயுதங்களை கையிலெடுங்கள்" என்றும் இயக்கங்களிடம் மக்கள் தாமாக முன்வந்து கோரிக்கை எதனையும் முன்வைத்திருக்கவில்லை.

**ஊர் ஊராக கருத்தரங்குகள் நடத்தியும், அரசியல் வகுப்புக்கள் நடத்தியும், கூட்டணியினர் பாராளுமன்றத்தில் குரல் கொடுப்பதாலோ, அரசுக்கு கோரிக்கை மனுக்கள் கொடுப்பதாலோ, ஒடுக்குமுறைகள் நின்றுவிடப்போவதில்லை என்பதை எடுத்துக் கூறியுமே இயக்கங்கள் மக்களின் அனுதாபத்தை திரட்டின.**

அரசின் அடக்குமுறைகளும், முப்படைகளின் அத்துமீறல்களும் காரணமாக அவற்றுக்குப் பதிலடி கொடுக்கும் தேவை உண்டு என்பதை மக்களில் ஒருசாரார் ஏற்றுக்கொண்டனர்.

**எனினும் ஆயுதப்போராட்ட ஆரம்ப காலத்தில், ஆயுதப் போராட்டமா? அகிம்சை போராட்டமா? எது தேவை என்று கணிப்பு நடத்தியிருந்தால் ஆயுதப் போராட்டத்தை ஐம்பதுவீதமான மக்கள்கூட ஆதரித்திருப்பார்களோ என்பது சந்தேகத்திற்கு உரியதேயாகும்.**

பின்னர், ஆயுதம் ஏந்திய நடவடிக்கைகளின் முன்னேற்றமும், திருப்பங்களுமே ஆயுதப் போராட்டம் பற்றிய நம்பிக்கைகளை மக்களிடம் ஏற்படுத்தியதோடு, இயக்கங்களுக்கும் போராளிகளுக்கும் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுத்திருந்தது.

ஆயுதம் ஏந்திய போராட்டம் என்பது ஐந்து வருடத்திலோ, பத்துவருடத்திலோ முடிந்துவிடக்கூடிய ஒன்றல்ல என்பது தெரிந்தும், ஆயுதப் போராட்டத்தை ஒடுக்க முனையும் அரசு தமிழ் பேசும் மக்களது தாயகப் பிரதேசங்களில் மூர்க்கத்தனமான அழிவுகளை கட்டவிழ்த்து விடத் தயங்காது என்று தெரிந்துமே ஆயுதப் போராட்டப் பாதையில் இயக்கங்கள் காலடிவைத்தன.

இந்திய அரசு ஈழப்போராட்டத்தை ஆதரிக்கமாட்டாது என்ற விடயம்கூட ஆயுதம் ஏந்திப் போராடப் புறப்பட்ட இயக்கங்கள் பலவற்றிற்கு தெரிந்தே இருந்தது. இந்திய அரசு எதிர்த்தாலும் சொந்தக்காலில் நின்று போராட முடியும் என்ற நம்பிக்கையில்தான் எல்.ரி.ரி.ஈ., ஈ.பி.ஆர்.எல்.எஃப்., புளொட், என்.எல்.எஃப்.ரீ. போன்ற இயக்கங்கள் செயற்பட்டன.

எனவே, இங்கு மட்டுமன்றி போராட்டங்கள் வெற்றி பெற்ற நாடுகளதும், மக்களதும் வரலாறுகளில் கட்சிகளதும், தலைவர்களதும் பாத்திரம் என்பது பின்வரும் இரண்டு விடயங்களில்தான் முக்கியத்துவம் பெறுகிறது.

**1. தாம் வாழும் காலகட்டத்திற்கு ஏற்ற சரியான கொள்கையை வகுத்து முன்வைப்பது.**

**2. அக் கொள்கையை நிறைவேற்றத் தேவையான போராட்ட வழிமுறைகளை தீர்மானிப்பது.**

சகல சந்தர்ப்பங்களிலும் மக்கள் சரியாகத்தான் சிந்திப்பார்கள், சரியான திசையில்தான் பயணிப்பார்கள் என்றால் அவர்களுக்கு வழிகாட்ட கட்சிகள் தேவைப்பட்டிருக்காது. தலைவர்கள் தோன்றியிருக்கமாட்டார்கள்.

**மக்களால்தான் துரையப்பா, அருளம்பலம், ராஜன் செல்வநாயகம், தேவநாயகம் போன்றோரும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கு வாக்குப் போட்டவர்கள் சரியாகத்தான் சிந்தித்தனர் என்று நாம் ஏற்க வேண்டுமாயின், தமிழினத்தின் தலைவர்கள் பட்டியலில் துரையப்பாக்களது பெயர்களையும் பொறித்தாக வேண்டி இருக்கும்.**

துரையப்பாவுக்கு வாக்குப்போட்ட பலரது பிள்ளைகள் அதே துரையப்பாவைச் சுட்ட புலிகள் அமைப்பில் இணைந்து போராடினர். துரையப்பாவை ஆதரித்ததற்காக அவருக்கு வாக்குப்போட்ட மக்கள் பலர் பின்னர் மனம் வருந்தவும் செய்தனர்.

ஆக, மக்கள் சில சமயங்களில் மிக பின்தங்கி நின்று சிந்திப்பதும் உண்டு. சில சமயங்களில் முன்னே ஓடிச் சென்று சிந்திப்பதும் உண்டு. மக்களின் வாலைப் பிடித்துக்கொண்டு அவர்களது போக்குக்கெல்லாம் இழுபட்டுச் செல்வது உண்மையான கட்சியாக இருக்க முடியாது. இழுபட்டுச் செல்பவர்கள் தலைவர்களாக இருக்கவும் முடியாது.

மக்களது அடிமைத்தனமான சிந்தனைகளின் பிரதிநிதிகளாகவே துரையப்பா போன்றோர் அன்றிருந்தனர்.

**மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்க முற்படுவது தவறானதல்ல. ஆனால் அன்றாடப் பிரச்சனையை தீர்ப்பது என்ற போர்வையில் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கான போராட்டங்களை மழுங்கடிப்பதும், மக்களின் நியாயமான கோபங்களை முழுங்கடிக்கச் செய்வதுமான செயற்பாட்டிலேயே துரையப்பா போன்றோர் ஈடுபட்டிருந்தனர்.**

தங்கள் எஜமானர்களான தென்னிலங்கைக் கட்சித் தலைவர்களையும், தலைவிகளையும் பெருமனம் கொண்டவர்களாக காண்பித்து, அவர்கள் முன்பாக கையேந்தி நின்று, கருணை மனுப்போடுவதும், அவர்களது கருணைக் கண்கள் திறக்கும்வரை காத்திருக்கும் மனோபாவத்தை மக்களிடம் ஏற்படுத்துவதுமே துரோக அரசியலின் அடிப்படையாக அமைந்திருந்தது.

**மக்கள் கொதித்தெழும்போதெல்லாம், 'உங்கள் குறைகளை அரசாங்கத்திடம் எடுத்துச்சொல்லி இருக்கிறோம், பரிகாரம் காணப்படும்' எனக் கூறுவதன் மூலம் மக்களின் கொதிப்பில் இருந்தும், அதிருப்தியில் இருந்தும் அரசாங்கத்தை காப்பாற்றுவது துரோக அரசியலின் அணுகுமுறையாக இருக்கும்.**

மக்களின் பிரச்சனையில் தாம் அக்கறைப்படுவதாக காண்பித்தபடி, அரசுக்கும் பாதிக்கப்படும் மக்களுக்கும் இடையே தற்காலிக சமரசங்களை ஏற்படுத்துவதன் ஊடாக அரசிடமும் நல்ல பெயர் பெற்றுக் கொண்டுவிடுவர்.

**'போராடினால் எதுவும் கிடையாது. உள்ளதும் போய்விடும். பக்குவமாகப் பேசித்தான் பெறவேண்டும்' போன்ற கருத்துக்களை மக்களிடம் பரப்புரை செய்து, மக்களை போர்க்குணமில்லாத கும்பலாக, கைகட்டி பின் செல்லும் கூட்டமாக மாற்றி விடுவதன் மூலம்தான் தங்கள் இயலாமைகளையும், சுயரூபங்களையும் துரோக அரசியல் அல்லது பிற்போக்கு அரசியல் மூடிமறைத்துக்கொள்கிறது.**

1977ற்கு முன்னர் வடக்கு-கிழக்கில் நிலை பெற்றிருந்த மேற்படி பிற்போக்கு அரசியல், தற்போது மறுபடியும் தோற்றம் காட்டிவருகிறது.

**இதிலுள்ள விசித்திரம் நிறைந்த சோகக் கதை யாதெனில், துரோக அரசியல், மிதவாத அரசியல் இரண்டையும் ஒருகாலத்தில் நிராகரித்த இயக்கங்களின் ஊடாகவே, அந்த பிற்போக்கு அரசியல் தனது புதைகுழியில் இருந்து முடைநாற்றமடித்தபடி எழுந்து கொண்டிருக்கிறது.**

தமிழ் மக்களுக்கு இன்று தேவை நிவாரணமும், வேலை வாய்ப்புக்களும், கட்டட நிர்மாணங்களும் மற்றும் சலுகைகளுமே என்று நாக்கூசாமல் கூறுகின்றவர்களாக முன்னாள் போராளித் தலைவர்களே மாறிநிற்கும் அவலம் நேர்ந்திருக்கிறது.

**யாழ் நகரை சிங்கப்பூராக்கப் போவதாக சீமாட்டி ஒருவர் கூறியிருக்கிறார். இதே சீமாட்டியின் கணவர்தான் யாழ் நகரில் நவீன சந்தையும், நவீன விளையாட்டரங்கும் கட்டிய துரையப்பாவை துரோகி என்று தமிழ் இளைஞர்களுக்கு இனம்காட்டிய தலைவர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்பது மற்றொரு விசித்திரமாக அமைகிறது.**

மக்களின் அன்றாடப் பிரச்சனைகளை தீர்க்க முற்படுவதோ, அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முற்படுவதோ தவறில்லை. ஆனால், பற்றி எரியும் இனப்பிரச்சனையும், தமிழ்பேசும் மக்களின் அரசியல் பலத்தை நசுக்கிப் போடும் இராணுவ முனைப்புக்களும் தீவிரம் பெற்றுள்ள இன்றைய காலகட்டத்தில், இவற்றுக்குப் புறம்பான சொர்க்கபுரிக் கதைகளில் மக்களை ஆழ்த்துவதும், ஆசை காட்டுவதும் படு பிற்போக்கான செயற்பாடுகளேயாகும்.

கடந்த காலத்தில் தமிழீழக் கோரிக்கைக்கு மக்கள் ஆதரவைத் திரட்டவும், பின்னர் ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவைத் திரட்டவும் பலத்த பிரயத்தனம் தேவைப்பட்டது.

**ஆனால், இன்று, ஆட்சியாளரின் நடவடிக்கைகள், பாதுகாப்புப் படையினரின் அணுகுமுறைகள் மற்றும் பேரினவாத பாதுகாப்பு விதிமுறைகள் என்பன தமிழ் பேசும் மக்களை உளவியல் ரீதியாக முன்பைவிட பாரியளவில் அந்நியப்படுத்தி உள்ளன. எங்கும் அரசுக்கு எதிரான அதிருப்தியே தலைதூக்கியுள்ளது.**

படையினரால் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் படை அதிகாரிகளுக்கு மாலை போட்டு வரவேற்கின்ற சிலரை வைத்தும், தமிழ்க் கட்சிகளின் அலுவலகங்களுக்கு சென்று தம் சொந்த நலன்களுக்காக துதி பாடும் ஒரு சாராரை வைத்தும் தமிழ் மக்களின் இன்றைய மனோநிலையை எடைபோடுவதும், சலுகை நாடி அலையும் கூட்டமாக சித்தரிப்பதும் சரியானதாக அமைந்துவிட முடியாது.

**1977ல் தமிழீழம் கோருவதற்கு முன்வைக்கப்பட்ட காரண காரியங்களைவிட தமி கோரிக்கையை நியாயப்படுத்தும் விதமான மிகப் பாரியளவிலான காரண காரியங்கள் இன்று தோன்றியுள்ளன என்பதே உண்மையான நிலவரமாகும்.**

அதுமட்டுமன்றி முன்பு எப்போதும் காணமுடியாதளவுக்கு வடக்கு-கிழக்கில் மட்டுமல்லாமல், மலையகத்திலும் தமிழ் தேசிய உணர்வு மேலெழுந்திருக்கிறது.

இந்த உண்மைகளை கண்களை மூடிக் கொண்டு மறுப்பதுடன், அரசுடன் ஒட்டி உறவாடும் தமது செயற்பாடுகள் மூலம் வெளியுலகின் கண்களிலும் தவறான தோற்றப்பாட்டை காட்டவே தமிழ்க் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடுகள் உபயோகமாகி வருகின்றன.

எனினும் மக்களின் மனோபாவத்திற்கு எதிரான இக்கட்சிகள் தங்கள் வீழ்ச்சியை தாங்களே தேடிக்கொள்ள நீண்டநாளாகாது.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

# நேற்று யாழகத்தில்—இன்று தேனகத்தில்

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் பட்டியலில் உள்ளவர்கள் எவரும் உயிருடன் இல்லை என்பது சர்வ நிச்சயம்.

சர்வதேச மன்னிப்புச் சபை அதனை உறுதி செய்த பின்னரும்கூட, கண்ணிருந்தும் குருடராய், காதிருந்தும் செவிடராய் ஜனாதிபதியிடம் சென்று "எங்கள் பிள்ளைகள் எங்கே?" என்று காணாமல் போனோர் சங்கத்தினர் விசாரித்தார்கள்.

உடனே அம்மையார் கண்கலங்கி விட்டாராம். கண்கள் குளமாகி கண்ணீர் வழிந்தோட கவலை நிழலாட, சோகமே வடிவமாக நின்ற அம்மையார், "கவலைப்படாதீர்கள் சகோதரிகளே, விசாரணைக் கமிஷன் போடுகிறேன்!" என்றாராம்.

என்னே ஒரு புளகாங்கிதமாக, புல்லரிப்பாக மேற்கண்ட செய்திகளைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்தார்கள்.

ஜனாதிபதியைச் சந்தித்தவர்களின் பட்டியலில் தங்கள் பெயரும் வரவேண்டும் என்பதற்காக, ஜனாதிபதியுடனான சந்திப்பை 'பாசமலர் பட கிளைமாக்ஸ்' போல அழுதழுது விபரித்த அடிமைகளும் உள்ளனர்.

காணாமல் போனோர் சங்கத்தில் உள்ள சிலருக்கும் தங்கள் உறவினர்கள் பற்றிய கவலையைவிட, அந்தச் சங்கத்தை வைத்து தங்கள் அபிலாசைகளை பூர்த்தி செய்யும் ஆசை வந்துவிட்டது.

மகா கொடுமை யாதெனில், ஜனாதிபதியுடன் நின்று புகைப்படம் எடுக்க காணாமல் போனோரின் சில உறவினர்கள் வெகு விருப்பம் தெரிவித்ததுதான்.

மக்களின் நியாயமான கோபாவேசம் தவறான வழி நடத்தலால் வடிந்து வற்றிப்போனதின் துல்லியமான பிரதிபலிப்புக்களே அவை.

காணாமல் போனோர் சங்கம் ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்பு மூலம் இலாபம் அடைந்தது ஜனாதிபதியும், அரசும், படைகளும் மட்டும்தான்.

காணாமல் போனோருக்காக அம்மையார் கண்ணீர் வடித்த சோகத்தை, காணாமல் போனோரின் உறவினர்கள் மூலமே பிரசாரப் படுத்தியாகிவிட்டது.

எத்தனை விதமாக மூடிமறைக்க முயன்றும் அம்பலமான மகா அநியாயத்தை, 'ஜனாதிபதிக்கு தெரியாமல் நடந்த சங்கதிகளாக்கும்' என்று உலகை நினைக்க வைத்தாகிவிட்டது.

காணாமல் போனோர் சங்கம் ஈ.பி.டி.பி. மத்தியஸ்தத்துடன் அம்மையாரைச் சந்தித்தது டிசம்பர் 28ல். விசாரணை கமிஷன் போடுவதாக அம்மையார் சொன்னதாகவும், உடனே கமிஷன் வரும், "மூன்று மாதத்தில் முடிவு தெரியும்; அஞ்சற்க!" என்று உரைத்ததாகவும், காணாமல் போனோர் சங்கத்தினர் சிலரே ஜனாதிபதியின் பிரசாரகர்கள்போல செய்திகளும் பரப்பினர்.

வாக்குறுதி கொடுத்து வெற்றிகரமான இரண்டாவது மாதமாகிவிட்டது; கமிஷன் வரவே இல்லை.

காணாமல் போனோருக்காக நான் முந்தி நீ முந்தி என்று குட்டிப் போராட்டங்கள் நடத்திவிட்டு, கமராக்களுக்கு போஸ் கொடுத்த முகவிலாசம் தேடியவர்களையும் காணவில்லை.

தங்கள் சொந்தச் செலவிலேயே புகைப்படம் எடுத்து, அதனை பத்திரிகைகளுக்கு கொடுத்த ஆட்களும் இருக்கிறார்கள். பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளர் எடுத்த புகைப்படத்தில் தங்கள் திருமுகம் இடம்பெறாமல் போயிருந்தால் என்ன செய்வது? அதுதான் தமது செலவிலேயே புகைப்பட உபயம். பத்திரிகைகளுக்கு செலவு மிச்சம்.

காணாமல் போனோர் உபயத்தில் சிலருக்கு பிரபலம் கிடைத்தாயிற்று. ஜனாதிபதிக்கும் நல்ல பெயர் கிடைத்தாயிற்று.

இப்படியெல்லாம் சமாளித்து மக்களைத் திசை திருப்புவது பெரிய கஷ்டமல்ல என்ற நம்பிக்கையில்தான், மட்டக்களப்பில் வெள்ளை வேன் உலா தொடங்கியிருக்கிறது.

யாழ் குடாநாட்டில் இராணுவ அதிகாரி ஜானக பெரேரா இருந்தபோதுதான் காணாமல் போனோர் பட்டியல் ஆரம்பமானது.

அத்தனையும் ஏன்? தெற்கில் ஜே.வி.பி. காலத்தில் மனித உரிமை மீறல்கள், காணாமல் போனோர் தொடர்பாக அம்மையாரால் நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன்களில் ஜானக பெரேராமீதும் புகார்கள் கூறப்பட்டுள்ளன.

அவ்வாறு இருந்தும் மட்டக்களப்பில் புலிகளை ஒடுக்க ஜானக பெரேராதான் சரியான அதிகாரி என்ற நம்பிக்கையில்தான் அம்மையார் அரசு அங்கு அனுப்பி வைத்திருக்கிறது.

அமைதியை நிலைநாட்டுவதற்கு ஜானக பெரேரா கையாளக்கூடிய வழிமுறை எப்படி இருக்கும் என்பது அம்மையாருக்குத் தெரியாதா என்ன?! பட்டவர்த்தனமாகத் தெரியும்.

அதுமட்டுமல்ல, மட்டக்களப்பு எம்.பி ஜோசப் பரராஜசிங்கம் தந்தி மேல் தந்தி அடித்து அம்மையாரின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இன்றுவரை ஒரு சம்பிரதாயத்திற்குக்கூட பதில் சொல்லப்பட்டதில்லை.

ஆக, தெரிந்தே செய்யப்படுகிறது; அறிந்தே நடக்கிறது. காணாமல் போதல்களும் போர் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தும் வழிமுறையின் ஒரு அங்கம் என்று நம்பித்தான் காரியங்கள் நடக்கின்றன.

இன்னொரு விஷயம்-இன்றுவரை ஜோசப் பரராஜசிங்கம் தவிர வேறு யாரும்-கூட்டணித் தலைவர்கள் உட்பட-மட்டக்களப்பில் காணாமல் போவோர் தொடர்பாக மூச்சுக் காட்டவில்லை.

ஒன்று இரண்டாக ஆரம்பிக்கும்போதே முழு எதிர்ப்பைக் காட்டினால், பல நூறாக காணாமல் போவதையாவது தடுக்கலாம். ஆனால் பல நூறு பேர் காணாமல் போய், அது ஒரு பெரிய பிரச்சனையாகி, அதில் தலையிடுவது போல பாசாங்கு செய்தால் கொஞ்ச வாக்குகள் தேறும் என்று தெரிந்தால்தான் தமிழ்க் கட்சித் தலைவர்கள் வாய் திறப்பர்.

முதலில் ஜனாதிபதிக்கு ஒரு ஃபக்ஸ் அடிப்பதில் பாசாங்கு ஆரம்பிக்கும். அடுத்ததாக ஒரு அறிக்கை. பின்னர் மக்கள் தாமாக முன்வந்து நடத்தும் போராட்டங்களில் போய் தலையைக் காட்டுவது. கடைசியாக ஜனாதிபதியுடனோ அல்லது எவராவது ஒரு அமைச்சருடனோ பேசிவிட்டு, "எடுத்துக் கூறியிருக்கிறோம். காதுகள் இரண்டையும் விரித்துக் கேட்டுள்ளார். விரைவில் தக்கநடவடிக்கை எடுக்க உறுதி!" என்று தமிழ்க் கட்சிகளே செய்திகள் தரும்.

ஏதோ ஜனாதிபதிக்கு தெரியாமல்தான் காரியங்கள் நடப்பதுபோலவும், இவர்கள் போய் சொன்னால்தான் தகவலே எட்டும்போலவும் மக்களை நம்பச் செய்கிறார்கள்.

அதுதான் உண்மை என்றால் இக் கட்சிகள் ஏன்? தலைவர்கள் ஏன்? மக்களே நேரடியாக ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைக்கட்டும். தாமே குழுக்களாகச் சென்று அம்மையாரின் வாசஸ்தல ஆராய்ச்சி மணியை அடித்து நீதி கேட்கட்டும். இடையே தரகர்கள் எதற்காக?

அரசு செயலகங்கள் முன்பாக அமர்ந்திருந்து அங்கு செல்லும் மக்களுக்கு மகஜர் எழுதிக் கொடுப்பது, விண்ணப்பப்படிவம் நிரப்பிக் கொடுப்பது, ஆங்கிலத்தில் கடிதம் எழுதிக் கொடுப்பது போன்றவற்றைச் செய்து கொடுத்து பிழைப்பு நடத்தும் ஆட்கள் இருப்பர். பார்த்திருப்பீர்கள்.

அவர்களது வேலையைத்தான் இப்போது தரகுக் கட்சிகளாக மாறிவிட்ட தமிழ்க் கட்சிகள் செய்கின்றன. மக்களிடம் பிரச்சனை என்னவென்று கேட்டுவிட்டு அம்மையாருக்கு மனு எழுதிக் கொடுக்கிறார்கள்.

தமிழ் பேசும் மக்களின் அரசியல் கோரிக்கைகளின் கழுத்தை நெரிக்கும் காரியங்கள் மிக நாசூக்காக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் தமிழ்க் கட்சிகளோ, அரசாங்கத்திடம் தாம்கேட்டால் கிடைக்கிறது. அரசின் கதவுகள் தாங்கள் தட்டினால் திறக்கின்றன என்பதுபோல தமிழ் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

# பூலான்தேவி

**85**

தருவது ரசிகன்


பூலான்

எட்டாவா நகரின் பொலிஸ் பொறுப்பதிகாரி அனுப்பிய ஆள் பல சோதனைகளைக் கடந்தே பூலானை சந்திக்க வேண்டி இருந்தது.

மான் சிங் அவனை முதலில் நம்ப வில்லை. துருவித் துருவி கேள்விகள் தொடுத்தான்.

இறுதியில் அவனது உடம்பெல்லாம் தடவிப் பார்த்துவிட்டு பூலானிடம் அழைத்து வந்தான்.

"சதுர்வேதியை நம்பவேண்டாம். பதவி உயர்வுக்காகவும், அரசாங்கத்திடம் நல்ல பெயர் எடுப்பதற்காகவும் கொடுத்த வாக் குறுதியை காற்றில் பறக்கவிடும் ஆள்தான் சதுர்வேதி. என்னை நீங்கள் நம்பலாம். என் மூலமாக சரணடைந்தால், உங்க ளுக்கு ஒரு தொல்லையும் வராமல் பார்த்துக் கொள்வேன்!" என்று கூறுமாறு எட்டாவா பொலிஸ் பொறுப்பதிகாரி அந்த ஆளை அனுப்பியிருந்தார்.

பூலான் அந்த ஆளை வெறித்துப் பார்த்தாள்.

"என்னடா நினைத்துக் கொண்டி ருக்கிறான் உங்கள் அதிகாரி? பயந்து நடுங்கி சரணடைய அலைகிறேன் என்றா நினைத்துவிட்டான் கழுதை. அவன் உண் மையான ஆண்மகனாக இருந்தால் நேராக வந்திருக்க வேண்டியதுதானே! கழுதை யில் ஏற்றி திருப்பி அனுப்பி வைத்திருப் பாள் இந்த பூலான். போடா, அவன் ஆண்மகன் என்று முதலில் நிரூபிக்கச் சொல்லு!"

பூலானின் கோபத்தை பார்த்ததும் எதிரே நின்றவனுக்கு உடம்பெல்லாம் உதறல் எடுத்துவிட்டது. ஆளைவிட்டால் போதும் என்றிருந்தது.

"போடா!" என்றான் மான்சிங். பூலானை நோக்கி கைகூப்பிவிட்டு ஏறக் குறைய ஓட்டம் பிடித்தான்.

எட்டாவாவில் இருந்து அன்றே திரும்பிவிட்டனர் பூலான் குழுவினர்.

திரும்பிவரும்போது இடையே பொலிஸ் கோஷ்டி ஒன்றுடன் மோத வேண்டி ஏற்பட்டது.

பொலிசாருக்கு அவர்கள் பூலான் கோஷ்டியினர் என்று தெரியாது. வேறு யாரோ கொள்ளையர் என்று நினைத்து துரத்தினார்கள்.

பூலான் குழுவினரும் திருப்பிச் சுட்ட னர். மான் சிங்கின் குறி தவறாத சூட் டில் இரண்டு பொலிசார் காயப்பட்டனர். ஏனையோர் பயந்து பின்வாங்கினார்கள்.

மறுபடியும் பரசுராமின் பண் ணைக்கே திரும்பி வந்தனர். பரசுராம் அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

பூலானுக்கு வானொலிச் செய்தி கேட்பது தினசரி கடமைகளில் ஒன்றாகி விட்டது. தனது உடமைகளுடன் மறக் காமல் ட்ரான்சிஸ்டர் ரேடியோவையும் எடுத்துச் செல்ல மறப்பதில்லை.

"கொள்ளைக் கோஷ்டியினருடன் ஏற்பட்ட மோதலில் ஐந்து கொள்ளையர் களை பொலிசார் சுட்டுக் கொன்றனர். மோதலில் இரண்டு பொலிசார் சிறுகாயங் களுக்கு உள்ளானார்கள்," என்று கலப் படமே இல்லாத பொய் கூறப்பட்டபோது, பூலான் விழுந்து விழுந்து சிரித்தாள்.

"பொலிசாரால் இதுவரை கொல்லப் பட்டதாக கணக்குக் காட்டப்பட்ட ஆட்களை எண்ணிப்பார்த்தால் நாங்கள் எவருமே மிஞ்சியிருக்க மாட்டோம்," என்றான் மான் சிங்.

"கையாலாகாத கழுதைகள்," என் றாள் பூலான். "இந்தப் பொறுக்கிப் பயல்களை நம்பி சரணடைய நான் தயாரில்லை. சதுர்வேதி வந்தால், சந்திக்க விரும்பவில்லை என்று திருப்பி அனுப்பி விடுங்கள்!" என்றாள் பரசுராமிடம்.

பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிவிட்டதே என்று நினைத்தார் பரசுராம்.

தன் ஏமாற்றத்தை வெளியே காட் டாமல், "இல்லையம்மா, சதுர்வேதியை நூற்றுக்கு நூறு நம்பலாம். உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை காத்திருக்கிறது," என்றார்.

"அப்படியானால் இப்போது மட்டும் என்ன கெட்ட வாழ்க்கையா வாழ்கிறேன்?" என்று பூலான் கேட்டதும் ஆடிப்போனார் பரசுராம்.

"இல்லையில்லை, யாருக்கும் பயமில் லாத, சட்டத்தை கண்டு அஞ்சாத புதிய வாழ்க்கை காத்துக்கிடக்கிறது. உன் மக்க ளிடம் உனக்கு நல்ல பெயர் இருக்கிறது. அதனால் அவர்களுக்கு நீ சேவை செய்ய முடியும்."

"சரணடைந்தால் சேவை செய்யவா விடுவார்கள்? சிறையில் போட்டு மூடி வைத்திருப்பார்கள்." என்றாள் பூலான்.

"சிலகாலம் மட்டும்தான் சிறைவாசம். அதற்கு உடன்பட்டால்தானே சரணடை யப்போகிறோம்!" என்றான் மான் சிங்.

தனக்கும் பரசுராமுக்கும் இடையே நடைபெற்ற உரையாடலுக்குள் புகுந்த மான் சிங் அபிப்பிராயம் சொன்னதும் அவனை ஒரு பார்வை பார்த்தாள் பூலான்.

தன்னைத்தவிர அனைவருமே சரண டைய விரும்புகிறார்கள் என்பது புரிந்தது. அவர்கள் அப்படி நினைப்பதில் தவ றில்லை என்று ஒரு சமயம் தோன்றும். வேறொரு சமயம் அவர்கள்மீது வெறுப் பும் தோன்றும். தான் மட்டும் தனிமைப் பட்டுவிட்டதுபோல அந்தரமாக இருக்கும்.

தனிமை உணர்ச்சிக்கு ஆட்படும் போதெல்லாம் விக்ரம் மல்லாவின் நினைப்பு நெஞ்சுக் கூட்டில் இருந்து பீறிட்டுக் கிளம்பும்.

'மல்லா மட்டும் இன்று உயிரோடு இருந்திருந்தால்....' என்ற நினைப்பு பூலானை அடிக்கடி கலங்க வைக்கும்.

மான் சிங்குடன் பலமுறை இரண்டறக் கலந்தபோதும் மல்லாவின் இடத்தை நிரப்ப அவனால் முடியாது என்பதையும் பூலான் உணர்ந்தே இருந்தாள்.

மல்லாவின் நினைவுகளை பூலானிடம் இருந்து களைவதற்கு யாராலும் முடியாது என்பதை மான் சிங்கும் நன்கு அறிந்திருந்தான்.

பூலான் தனிமையாக ஆழ்ந்த யோசனை யில் இருக்கும்போது மான் சிங் அவளை குழப்பாமல் ஒதுங்கியே இருப் பான். மல்லாவின் நினைவு களில் மூழ்கி இருக்கிறாள் என்றுதான் நினைப்பான். அதற்காக மான் சிங் பொறா மைப்பட்டது கிடையாது.

சதுர்வேதியை மறுபடி சந்திக்க பூலான் ஒப்புக் கொண்டாள். மத்திய பிரதேச முதலமைச்சர் அர்ஜுன் சிங்கை சந்தித்துவிட்டு சதுர்வேதி பூலா னைப் பார்க்க வந்திருந்தார்.

பூலானின் முகாமுக்கு அவர் முதன் முதல் வந் திருந்தபோது, அவர்மீது சிறிது சந்தேகம் இருந்தது.

இந்த முறை வந்த போது சந்தேகத் தின் சாயலே இல்லாமல், உற்சாகத்தோடு வரவேற்கப் பட்டார்.

பூலான் குழுவைச் சேர்ந்த ஜயவீர், சதுர் வேதியின் காலைத்தொட்டு வணங்கினான். குளிர்காய்வதற்காக தீமூட்டிக் கொண்டிருந்த மான் சிங்கும் எழுந்து வந்து, அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினான். தன்னி டமிருந்த நூறு ரூபா நோட்டை எடுத்து அவ ரது வலது கையில் வைத்தான்.

சதுர்வேதிக்கு ஒன்றும் புரியவில்லை. "இது ஏன்?" என்றார். "இதுதான் எங்கள் விசேஷமான வரவேற்பு முறை!" என்றான் மான் சிங். சதுர்வேதி இலேசாகப் புன்ன கைக்க பூலான் அங்கு வந்து சேர்ந்தாள்.

கையில் ரைபிளுடன் தலையில் சிகப்பு பட்டியுடன், மார்புக்கு குறுக்காக அணிந்த ரவைப்பட்டியுடன் பூலானின் கம்பீரம் சதுர் வேதிக்கு பிரமிப்பாக இருந்தது.

பேச்சுவார்த்தை ஆரம்பித்தது. சதுர் வேதியுடன் இருந்து பேச்சு நடத்த வசதியாக மரங்களில் ஒரு பெரிய படங்கு கட்டியிருந்தார் கள். அப்போது பயங்கரமான பனிக் காலம் என்பதால், குளிர்காற்றும் வீசியடித்தது. அதனைத் தடுப்பதற்காக தடிப்பமான துணியை வளைத்துக் கட்டியிருந்தார்கள்.

ரொட்டியும், தேனீரும் வழங்கப்பட்டது. தேனீர் குளிருக்கு இதமாக வயிற்றுக்குள் இறங்கியது.

"உங்கள் நிபந்தனைகள் சிலவற்றை ஏற்க மத்திய பிரதேச மாநில அரசு தயா ராக இருக்கிறது. சில நிபந்தனைகளை நீங் களும் விட்டுக் கொடுக்க வேண்டும்!" என்று சதுர்வேதி கூறினார்.

அதுவரை உற்சாகமாகப் பேசிக் கொண் டிருந்த பூலான் சட்டென்று முகம் மாறினாள்.

"நீங்கள் எல்லாம் என்னய்யா நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இந்தப் பூலான் உங் களிடம் வந்து, கைகளை உயர்த்திக்கொண்டு மண்டியிடப் போகிறாள் என்றா நினைத்து விட்டீர்கள்? போய்யா, முடிந்தால் என்னை பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் பொலிஸ் படையால் ஒரு.......ம் பிடுங்க முடியாது."

இதுவரை மரியாதை காட்டிய பூலான் அதற்கு நேர்மாறாகப் பேச முற்பட்டது சதுர் வேதிக்கு ஆச்சரியமாக இருந்தது.

மான் சிங்கோ, மற்றவர்களோ ஆச்சரியப் படவில்லை. பூலான் அடிக்கடி மனம் மாறக்கூடியவள் என்பது அனைவருக்கும் தெரியும்.

அவர்கள் மௌனமாக இருக்க, பூலான் மறுபடி சாந்த சொரூபியாகிவிட்டாள்.

"நான் கோபப்பட்டுவிட்டேனா? இது என் சுபாவம். பின்னே கோபம் வராதா சொல்லுங்கள்! நான் என்ன நாட்டையே என்னிடம் ஒப்படைக்கச் சொல்லியா கேட் கிறேன்? நாங்கள் சரணடைவதால் அரசாங் கத்துக்கு எத்தனை இலாபம்? இல்லை என் றால் எங்களைப் பிடிக்க பணத்தை தண்ணீ ராகக் கொட்டிக் கொண்டு இருக்க வேண் டியதுதான். எங்கள் நிழலைக்கூட தொட முடியாது தெரியுமா?"

> **கடந்த வாரம்**
>
> பூலான் தேவி சரணடைய முன்வருகிறாள்.
> பொலிஸ் அதிகாரி சதுர்வேதியை சந்திக்க இணங்குகிறாள்.
> ஆனாலும், பொலிசார்மீது அவளது சந்தேகம் தீரவில்லை.
>
> இனி..

"தெரியும். அதுதானே சரணடைய செய்ய இந்தப்பாடு படுகிறேன்!" சதுர்வேதி பூலானின் குணமறிந்து ஒத்து ஊதினார்.

சதுர்வேதியின் தந்திரம் பயனளித்தது. பூலான் இறங்கினாள். "என் நிபந்தனைகளை வேறு எவருக்காகவும் தளர்த்தமாட்டேன். ஆனால் உங்களுக்காக தளர்த்துகிறேன். சிறைவாச காலத்தில் ஆயுதம் வைத்திருக்க வேண்டும். தனியான சிறை வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளையும் கழித்து விடலாம். கழித்தால் மீதி எத்தனை?" என்று மான் சிங்கை கணக்குக் கேட்டாள்.

"பதினைந்து!" என்றான்.

"ஆ.. பதினைந்து நிபந்தனைகளையும் உங்கள் அரசாங்கம் ஒத்துக் கொண்டால் இந்தப் பூலானின் கைகள் ரைபிளை ஒப்ப டைக்கும். பதினைந்தில் ஒன்று குறைந்தா லும் ஒப்புக்கொள்ளமாட்டோம்; சரியா?"

சந்தையில் பேரம் பேசுவது போல பூலான் பேசுவதைக் கேட்க சதுர்வேதிக்கு சிரிப்பாக இருந்தது. ஆசிரியை முன்னால் இருந்து பாடம் கேட்கும் மாணவனைப் போல பவ்வியமாகக் கேட்டுக் கொண்டிருந் தார். மறுத்து ஒரு வார்த்தைகூடப் பேச வில்லை.

மறுபடியும் முதலமைச்சருடன் பேசிப் பார்த்துவிட்டு வருவதாகக் கூறிவிட்டு சதுர் வேதி புறப்பட்டார்.

"முதலமைச்சரிடம் காட்டுவதற்கு அடை யாளமாக ஏதாவது தரமுடியுமா?" என்று கேட்டபோது தன் மோதிரம் ஒன்றை கொடுத்தாள் பூலான்.

பூலான் தேவியின் பதினைந்து நிபந்தனை களை மத்திய பிரதேச அரசு பரிசீலித் தது. பதினைந்து நிபந்தனைகள் இவை தான்:

1) பூலான் தேவிக்கோ, குழுவின ருக்கோ மரண தண்டனை வழங்கப்படக் கூடாது.

2) உத்தரப்பிரதேசத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான வழக்குகளும் மத்தியப் பிரதேச நீதிமன்றத்தில் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும்.

3) பூலானின் குடும்பம் மத்திய பிரதேசத் தில் பாதுகாப்பாக வாழ ஏற்பாடு செய்ய வேண்டும்.

4) பூலானின் தம்பி சிவநாராயணனுக்கும், தங்கை ருக்மணியின் கணவனுக்கும் தகுந்த அரச வேலை கொடுக்க வேண்டும்.

5) எட்டு வருடங்கள் சிறைவாசம் இருந்தபின்னர் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

6) பூலான், மான் சிங் மற்றும் அவர்கள் குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் விடு தலை செய்யப்பட்டபின்னர் மத்திய பிரதேசத் தில் வசிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

7) குழுவினர் அனைவருக்கும் இருக்க வீடும், விவசாயம் செய்யக் காணியும் தரப்பட வேண்டும்.

8) விடுதலையானதும் தங்களைத் தற்காத்துக்கொள்ள ஆயுதம் வைத்திருக்க அனுமதிப் பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

9) விசாரணைக்காக என்று பொலிஸ் நிலையங்களில் குழுவினர் எவரையும் தடுத்து வைக்கக் கூடாது.

10) குழுவினர் எவருக்கும் கை விலங்கு கள் போடக்கூடாது.

11) சகலருக்கும் மதிய வேளையும், இர விலும் நல்ல உணவு தரப்படவேண்டும்.

12) குழுவினருக்கு உதவி செய்தவர்கள் பற்றிய விபரங்களை அறிய முற்படக்கூடாது.

13) ஆயுதங்களும், ரவைகளும் எவ்வாறு கிடைத்தன என்று அறிந்து கொள்ள முயலக் கூடாது.

14) குழுவில் உள்ளோரின் பிள்ளை களுக்கு இலவசக் கல்வி தரப்படவேண்டும்.

15) பூலானின் குடும்பத்தாருக்கு மத்திய பிரதேசத்தில் ஒரு வீடும், விவசாயக் காணியும் வழங்கப்பட வேண்டும்.

சில நாட்களின் பின்னர் சதுர்வேதி வந்து சேர்ந்தார். அவர் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

"முதலமைச்சர் உங்கள் நிபந்தனைகளை மறுத்து எதுவும் பேசவில்லை. பிரதமர் இந்திரா காந்தியிடம் பேசிவிட்டு வருவதற்காக டில்லி போயிருக்கிறார்," என்று கூறினார்.

சட்டென்று உணர்ச்சிவசப்பட்ட சதுர் வேதி பூலானின் இரு தோள்களையும் உலுக்கி, "பூலான் உனக்குப் புது வாழ்வு தந்து, புது மனிஷியாக்க வேண்டியது என் பொறுப்பு!" என்றார்.

பூலான் பதிலுக்கு "நான் மனிஷியாகத் தான் இருக்கிறேன், உத்தரப் பிரதேச பொலிஸ்காரர்களை மனிதர்களாக்குங்கள்" என்றாள்.

சதுர்வேதி திரும்பிச் சென்றார். பூலான் சரணடைவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்யுமாறு டில்லியிலிருந்தபடியே முத லமைச்சர் தகவல் அனுப்பினார்.

சதுர்வேதி உற்சாகமானார்.

1983 பெப்ரவரி 10ம் திகதி பூலான் சரணடைவதற்கான நாளாக குறிக்கப்பட்டது.

**(தொடர்ந்து வரும்)**

## ஐஸ்வர்யா ராயின் அதிரடிப் பேட்டி


ஐஸ்வர்யா ராய்-அக்ஷய் கன்னா

ஐஸ்வர்யா ராய். இந்த முன்னாள் அழ கிக்கு வெள்ளித்திரை கைகொடுக்க மறுக்கிறது.

முதல் படமான 'இரு வர்' படு தோல்வி. இந்தி யில் நடித்தபடமும் காலை வாரிவிட்டது. ஆனாலும் காதல் லீலைகளில் முத லிடத்தில் இருக்கிறார். இவரைச் சுற்றி எப் போதும் மொய்த்தபடி இருக்கிறார்கள் ஆண் நண் பர்கள்.

ஒளிவு மறைவில்லா மல் ஐஸ்வர்யா ராய் கொடுத்துள்ள அதிரடிப் பேட்டி- பதில்கள் ஏ.கே.47 ரவைகள் போல பாய்ந்து வருகின்றன. ரவைத் தடுப்பு கவசம் அணிந்து கொள் ளுங்கள்!

கே: உங்களுக்கும் மனிஷாவுக்கும் இடை யிலான சண்டை தீரவே தீராதா?

ஐ: என்றைக்கு அவர் தன் வாயை மூடி வைத்துக்கொண்டிருக்கிறார்? தான் ஒரு கீழ்த்தரமான பெண் என்பதை மனிஷா நிரூபித்து வருகிறார்.

கே: அக்ஷய் கன்னாவுடன் காதல் எப்படி இருக்கிறது?

ஐ: காதல்... (கட்டுப்படுத்த முடியாமல் சிரிக்கிறார்) ஒரு விமானப் பயணத்தின் போது அது ஆரம்பித்தது. நான் தரும் பேட்டிகள் எல்லாம் அவருடையதைப் போல வெளிப்படையாக இருப்பதாக அக்ஷய் சொன்னார். கொஞ்சம் சிரிப் பான விஷயம்தான். என்றாலும் பல சமயங்களில் எங்களுடைய சிந்தனை ஒரே மாதிரித்தான் இருக்கிறது.

அக்ஷய் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும். என்னிடம் அவர் எதையும் மறைத்ததில்லை. ஒரு மாதத்துக்கும் மேலாக நாங்கள் ஒன்றாக இருந்தும், மற்றவர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் எந்தக் குறையையும் நான் அவரிடம் கண்டதில்லை. எங்கள் நட்பு இன்ன மும் காதலாக பரிணமிக்கவில்லை. பரிணமிக்காமலும் போகலாம்.

கே: ஒரு ஆத்மார்த்தமான உறவு தேவை என்று ஒருபோதும் நீங்கள் நினைத்த தில்லையா?

ஐ: அத்தனை அவசியமாகவெல்லாம் ஒரு ஆளைத்தேடி நான் அலையவில்லை. காதல் வயப்படுவது என்ற எண்ணம் எனக்குப் பிடித்திருக்கிறது. நான் வேறு பல வழிகளில் என் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டுதான் இருக் கிறேன்.

கே: ஒரு ஆணிடம் உங்களை அதிகமாகக் கவர்வது எது?

ஐ: முதல் பார்வையிலேயே நான் காதல் வயப்படுவதெல்லாம் கிடையாது. அது காதலாகவும் இருக்க முடியாது. வெறும் உடல் சம்பந்தப்பட்டதாகத்தான் இருக்க முடியும். எனக்கு மிக நெருக்க மான நண்பர்களில் பெரும்பாலானோர் ஆண்கள்தான். எல்லோருமே மிக நல்லவர்கள். ஒரு ஆண் முதலில் நல்ல நண்பனாக இருக்க வேண்டும். உணர்வு மிகுந்தவனாக இருக்க வேண்டும். தவிர பெண்களின் மனதை புரிந்து கொள்ளும் ஆற்றல் மிக அதிக மாக இருக்க வேண்டும்.

## விலைபோன தந்தை


தந்தையுடன் மோனிகா

அமெரிக்க அதிபர் கிளின்ரன்மீது செக்ஸ் புகார் கூறியுள்ள பெண்களில் ஒருவர் மோனிகா. அவரது தந்தையை பத் திரிகைகள் பேட்டி கண்டன. கிளின்ரனை நம்புகிறார் மனிதர்.

"அமெரிக்க அதிபருடன் என் மகள் செக்ஸ் உறவு வைத்ததாகக் கூறப்படுவதை நான் நம்பத் தயாராக இல்லை.

அமெரிக்காவின் முதல் பெண் அதிப ராக வேண்டும் என்பது என் மகளின் ஆசை. அவளைப் போய் இப்படி ஒரு வழக்கில் மாட்டிவைத்துவிட்டனர்.

என் மகள் நல்லவள். அழகானவள். அறிவுடையவள். அதுவரை எனக்குத் தெரிந் தால் போதும். மகள்களின் செக்ஸ் வாழ்க் கையை அணு அணுவாகக் கேட்பதில் எந்தத் தந்தைக்கு விருப்பம் இருக்கும்?

திருமணமான பாடசாலை ஆசிரியர் ஒருவருடன் என் மகள் காதல் தொடர்பு வைத்திருந்தாள். அது எனக்குத் தெரியும். ஐந்து ஆண்டுகள் இந்தத் தொடர்பு நீடித்தது. இதுதான் எனக்குத் தெரிந்தவரை அவள் செய்த மிகப்பெரிய தவறு.

ஆனால் அதைத் தடுக்கவும் நான் முயற்சிக்கவில்லை. இது அவள் வாழ்க்கை. அவளே முடிவு செய்யட்டும் என்று விட்டு விட்டேன்," என்று பேட்டி கொடுத்திருக்கிறார்.

மோனிகாவின் தந்தையை கிளின்ர னின் ஆட்கள் விலைக்கு வாங்கிவிட்டார்கள். அவர்களின் நிர்ப்பந்தம் காரணமாகத்தான் அப்படி பேட்டி கொடுத்திருக்கிறார் என் றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## செலவு 10 கோடி



இந்தியப் பொதுத் தேர்த லில் இம்முறை பல சினிமா நட்சத்திரங்கள் பிரசாரக் களத் தில் குதித்தன. அநேகமான சினிமா நட்சத்திரங்கள் பாரதிய ஜனதாவுக்கு ஆதரவாகவே பிர சாரம் செய்தனர்.

ஆனாலும் மக்கள் இம்முறை காண ஆவலுற்ற பிரசார நட்சத்திரம் சோனியா காந்தி. சினிமா நட்சத்திரங்களை விட சோனியாதான் இம்முறை மேடைகளில் பிரகாசித்தார்.

சோனியா சென்ற இடமெல்லாம் கூட்டம் அலை மோதியது. மாற்றுக் கட்சிக்காரர்கள் கூட அவரைக் காணத் திரண்டு சென்றனர். இம்முறை தேர்தலில் விமானத்திலும், ஹெலி கொப்டரிலும் அதிகம் பயணம் செய்து பிரசாரம் செய்த ஒரே பிரசாரகரும் சோனியா தான்.

சோனியாவின் பிரசாரத்திற்காக காங் கிரஸ் செலவிட்ட பணம் பத்துக்கோடி ரூபாய்கள். இதுகூட இந்திய பணமதிப்பில் தான்.

சோனியாவை காணச் சென்றவர்கள் எல்லாம் அவருக்கு வாக்குப்போட மாட்டார்கள். சும்மா பார்ப்பதோடு சரி என்று ஏனைய கட்சிகள் கூறுகின்றன.

ஆனாலும் சோனியா வந்திருக்கா விட்டால் காங்கிரஸ் மரண அடி வாங்கி யிருக்கும் என்பதை மட்டும் யாரும் மறக்க முடியாது.

## அழகின் விலை



இந்திய அழகிப் போட்டி நடந்தபோது, அழகியைத் தேர்ந் தெடுக்க அழைக்கப்பட்டவர் சிண்டி கிராஃபோர்ட். இவர்தான் உலகின் நம்பர்வன் சூப்பர் மொடல் அழகி.

13 வருடகாலமாக மொடலிங் செய்து வருகிறார். சினிமாவிலும் நடிக்கிறார். வில்லாக வளையும் உடல். தொடர்ந்து பல வருடங்களாக கச்சிதமாக உடலை வைத்திருக்கிறார்.

சிண்டி கிராஃபோர்ட்டின் தீவிர இரசிகர் டயானாவின் வாரிசு இளவரசர் வில்லியம்ஸ். அவர் தவிர பெரும்புள்ளிகள் பலர் சிண்டி யின் கடைக்கண் பார் வைக்காக அலைகிறார் கள். அவர்களில் சில ரோடு மட்டும் சிண்டி அலைவார்.

சிண்டியின் கிறங்க வைக்கும் போஸ்களால் தான் பல பொருட்கள் சந்தையில் பறக்கின்றன. அதனால் விளம்பரம் செய்வோர் நாடும் ஒரே நம்பிக்கையான அழகி சிண்டி.

ஆகவே, சிண்டியின் மாத வருமானம் மகா வருமானமாகிவிட்டது. எவ்வளவு தெரியுமா? குத்துமதிப்பாக அறுபது கோடி ரூபாய்கள்-யம்மா! எல்லாம் அந்த உடலுக் குத்தான் மரியாதை.



படிப்பகம்

www.padippakam.com

## தடம் புரண்ட ரயில்

→ தண்டவாளத்தைவிட்டு தடம் புரண்ட ரயில்களின் புகைப்படங்களை பார்த்திருப்பீர்கள். ஆனால், இப்படியொரு தடம் மாறிய பயணத்தைப் பார்த்திருக்க மாட்டீர்கள்.

பள்ளிவாசலுக்குள் புகுந்து வெளியே வந்து நிற்கிறது ரயில். இந்த பயங்கரமான ஆனால் வித்தியாசமான விபத்து பாகிஸ்தான் தலைநகரான இஸ்லாமாபாத்திற்கு சமீபமாக நடந்துள்ளது.

இஸ்லாமாபாத்தில் இருந்து புறப்பட்டு கராச்சி நோக்கி படுவேகமாகச் சென்று கொண்டிருந்தபோது, சிஹாலா என்ற இடத்தில் பிரேக் பிடிபடவில்லை. சாரதி திகைத்து நிற்க, தடம்மாறிய ரயில் எதிரேயிருந்த பள்ளிவாசலுக்குள் புகுந்தது. அந்த நேரம் தொழுகையில் இருந்த ஒன்பது பேர் பலியானார்கள்.

ரயிலை மீட்டெடுக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கையில் 'கிளிக்' செய்த புகைப்படம். ■



## தகவல் பெட்டி

## வித்தியாச பிரசவம்

→ ஒராங் உட்டான் குரங்குகளிடம் பிரசவ விஷயத்தில் ஒரு பழக்கம் இருக்கிறது.

மிருகக் காட்சிச்சாலையிலோ அல்லது வளர்க்கப்படும் இடங்களிலோ குட்டி ஈனுவது இல்லை.

தங்களுக்குரிய காட்டுப் பிரதேசங்களிலேயே வம்ச விருத்தியைத் தருகின்றன. அதற்கு விதிவிலக்காக பார்செலோனா மிருகக் காட்சிச் சாலையில் போர்ணியோ ரக ஒராங் உட்டான் ஒரு குட்டியை ஈன்றெடுத்துள்ளது.

குட்டியை ஈன்ற மகிழ்ச்சியில் தாய்க்குரங்குடன் முதல் நாள் பிறந்த 'ஜாவி' என்ற குட்டியும் இவ்வாறு போஸ் கொடுக்கிறது.

என்னே மகிழ்ச்சி, என்னே புன்னகை. மனிதருக்கு மட்டும்தான் மனம்விட்டுச் சிரிக்க முடியுமா என்ன! ■






## உருண்ட விமானங்கள்

↑ ஆடிக் காற்றில் அம்மியும் பறக்கும் என்று பழமொழி உண்டல்லவா. அம்மியென்ன அம்மி, ஆகாய விமானமே பறந்திருக்கிறது பாருங்கள். விமானம் பறக்கும் தானே என்கிறீர்களா? சரிதான், ஆனால் தரையில் பறந்து உருண்டு புரண்டு தலைகீழாகக் கிடக்கின்றன பாருங்கள்.

அமெரிக்காவின் ஃபுளொரிடா மாநிலத்தில் ஹொலிவூட்டின் நோர்த் பெரி விமான நிலையத்தில் நூற்றுக்கணக்கான விமானங்கள் தரித்து நின்றன. பலமாக வீசிய சூறாவளியால் பல விமானங்கள் சேதமடைந்தன. அவற்றில் சில விமானங்கள் தலைகீழாக உருண்டு கிடந்தன. பல கோடி ரூபாய்கள் நஷ்டமாம். திருத்த வேலைகள் நடக்கின்றன. ■




## ஐந்தாயிரம் பழசு

← நூறு வருசம் உயிர் வாழ்வது ஆச்சரிய சமாச்சாரம். ஆனால் பல்லாயிரம் ஆண்டுகள் உடல் வாழ்வது சாத்தியம். உடல்களைக் கெட்டுப் போகாமல் பத்திரமாகப்பாதுகாக்க அந்தக் காலத்தில் எத்தனையோ மூலிகைகள் இருந்தன. அவ்வாறு பாதுகாக்கப்பட்ட பல உடல்கள் அவ்வப்போது கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி இத்தாலியிலுள்ள 'பொப்ஸானோ' அகழ்வாய்வுத்துறை அருங்காட்சியகத்துக்கு மிகப் பெறுமதிவாய்ந்த பொதி ஒன்று கொண்டுவரப்பட்டது.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட, அதாவது வரலாற்றுக்கு முற்பட்ட மனிதனின் உடல்தான் அது.

இந்த உடல் 'ஒயெற்ஸிப்' பள்ளத்தாக்கில் கண்டு பிடிக்கப்பட்டதால் 'ஒயெற்ஸி' என்று பெயரிட்டுள்ளனர்.



## திருத்தம்

'முரசு' 244ல் உலகில் பெரிய பாதம் கொண்டவரின் பாத அளவு வெளியாகியிருந்தது. அந்த பாதத்தின் அளவு 58 அங்குலம் என்று குறிப்பிடப் பட்டிருந்தது. அது தப்பு. அவரது பாதணி அளவு (சைஸ்) 58 என்பதே சரியானதாகும். தவறான தகவலுக்காக வருந்துகிறோம். ■

## சூப்பர் கார்

↑ எடையும் அதிகமில்லை. நீள, அகலமும் அதிகமில்லை. சூப்பர் குட்டிக் கார் இது. இதன் உடம்பு அலுமினியத்தால் செய்யப்பட்டதால்தான் எடை அதிகமில்லை. இந்த அலுமினியக்கார் ஃபிரான்ஸ் நாட்டின் பாரிசில் தயாரானது. ரெனால்ட் என்பவர் வடிவமைத்தார். வெள்ளோட்டம் விட்டுப் பார்த்துவிட்டார்கள். விரைவில் ஜெனிவாவில் நடைபெறவுள்ள சர்வதேச கார் கண்காட்சிக்கு இக்கார் அனுப்பி வைக்கப்படும். அங்கு பலத்த வரவேற்பைப் பெற்றுவிட்டால் உற்பத்தி தொடரும். ■



படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 45

# இயக்குநரை அதிரவைத்த நடிகை

## இன்றைய பரிதாபக் கோலம்

'பட்டத்து ராணி பார்க்கும் பார்வை' என்றதும் அந்த நடிகையின் பெயர்தான் நினைவுக்கு வரும். காதல் கதைகளுக்கு முதலில் பெயரெடுத்த மூன்றெழுத்து இயக்குநரின் ஆஸ்தான நடிகை அவர். அந்த இயக்குநரின் படங்களில் தொடர்ந்து வாய்ப்பும் கிடைத்தது.

விமானப் பணிப்பெண்ணாக வேலை செய்தவரை சிறந்த நடிகையாக்கியவர் அந்த இயக்குநர்தான். ஜெயலலிதாவையும் அந்த இயக்குநர்தான் முன்னுக்கு கொண்டுவந்தவர்.

இயக்குநரின் ஆஸ்தான நடிகைகள் என்று தெரிந்தால் கதாநாயக நடிகர்களும் குறிப்பிட்ட நடிகையுடன் வம்புக்கு போகமாட்டார்கள். இயக்குநரின் அன்புப் பிடியில் இருந்த அந்த நடிகை பிரபல நடிகர் ஒருவரின் படத்தில் நடிக்க ஒப்பந்தமானார்.

அந்தத் பிரபல நடிகருக்கு நடிகைமீது ஒரு கண். எப்படியாவது நடிகையை வழிக்கு கொண்டுவந்துவிட வேண்டும் என்று திட்டம் போட்டார்.

படப்பிடிப்பு முடிந்து ஓய்வாக இருக்கும்போது இரட்டை அர்த்த ஜோக்குகள் சொல்லிவிட்டு, நடிகையின் ரியாக்ஷன் எப்படி இருக்கிறது நோட்டம் விடுவார்.

நடிகையோ அந்த ஜோக்குகளைக் கேட்டும் கேளாததுபோல இருந்துவிடுவார். நடிகருக்கு அவமானமாகிவிட்டது.

பிரபலமானவர்கள் ஜோக் என்று நினைத்துக்கொண்டு ஏதாவது சொல்லித் தொலைத்தால், சிரிப்பு வருகிறதோ இல்லையோ கூட இருப்பவர்கள் சிரித்து வைக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரபலங்களின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள வேண்டியதுதான்.

குறிப்பிட்ட நடிகை மட்டும் அதற்கு விதிவிலக்காக இருந்தால் பிரபல நடிகர் விடுவாரா? மனதில் வஞ்சம் வைத்திருந்து தகுந்த தருணத்தை எதிர்பார்த்திருந்தார்.

### நடிகர் அதிர்ச்சி

படப்பிடிப்புக்கள் முடிந்து கடைசி நாள் சிறிய விருந்து ஒன்றுக்கு ஏற்பாடாகி இருந்தது.

எல்லோருக்கும் குளிர்பானமும், மதுவகைகளும் பரிமாறப்பட்டன. நடிகைக்கு எப்படியாவது குளிர்பானத்தில் மதுவைக் கலந்து கொடுத்துவிடவேண்டும். அதன்பின்னர் தன் விருப்பப்படி நடிகையை அணுகிக்கொள்ளலாம் என்று பலமான திட்டம் போட்டிருந்தார் நடிகர்.

ஆனால், நடிகை செய்த காரியத்தைப் பார்த்ததும் நடிகரே ஒரு கணம் திகைத்து நின்றுவிட்டார்.

குளிர்பானம் கொடுத்தபோது அதனை மறுத்த நடிகை, எவ்வித தயக்கமும் இல்லாமல் வெளிநாட்டு மதுவை கேட்டு வாங்கி அருந்தத் தொடங்கிவிட்டார்.

அது மட்டுமா, குறிப்பிட்ட பிரபல நடிகரின் அருகில் வந்து, "என்னை உங்களுக்கு பிடித்திருக்கிறது என்று எனக்குத் தெரியும். உங்களையும் எனக்கு ரொம்ப ரொம்ப பிடிக்கும். உங்கள் விருப்பம் எதுவானாலும் நிறைவேற்றக் காத்திருக்கிறேன்!" என்று கொஞ்சம் ஆங்கிலத்தில் கிசுகிசுத்தார்.

நடிகருக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. இத்தனை விரைவாக பழம் நழுவிப் பாலில் விழும் என்று அவர் நினைக்கவில்லை.

அன்றிரவு நட்சத்திர விடுதி ஒன்றில் அறை எடுத்துத் தங்கினர் இருவரும்.

நடிகரின் காரில் நடிகை ஏறிச் செல்வதைக் கண்டவர்களில் இயக்குநருக்கு நெருக்கமான சிலரும் இருந்தனர். அவர்கள் தகவல் கொடுத்தனர். இயக்குநரால் அதனை ஜீரணிக்க முடியவில்லை.

அதன்பின்னர் நடிகைக்கு தன் படங்களில் சான்ஸ் கொடுப்பதை நிறுத்திவிட்டார்.

நடிகையோ பலருடன் தாராளமாக பழகிவந்தார். குடும்பத்தில் உள்ளவர்கள் நடிகை திருமணம் செய்தால் சொத்துக்கள் தமது கைவிட்டுப் போகும் என்பதால், நடிகைக்கு வந்த திருமண வாய்ப்புக்களைக் கெடுத்துக் கொண்டிருந்தனர்.

நடிகையின் தாயாரும் தன்மகளுக்கு வில்லியாக இருந்தார். அதனால் மனமுடைந்த நடிகை மதுவையும் ஆண் நண்பர்களையும் அதிகம் நாடி சீரழிந்தார்.

### தலைமறைவு

இறுதியாக ஒருநாள் வீட்டை விட்டே இரகசியமாக வெளியேறிச் சென்றுவிட்டார்.

நீண்டகாலமாக அந்த நடிகையைப் பற்றிய தகவல்கள் மர்மமாகவே இருந்துவந்தன.

எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்று அவரது தாயாருக்கும் தெரிந்திருக்கவில்லை. சமீபத்தில்தான் நடிகை மீண்டும் முகம் காட்டினார். அழகு எல்லாம் குலைந்து, வயதானவர்போன்ற தோற்றத்துடன் நடிகையின் படத்தை ஒரு வார சஞ்சிகையில் பார்த்த அந்தக்கால இரசிகர்கள் பலர் கண்ணீர் விட்டனர்.

ஆயிரக்கணக்கான இரசிகர்களின் தூக்கத்தைக் கெடுத்த கட்டழகுக் கனவுக்கன்னி இன்று ஒரு கோயிலைக் கூட்டிச் சுத்தம் செய்யும்வேலை செய்கிறார்.

நடிகையின் சம்பாத்தியத்தால் கிடைத்த சொத்துக்களை அவரது குடும்பத்தினர் அனுபவித்து வருகின்றனர். சில சொத்துக்களுக்கு நடிகை ஒப்புதல் அளித்தால்தான் தமக்கு சொந்தமாகும் என்பதால், நடிகையை மிரட்டிப் பணியவைக்கவும் முயற்சி நடக்கிறது.



ஓவியா
படம்: மனசு

## பூ பூக்கும் ஓசை

'பூப் பூக்கும் ஓசை, அதைக் கேட்கத்தான் ஆசை' என்று பாடல் இருக்கிறது. பூ பூக்கும் ஓசை, அப்பெயரில் படம் எடுக்கத்தான் ஆசை ராதா பாரதிக்கு.

புதுமுகம் ஆதித்யா கதாநாயகனாக நடிக்க, ராதா பாரதி இயக்கப் போகிறார். கதாநாயகியும் புதுமுகம். 'வைகாசி பிறந்தாச்சு' படம் மூலம் பிரபலமானவர் ராதா பாரதி.

மணிவண்ணன், ராதிகா ஆகியோர் 'பூ பூக்கும் ஓசை'யில் முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்கவுள்ளனர். இசை: சிற்பி.

## இன்னும் முப்பது

அஜித்குமார் நடித்த படங்கள் வரிசையாகத் தோல்வி அடைந்து வருகின்றன. தற்போது நடித்துவரும் 'காதல் மன்னன்', 'வாலி', 'உயிரோடு உயிராக' ஆகிய படங்களும் விற்பனையாகவில்லை.

அப்படி இருந்தும் தன் ஊதியத்தைக் குறைத்துக் கொள்ள மறுக்கிறார் அஜித். அவரது சம்பளம் இந்திய பண மதிப்பில் 30 இலட்சம்.

## தர்மாவின் ஆயுதம்

'தர்மா' படத்தை இயக்குபவர் கேயார். படத்தைப் பற்றி தர்மா கூறும் விபரங்கள்.

அநியாயத்தைத் தட்டிக்கேட்டு தர்மத்தை நிலை நாட்டுகிறார் நாயகன். அதனால்தான் தர்மா என்று பெயர் வைத்தோம். மன்சூர் அலிகான், கசன் கான், மனோரமா, கவிதா, ஆகியோர் நடிக்கின்றனர். ஹீரோயின் மட்டும் இன்னமும் முடிவாகவில்லை.

'தர்மா' மே மாதம் வெளிவரும். குறைந்த பட்ஜெட்டில் நிறைவான படமாக இருக்கும். அநியாயத்தைத் தட்டிக்கேட்கிற ஆயுதம் கம்பாகவும் இருக்கலாம். சைக்கிள் செயினாகவும் இருக்கலாம் தர்மா சைக்கிள் செயினும் தூக்குவார்.


ரோஜா
படம்:உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

## நனையும் சிம்ரான்

சிம்ரானுக்கு குளியல் என்றால் அலர்ஜியாம். நடிகையாக முன்னர் வாரத்தில் இரண்டுநாள் மட்டும்தான் குளிப்பாராம். இந்த மிக முக்கியமான தகவல்களை தமிழக சஞ்சிகை ஒன்று கண்டுபிடித்துக் கூறியிருக்கிறது.

சிம்ரான் நடிக்கும் படங்களில் அவரை நனைய வைத்தால்தான் ரசிகர்கள் ஜொள்ளு விடுகிறார்கள். அதனால் பல படங்களில் சிம்ரான் கண்டிப்பாக நனைய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதனால் எந்நேரமும் தும்மிக் கொண்டிருக்கிறாராம்.

## மணமகள் ரோஜா

'கடவுள்' படத்திலும், 'அரசியல்' படத்திலும் கவர்ச்சிக்கு விடை கொடுத்துவிட்டு மாறுபட்ட நடிப்பை காட்டியுள்ளார் ரோஜா. 'கடவுள்' தோல்விப்படம். 'அரசியல்' பரவாயில்லாமல் ஓடியது. இரண்டு படங்களிலும் ரோஜாவின் நடிப்பை பாராட்டி ஏராளமான கடிதங்கள் குவிந்துள்ளனவாம். பூரிப்பில் இருக்கிறார்.

நீண்டகாலமாக லவ்விக் கொண்டிருக்கும் ஆர்.கே. செல்வமணியும் ரோஜாவும் விரைவில் மாலை மாற்றிக் கொள்ளப் போகிறார்களாம். டும் டும் டும்.

## தத்தித் தாவுது

பஞ்சு அருணாசலம் இயக்கத்தில் வசந்த் இயக்கும் படத்திற்கு முதலில் 'ரொமான்ஸ்' என்று பெயர் வைத்திருந்தனர். பின்னர் அந்தப் பெயர் மாற்றப்பட்டு 'பூவெல்லாம் கேட்டுப்பார்' என்று பெயர் சூட்டப் பட்டது.

இப்போது அப் பெயரையும் தூக்கிப் போட்டுவிட்டு 'தத்தித் தாவுது மனசு' என்று பெயர் சூட்டியுள்ளனர். இதாவது தாவாமல் இருக்குமா?


அர்ஜுன்-சிம்ரான்
படம்: கொண்டாட்டம்

## அம்மாபிள்ளை

'சாந்தி நிலையம்' படத்தில் தனது 13 வயதில் அறிமுகமானவர் மஞ்சுளா. படு தாராளமாக நடித்தவர். இப்போது அவரது மகள் ப்ரீதா விஜயகுமாரும் 13 வயதில் தான் அறிமுகமாகியுள்ளார். எப்படியும் நடிக்கத் தயார்.

## அஜித்தின் பேரழகி

அருண்குமார் நடித்த 'பிரியம்' படத்தை இயக்கியவர் பாண்டியன். அவர் அடுத்து இயக்கும் படத்திற்கு பேரழகி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகி இன்னமும் முடிவாகவில்லை.

இதுதவிர அன்பாலயா பட நிறுவனம் தயாரிக்கும் படம் ஒன்றையும் பாண்டியன் இயக்கவுள்ளார். அதில் புதுமுகங்களே நடிக்கவுள்ளனர்.

## என்றும் ஆனந்தம்

விக்னேஷ் ஜோடியாக ரசிகா நடிக்கும் படம் 'என்றும் ஆனந்தம்'. இன்னொரு கதாநாயகன் லிவிங்ஸ்டன். அவருக்கு ஜோடி அனுஷா.

இசை: எஸ்.ஏ.ராஜ்குமார். இயக்கம்: தென்னரசு, ஆர்.சுந்தர்ராஜன், அலெக்ஸ், விஸ்மோகன் ஆகியோரும் நடிக்கின்றனர்.

## காதோ...

சமீபகாலமாக வெற்...
நடிகர். அதனால் தூது...
'மு' நடிகரை வீட்டுக்கு...
சென்றார். விருந்தை...
'சான்ஸ்' பெற்றுத் தரு...

'பா' நடிகரும்...
நடிகைக்கு இப்போது...
வாரிவழங்கும் கவர்ச்சி...
பிரபல தொழிலதிபர்க...

வேட்டிய மடிச்சுக்க...
மேலே கடன். அதுதவிர...
அதனாலும் ஏகப்பட்ட...
தயாரித்து இயக்கப்போ...
இளம் நடிகர் ஒரு...

வள்ளி...
தந்தை...



படிப்பகம்

www.padippakam.com

# சினி விசிட்

## ...சொல்லுகிறோம்

...ாயகராக உலா வருகிறார் முன்றெழுத்து 'மு' ...ர்க்கிறார்கள் சில நடிகைகள். கஸ்தூர நடிகை ...க்கு வருமாறு அழைத்திருந்தாராம். நடிகரும் ... பார்த்துவிட்டு வந்துவிட்டார். நன்றிக் கடனாக ...ன்று நம்பிக் கொண்டிருக்கிறார் நடிகை.

...ருமானவர் சீமைப்பசுவாக கண்டெடுத்த வாளி ...ப்பில்லை. வாளிப்பான உடல் இருந்தும், அதனை ...ன இருந்தும் வாய்ப்பில்லாமல் தவிக்கிறார். அதனால் ...சிலரை பழக்கம் பிடிக்க ஆரம்பித்துள்ளாராம்.

...டிய நடிகர் முழித்துக்கொண்டிருக்கிறார். கழுத்துக்கு ... அடிக்கடி நடிகைகளின் தயவும் அவருக்குத் தேவை. ...செலவு. அனைத்தையும் ஈடுகட்ட இரண்டு படங்களை ...கிறார். கதாநாயகன் அவரல்ல. தனது சிஷ்யர் ஒருவரையும் ...வரையும் வைத்து இயக்கப்போகிறார்.

...நாயகிக்கு படங்கள் ஒப்பந்தமாக தடையாக இருந்தது ...குலம்தான். பொறுத்துப் பார்த்த நடிகை தந்தைக் குலத்தை ...ம் கட்டிவிட்டு தானே நேரடியாக இறங்கி, ஆளுக்கு தகுந்தாற்போல ...நுசரிக்க ஆரம்பித்தார். இப்போது கைவசம் நாலு படங்கள்.

...'தேவ' நடிகையும் 'கா' நடிகருக்கு ஒத்துழைப்பு கொடுத்தார். ...ப்பிட்ட படத்தில் படப்பிடிப்பு முடிந்துவிட்டால் நடிகருக்கு ...பை' சொல்லிவிடலாம் என்றுதான் நினைத்தார். அதனால் ...கரின் கை நீளும்போதெல்லாம் கண்டு கொள்ளாமல் இருந்தார். ...ப்பிடிப்பு முடிந்து படமும் வெளியாகிவிட்டது. அதன் பின்னரும் ...கர் "உதவிக்கு வரலாமா?" என்று அன்புத் தொல்லை கொடுப்ப...ல் நடிகை வெறுத்துப் போயிருக்கிறார். 'உனக்காக 'ரே' ...கையை பகைக்க துணிந்தவன் நான்' என்கிறாராம் நடிகர்.

...பேபியாக இருந்து நாயகியான நடிகையின் படம் சூப்பர்ஹிட். ...னால் 'தொடர்ந்து படிக்கப் போகிறேன்' என்று கொடுத்த ...க்குமூலத்தை வாபஸ் பெற்றுவிட்டு, நடிப்புத் தொழிலில் ...நேரமாக குதிக்க நினைக்கிறார். ஆனால் ஊதியம்தான் ...ச்சக்கம். பன்னிரண்டு இலட்சம்! தயாரிப்பாளர்கள் ஓட்டம் ...க்கிறார்கள். அவருடன் ஜோடியாக நடித்த இளம் ஹீரோ ...க்கடி தொலைபேசியில் பேசி தட்டிக்கொடுக்கிறாராம்.

...விநாயகரின் இன்னொரு பெயரைக் கொண்ட இளம் நடிகர் ...க்கும் கூத்துக் களுக்கு எல்லையே இல்லை. தொலைபேசியில் ...கைகள் உரையாடினால் முழு விபரங்களையும் விலா வாரியாக ...கிறார். பின்னர் நேரில் அழைத்து 'அல்வா' கொடுக்கிறார். ...ருக்கு ஏற்கனவே திருமணமாகிவிட்டது. துணைவியாரும் ...கயாக இருந்துதான் மாட்டிக் கொண்டாராம்.

## அவரால் இவர்

'ஆசைத்தம்பி', 'இனி எல்லாம் சுகமே', 'ஜாலி' போன்ற ...ங்களில் அப்பாஸ் நடிப்பதால் விக்ரமும் படு பிஸி. அதாகப்பட்டது, ...பாசுக்கு தமிழில் பின்னணிக் குரல் கொடுப்பவர் நடிகர் ...ரம்.

## மறுபடி விஜயகாந்த்

'உளவுத்துறை'க்குப் பின்னர் மறுபடியும் விஜயகாந்த் காட்டில் மழை. இடையே ஏற்பட்ட வீழ்ச்சியை 'உளவுத்துறை' சீராக்கிவிட்டது.

விஜயகாந்த், சத்யராஜ், பிரபு, அர்ஜுன் ஆகியோரின் படங்கள் சமீபகாலமாக நன்றாகப் போகவில்லை. அவர்களில் விஜயகாந்த் மட்டும் மறுபடியும் எழுந்திருக்கிறார்.

"முன்னரும் இப்படி விழ்ந்திருக்கிறேன். விஜயகாந்த் கதை முடிந்தது என்று நினைத்தனர் சிலர். மறுபடி எழுந்து காட்டினேன். இப்போதும் அப்படித்தான். ரசிகர்கள் என்னை வாழவைப்பார்கள். வெல்லவும் வைப்பார்கள்" என்கிறார் விஜயகாந்த். அடுத்த படம் 'தர்மா'. துரிதகதியில் படப்பிடிப்பு நடந்து வருகிறது. சண்டைக் காட்சிகளுக்கு முதலிடம். இங்குள்ள படத்தைப் பார்த்தாலே தெரியும்தானே.

## ஆங்கிலப் படம் தழுவல் போட்டி

பொங்கலுக்கு வெளிவந்த 'நாம் இருவர் நமக்கு இருவர்', 'உதவிக்கு வரலாமா' ஆகிய இரு படங்களின் கதைகளும் ஒரே சாயலில் இருக்கின்றன.

காரணம், இரண்டு படங்களும் 'டூமச்' என்ற ஆங்கிலப் படத்தின் தழுவல். நகைச்சுவைக்காக உலக அளவில் பேசப்பட்ட படம் 'டூமச்'.

'டூமச்'சை தழுவிய இரண்டு படங்களும் பொங்கலுக்கு வந்ததைப் பார்த்ததும் மேலும் இரண்டு இயக்குநர்களுக்கு செம அதிர்ச்சி. 'காதலா காதலா', 'ஜீன்ஸ்', ஆகிய படங்களும் 'டூமச்' படத்தை தழுவியே எடுக்கப்பட்டிருந்தன.

'காதலா காதலா' படத்தின் பல காட்சிகளை வெட்டி எறிந்துவிட்டு புதிதாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். 'ஜீன்ஸ்' படத்தின் பல காட்சிகளையும் புதிதாகச் சுடப்போகிறார்கள்.

மறுபடியும் சுடுவதால் செலவு இரட்டிப்பு மடங்காகிவிட்டது. 'டூமச்' படத்தைத் தன்னைத் தவிர பலரும் தமிழ் சினிமா உலகில் பார்த்திருப்பார்கள் என்று கமல் முதலில் நினைக்கவே இல்லையாம்.



கமல்
படம்: காதலா காதலா

## 'நான் மறைத்ததில்லை'

பத்திரிகைகள் ரொம்பத்தான் மோசம். எனக்கு நிறைய ஆண் நண்பர்கள் இருப்பது உண்மைதான். இதை நானே ஒளிக்காமல் சொல்லியிருக்கிறேன். இதை ஏன் ஒரு பெரிய விஷயமாக எழுதுகிறார்கள்?

என்னுடைய லேட்டஸ்ட் நண்பர் நாகார்ஜுனாவாம். ஒரு குடும்பத்தில் குழப்பம் உண்டாக்குவதில் இவர்களுக்கு என்ன இலாபமோ?" இப்படி புலம்புகிறவர் தபு.

இந்திய தேசிய விருது பெற்ற 'தபு' நாகார்ஜுனாவுடன் ஜோடி சேர்ந்து நடித்தார். 'தெலுங்கு பட உலக கார்த்திக்' என்று கூறப்படும் நாகார்ஜுனா தபுவை கவர்ந்து கொண்டதாக கதை பரவியது. அதுதான் தபு அலறியடிக்கிறார்.

## தலைவன் ரஜினி

தனது அடுத்த படத்திற்கு 'ராமகிருஷ்ணா' என்று பெயர் சூட்ட ரஜினி விரும்புவதாக தகவல். இதற்கிடையே அரசியல் கலந்த படம் ஒன்றில் ரஜினியை நடிக்க வைக்க அணுகியுள்ளார் ஒரு இயக்குநர்.

தெலுங்கில் ரஜினி, மோகன்பாபு நடித்த 'பெத்த ராயுடு' படத்தை இயக்கிய ரவிராஜ ஷெட்டிதான் ரஜினியை வைத்து அரசியல் படம் எடுக்க விரும்புகிறார். படத்திற்கு 'தலைவன்' என்று பெயர் சூட்டலாம் என்றும் திட்டம் வைத்திருக்கிறாராம். ரஜினி இன்னமும் பச்சைக் கொடி காட்டவில்லை.

## கண்ணில் ஒளி

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராயின் ஆண் நண்பர்களில் ஒருவர் ஒளிப்பதிவாளர் ஆர்யா.

"நான் பணி புரியும் படங்களில் கதாநாயகிகளுடன் நெருங்கிப் பழகுவேன். ஐஸ்வர்யாராயின் கண்களைப் பார்க்கும்போது எனக்குள் ஏதோ பொறி தட்டும். அதனால்தான் அவரிடம் மயங்கினேன்" என்கிறார் ஆர்யா.

## 'வேண்டுமடி நீ எனக்கு'

மூன்று இளம் கதாநாயகர்கள் நடிக்கும் படத்திற்கு 'வேண்டுமடி நீ எனக்கு' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

அப்பாஸ், அம்சவிர்தன். கரண் ஆகியோரே மூன்று ஹீரோக்கள். கதாநாயகியாக ப்ரீதா விஜயகுமார் நடிக்கிறார். மேலும் இரண்டு கதாநாயகிகளுக்கு தேர்வு நடக்கிறது.

கதை, திரைக் கதை, இயக்கம் க.திருமாவளவன். இவர் முன்பு இயக்குநர் பவித்ரனிடம் உதவியாளராகப் பணி புரிந்தவர். இசை: இளையராஜா. ஒளிப்பதிவு மோகன்ஜி. கதாநாயகன்களில் ஒருவரான அம்சவிர்தன் நடிகர் ரவிச்சந்திரனின் மகன்.



...அருண்குமார்-ரோஷினி
...ம்: துள்ளித்திரிந்த காலம்

## முகப்பில்
## மீனா
## விஜயகாந்த்



விஜயகாந்த்
படம்: தர்மா

## மந்த்ரா விசாரணை

'கொண்டாட்டம்' படம் மட்டும் வசூலில் கொண்டாட்டமாகிவிட்டால், மந்த்ரா முன்னுக்கு வந்துவிடுவார். திரையரங்குகளுக்கு தொலைபேசியில் தொடர்புகொண்டு வசூல் நிலவரத்தை கரிசனையோடு கேட்டு அறிகிறார் மந்த்ரா.

மந்த்ராவின் தாராள குணத்தால் ஹீரோ அர்ஜுன் புல்லரித்துவிட்டார். "நல்ல பொண்ணு. முகம் சுளிக்காமல் சொல்லுறபடி கேட்டு நடிக்கும். முன்னுக்கு வரும் பாருங்க" சான்றிதழ் தருகிறார் அர்ஜுன்.

## மினி சினி

...படங்களில் ஒரு பாடலைப் பாடுவதை ...யாகக் கொண்டிருப்பவர் கமல். ஆனால் தற்... நடித்து வரும் 'காதலா காதலா' படத்திற்காக ... பாடல்களைப் பாடியுள்ளார் கமல்.

...ஜெயராம் நடிக்கும் 'நண்பா நண்பா' படத்தில் ...க்கு ஜோடியாக நடிப்பவர் மலையாளத்தில் ...து முன்னணியில் இருக்கும் மஞ்சு வாரியாங். ...முதன் முதலில் நடிக்கும் வேற்று மொழிப் ... இதுவே.

...முறையாக இந்திப் படமொன்றில் நடிக்க ...ர் அப்பாஸ். 'மைனே பியார் கியா', 'ஹம் ...ஹைன் கோன்' ஆகிய படங்களைத் தயாரித்த ...ரீ பிக்சர்ஸ் நிறுவனம் இப்படத்தைத் தயாரிக்க...து.

...குட்டிக்காரன்' படத்திற்குப் பின் படங்கள் ...வதை நிறுத்தியிருந்த பார்த்திபன், இந்த ... இறுதிக்குள் ஒரு படத்தை இயக்கி நடிக்க ...ர். இப்படத்திற்கு 'வயலன்ஸ்' என்று பெயரிடப் ...ளது.

... படத்தில் நடித்து வரும் விஜயகாந்த் அடுத்து ...ரி ராஜா இயக்கும் படமொன்றில் நடிக்க ...ர். கிராமப் புறக்கதையமைப்பு உள்ள ...த்தில் விஜயகாந்திற்கு தந்தை-மகன் என ...ட வேடம்.

* தமிழில் புதிய படங்கள் எதுவுமின்றி இருக்கும் சங்கீதா 'மந்திரிகுமாரன்' என்ற மலையாளப்படத்தில் முகேஷிற்கு ஜோடியாக நடித்து வருகிறார். இதில் சங்கீதா விமானப் பணிப்பெண் வேடத்தில் நடிக்கிறார்.

* 'கடவுள்' படத்தை இயக்கி நடித்த வேலு பிரபாகரன் அடுத்து 'புரட்சிக் காரன்' என்ற படத்தை இயக்கவுள்ளார். இந்தப் படத்திலும் வேலு பிரபாகரனே கதாநாயகனாக நடிக்கிறார்.

* சுரேஷ் மேனன் இயக்கி நடித்த 'புதிய முகம்' இந்தியில் 'விஸ்வா பிதாதா' என்ற பெயரில் தயாராகிறது. தமிழில் சுரேஷ் மேனன்-வினீத் நடித்த வேடங்களில் இந்தியில் ஜாக்கி ஷெரப்-அமீர்கான் நடிக்கிறார்கள்.

* தமிழில் கார்த்திக்குடன் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்', பார்த்திபனுடன் 'விவரமான ஆளு' ஆகிய படங்களில் நடித்து வரும் ரோஜா, 'பெல்லடி சுபிட்சா' என்ற தெலுங்குப் படத்தில் முதன் முறையாக இரட்டை வேடத்தில் நடித்து வருகிறார்.

* சபாபதி இயக்கிய 'வி.ஐ.பி.' படத்தைத் தயாரித்தவர் கலைப்புலி எஸ்.தாணு. சபாபதி-தாணு மறுபடி இணைந்து புதிய படமொன்றைத் தரவிருக்கிறார்கள். இப்படத்தின் கதாநாயகனாக விஜய் நடிப்பார் எனத் தெரிகிறது.

## ஜொள் மீனா

மீனா 'நாம் இருவர் நமக்கு இருவ'ரில் கிளு கிளுப்பை மழையெனப் பொழிந்ததால் பல இரசிகக் கண்மணிகளுக்குக் காய்ச்சல் பிடித்துவிட்டது.

பலர் பக்கம் பக்கமாக ஜொள்விட்டு கடிதம் எழுதியிருக்கிறார்களாம். எழுபது வயது முதிர் இளைஞர் ஒருவரும் ஜொள் கடிதம் தீட்டியிருக்கிறார். அதனைப் படித்த மீனாவின் தாய்க்குலம் வெட்கப்பட்டுவிட்டாராம்.

## கீர்த்தி இல்லை

'இந்தியன்' படத்தைத் தயாரித்த ஏ.எம்.ரத்னம் தயாரிக்க கே.எஸ். ரவிக்குமார் இயக்கும் படம் 'நட்புக்காக'. இப்படத்தில் சரத் ஜோடியாக நடிக்க கீர்த்தி ரெட்டியை ஒப்பந்தம் செய்தனர். இப்போது அவரை தூக்கி யாச்!

ஒரே நாளில் ஐந்து ஹொட்டல்கள் மாறி மாறித் தங்கினாராம். தனக்கு ஏற்ற வசதி இல்லை என்று குறை மேல் குறை சொன்னாராம். தூக்கிவிட்டார்கள்.


படிப்பகம்

www.padippakam.com

## காதலின் பொன் வீதியில்...

வா...
இவ்வீதியூடே
அந்தத் தொடுவானத்தைத்
தொடும்வரை
நடந்து போவோம்!
❤ ✓
காதலில்
பயணம்தான்
இனிமையானது...
❤ ✓
திருமணத்தின் பின்
உன்னை
பௌர்ணமியாய்ப்
பார்ப்பதைக் காட்டிலும்
இப்பொழுது
உன்னை
மூன்றாம் பிறையாகக்
காண்பதில்தான் எனக்கு
அலாதிப் பிரியம்!
❤ ✓
அன்பே!
என்றாவது ஒரு நாள்
உன் உயிர் தொடும்
இடம் தொட
எனக்கு
வாய்ப்புக் கிடைக்கலாம்;
இருப்பினும்–
❤ ✓
தற்போது உன்
கை விரல்
நுனியைத்
தொடுவதில்தான்
எனக்கு
அதிகபட்ச திருப்தி!

என்ன ஆச்சரியம்...
சின்னச் சின்ன
உரசல்களில்கூட
நமக்குச்
சொர்க்கம் தெரிகிறது!
❤ ✓
சின்னச் சின்ன
சிரிப்பில் கூட
நமக்குள்
தீப்பற்றிக் கொள்கிறது!
❤ ✓
தீயில்லாமல்
யாகம் வளர்க்கத்
தெரிந்தவர்கள்
நாம் மட்டும்தானே?
❤ ✓
என்ன யோசிக்கிறாய்?
தொடுவதும்
அணைப்பதும்
இதழ்களில் பதிப்பதும்
நம் சமுதாயத்திற்குப்
பிழையாகத் தெரியலாம்;
இருப்பினும்
பிரச்சனையில்லை!
❤ ✓
காதலி வா...
இவ்வீதியூடே
அந்தத் தொடுவானத்தைத்
தொடும்வரை
நடந்து போவோம்!
❤ ✓


எம்.எஸ்.

## ஆயுதக் கண்டுபிடிப்பு...!

எங்களை
வீதிக்கு வரச்சொல்லி
துப்பாக்கி ரவைகள்
தூது வந்தன!
*
ஓலைக் குடிசையையும்
இழந்து
ஓடிவந்தோம்!
*
ஆயுதங்கள்
எங்கள்
விதியினை வரைந்தன!
*
அகதிகளாக
ஆணிவேர் முளைத்தது!
*
அன்றொருவன்
அகதிகள்
உருவாக்கத்திற்கா
ஆயுதம்
கண்டுபிடித்தான்?!
*
அவன்
இப்போது
உயிரோடு உள்ளானா?

கலைப்பிறை
ஜே.வஹாப்தீன்–
ஒலுவில்–01.

# அந்தநாள் அநியாயம்



அச்சுறுத்தல், மிரட்டல், வதைத்தல், அழித்தொழித்தல் போன்ற அடக்குமுறைகளை ஏவிவிட்டால், எல்லோரும் பயந்த பூச்சிகளாகிவிடுவர் என்பது 'அடக்குமுறையாளரின் தப்புக்கணக்கு.

எனினும் அந்தத் தப்புக்கணக்கால் பல இலட்சக்கணக்காக மனித உயிர்கள் மடிகின்றன. ஆனாலும் இறுதியில் தோற்று வீழ்வது அடக்குமுறையாளர்களே!

படத்தில் இருப்பது ஹிட்லர் காலக்கொடுமை. தம்மால் கைப்பற்றப்படும் பகுதிகளில் யூதர்கள் தென்பட்டால் பிடித்து பகிரங்கமாக தூக்கில் போட உத்தரவிட்டான் ஹிட்லர்.

சுட்டுக்கொல்வதைவிட தூக்கில் தொங்கவிட்டால் அதனைக் காணும் மக்களும் அஞ்சி நடுங்குவர் என்பது ஹிட்லரின் எண்ணம். 1941ம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

## யார் தருவார்?



கடற்கரை அலை,
காகிதப் பூ,
நிலைக்கவே முடியாத
நீர்க்குமிழ்
இவையெல்லாம்
போலவே– எம்
நிய வாழ்க்கையும்!

நேற்றைய முகம்
இன்று
பொருத்திப் பார்த்தோம்;
உடைந்த கண்ணாடியில்
உருவமைத்த விம்பமாய்
வெடிப்புச் சிதறல்கள்!

கீறல்கள், காயங்கள்
இதயச் சோலைக்குள்
இரத்த வடுக்கள்!

உறக்கமற்ற விழிகள்,
உணர்வற்ற
உதடுகள்,
நேசமற்ற
மனங்கள்
எலும்பு மிச்சிய
நடைப்பிணமாய்
எம் வாழ்க்கை!

பரிவும்
பாசமும்
பாசக் கயிறாய்,
உறவுகள்
எல்லாம்
யமன் வரவாய்,
எம் நிய வாழ்க்கையின்
கற்பனைக் கோலங்களில்
கறையான் ஓட்டைகள்!

யார் தருவார்
நியவாழ்க்கையை
நிம்மதியாய்?

தேடுதல் நடத்தி
தேர்தல் வைத்தாலும்
யார் தருவார்
நிய வாழ்க்கையை
நிம்மதியாய்!

யாழ்– ஞானகனேசன்

## தேன் கிண்ணம்

### சிக்கல்

முன்னர்
நான்
முற்றுப்புள்ளி வைக்க
நினைத்தபோதெல்லாம்
அடைப்புக் குறிக்குள்
சில கனவுகளை வளர்த்து
என்
ஆசைக்கு தூபமிட்டவன்
இப்போது
கமா வைக்க
நான் நினைத்தபோது
மட்டும்
கேள்விக்குறியாகிப்
போனதேனோ?

என் ப்ரியவனே!
புரியாத புதிராகி
குறுக்கெழுத்துப் போல
குழப்பமாய் இருக்கும்
என் வாழ்வு
உனக்கு மகிழ்ச்சியென்றால்
இடி(ற)ந்து விடமாட்டேன்!

மாறாக,
அது எனக்கு
இன்னொரு திருப்பமாகவே
இருந்து விட்டுப்
போகட்டும்!

மௌனிகா.

## உனக்கான என் பிரார்த்தனை!

கவலைகளையெல்லாம்
கடந்தாயிற்று
என்றெண்ணிய வேளையில்தான்
எல்லாம் நடந்தாயிற்று!
••
நீ
பொசுக்குவதற்கென்றே
புல்லாங்குழல்களையும்,
மிதிப்பதற்கென்றே
பூக்களையும்
சேகரித்திருக்கிறாய்!

என் வாழ்க்கைக்குள்
நெருப்பு துண்டங்களை
எறிந்து விட்டு,
நீ மட்டும்
மழை மேகங்களை
வரவழைத்துக் கொண்டாய்!
••
என்
கனவுகளையெல்லாம்
கலைத்து விட்டு
நீ உறக்கம்
பெற்றுக் கொண்டாய்!
••
என் வசந்தத்தின்
வாசல்களையெல்லாம்
அடைத்து விட்டு,
நீ திறந்து கொண்டாய்
வாழ்க்கையின் கதவுகளை!

முன்னால்
எதிர்கொள்ளப் போகிற
முட்பாதை தெரியாமல்
என் மெல்லிய
மனப்பரப்பை
கால்களால்
காயப்படுத்தினாய்!
••
பரவாயில்லை!
உனது வேண்டுகோள்களே
இனி என்
வேண்டுதல்கள்!
கண்ணீரின் ஈரம்
காயாத என்
பிரார்த்தனைகளின்
பலனால்
நீ எப்போதும்
சந்தோஷித்திருப்பாய்
என்பதுதான் நிஜம்!!

கம்மல்துறை– எம்.எல். ஸர்ஹான்.

## பேனா நண்பர்கள்


பெயர்: ரி.யு. ராஜன்,
வயது: 19
முகவரி: 1ம் வட்டாரம்,
சாம்பல்தீவு,
திருகோணமலை.
பொழுது போக்கு:
பேனா நட்பு,
பத்திரிகை வாசித்தல்.


பெயர்:
எல். எம். பாரிஸ்,
வயது: 21
முகவரி:
761/ஏ, கடற்கரை வீதி,
அக்கரைப்பற்று.
பொழுது போக்கு:
தொலைக்காட்சி,
பத்திரிகை, வானொலி.


பெயர்:
எஸ். கவிதா,
வயது: 29
முகவரி:
BREMGARTNER STR-83,
8953 DIETIKON,
SWITZERLAND.
பொழுது போக்கு:
இயற்கையை இரசித்தல்.


பெயர்: எஸ். சபாயா
வயது: --
முகவரி: BLOCK-NO. 08,
ROOD NO. 07,
STREET NO. 01,
HOUSE NO. 11,
ARDIYA, KUWAIT.
பொழுது போக்கு:
பேனா நட்பு.

## இந்த வாரம் உங்கள் பலன்

(08.03.1998 தொடக்கம் 14.03.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், மனக்கவலை. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், வீண் செலவு. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிட வாசம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, செலவதிகம். | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் கஷ்டம், மனக்கலக்கம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| வியாழன்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வெள்ளி- கடன் சுமை, மனக் கலக்கம். | பகல் | 11 | மணி |
| சனி- வீண்குறை கேட்டல், காரியத்தடை. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 | மணி |
| புதன்- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- செய் தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- தொழில் உயர்ச்சி, இனசன நன்மை. | மு.ப. | 10 | மணி |
| சனி- வீண் விரயம், காரியக் கேடு. | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், உயர்ந்த நட்பு | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை | பி.ப. | 1 | மணி |
| சனி- பயனுள்ள செயல், பொருள் வரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| புதன்- கடன்சுமை, காரியக்கேடு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, பலவித பேறு. | பகல் | 11 | மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும். | மு.ப. | 10 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியானுகூலம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### நவக்கிரக சஞ்சாரம்

கும்பம் - சூரியன், வியாழன், கேது.
மீனம் - சனி, புதன், செவ்வாய்.
சிம்மம் - இராகு.
மகரம் - வெள்ளி.

★ சந்திரன்- மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. | 1 | மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த நட்பு. | பகல் | 11 | மணி |
| புதன்- கடன் சுமை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், பயனற்ற செயல். | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் பகை, மனக் கலக்கம். | மு.ப. | 10 | மணி |
| சனி- இனசன நன்மை, காரியத்தடை. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, செலவதிகம். | பகல் | 11 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பணவரவு. | பி.ப. | 1 | மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| வியாழன்- பயனற்ற செயல், கௌரவக் குறைவு. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப. | 2 | மணி |
| சனி- முயற்சி மேன்மை, உயர்ந்த நிலை | பி.ப. | 2 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், மனக் கவலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் | 11 | மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| சனி- வெளியிடப் பயணம், காரியக்கேடு. | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், பண விரயம். | மு.ப. | 10 | மணி |
| திங்கள்- காரியானுகூலம், முயற்சி பலிதம். | பி.ப. | 2 | மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. | 1 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் | 11 | மணி |
| வியாழன்- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | மு.ப. | 10 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, பணவரவு. | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- வீண் முயற்சி, பண விரயம். | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், மனக்கவலை. | மு.ப. | 10 | மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, மனமகிழ்ச்சி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- காரியானுகூலம், செய்தொழில் நன்மை. | மு.ப. | 10 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, உயர்ந்த நிலை. | பகல் | 12 | மணி |
| சனி- செலவு மிகுதி, கடன்படல் | பகல் | 11 | மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. | 2 | மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணவரவு. | பகல் | 11 | மணி |
| செவ்வாய்- பணவரவு, காரியானுகூலம். | மு.ப. | 10 | மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 | மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 | மணி |
| வெள்ளி- பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும். | மு.ப. | 11 | மணி |
| சனி- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. | 1 | மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | | |
|---|---|---|---|
| ஞாயிறு- தொழில் கஷ்டம், வீண் கலக்கம். | பி.ப. | 1 | மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 | மணி |
| செவ்வாய்- பெரியோர் சுகம், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 | மணி |
| புதன்- தொழில் உயர்ச்சி, அந்நியர் உதவி. | பகல் | 11 | மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, வீண் விரயம். | பி.ப. | 2 | மணி |
| வெள்ளி- பெரியோர் சகாயம், மனக்குறை நீங்கும். | பி.ப. | 1 | மணி |
| சனி- தொழில் உயர்ச்சி, உயர்ந்த நட்பு. | பகல் | 12 | மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்

www.padippakam.com

## உங்கள் குழந்தைகளும் நீங்களும்



குழந்தைப் பருவம்.

இந்தப் பருவத்தில் நாம் குழந்தைகளை எப்படி உருவாக்குகிறோமோ அப்படித்தான் அவர்கள் வளர்வார்கள். அவர்கள் வாழ்க்கையும் அமையும்.

நன்கு பக்குவப்பட்ட, குழைத்த களி மண்ணைக்கொண்டு நாம் எப்படியெல்லாம் விரும்புகிறோமோ, அப்படியெல்லாம் விரும்புகிற பலவிதமான பொம்மைகளை நாம் உருவாக்க முடியும். அதே போலத்தான் இந்தக் குழந்தைப் பருவமும்.

சமுதாயத்தில் ஒரு சிறந்த மனிதனாக உருவாகி, உயர்ந்த இடத்தை அடைவதும், அவனே கெட்டவனாக மாறி ஒரு சமூக விரோதியாகவும், சமூகத்தில் வெறுக்கத்தக்கவனாகவும் மாறுவதும் ஒரு மனிதன் தன் குழந்தைப்பருவத்தில் எவ்வாறு வளர்க்கப்பட்டானோ அதன் விம்பமாகப் பரிணமிக்கிறான்.

குழந்தைகளிடம் கட்டுப்பாடாகவும், அதே சமயம் மிகவும் நேசிப்பவர்களாகவும், அன்புடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

குழந்தைகள் பெற்றோர்களிடம் எதிர்பார்ப்பது பணத்தையோ, பட்டத்தையோ பவிசையோ அல்ல; உன்னதமான அன்பைத்தான்.

குழந்தைகளின் வளர்ப்பில் விசேஷ கவனம் செலுத்தி அன்பு, மனிதநேயம், இரக்க சிந்தனை, கடவுள் பக்தி, தர்ம சிந்தனை, பிறருக்கு உதவுகின்ற மனப்பான்மை போன்ற நல்ல எண்ணங்களை அவர்களின் பிஞ்சு உள்ளத்தில் வளர்க்க வேண்டும்.

குழந்தைகளிடம் வெறுப்பு, விருப்பு இல்லாமல் ஒரே மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும்.

சில வீடுகளில் ஆண் குழந்தைகளும், பெண் குழந்தைகளும் இருப்பார்கள். நாம் அவர்களை இரு கண்களைப் போல சமமாக நேசிக்க வேண்டும்.

ஆண் குழந்தை என்றோ, பெண் குழந்தை என்றோ பாகுபாட்டினை அவர்களிடத்தில் காண்பிக்கக் கூடாது. இவ்வாறு நாம் காட்டுகின்ற வேறுபாடாது அவர்கள் பெரியவர்களாக வளர்ந்ததும் அவர்கள் மனதில் வேரூன்றிவிடும். தாழ்வு மனப்பான்மையை வளர்த்துவிடும்.

உங்கள் மகனுக்கு ஐந்து வயது ஆகும் வரை அவனை அரசனைப் போல் நடத்த வேண்டும். பின் பத்து ஆண்டுகளுக்கு மாணவனைப்போல் நடத்த வேண்டும். அவனுக்குப் பதினாறு வயது நிறைந்த பின் அவனை நண்பனைப் போல் நடத்த வேண்டும்.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது', 'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதை மனதில் கொண்டு குழந்தைகளுக்கு நாளும் பல நல்லுரைகளை எடுத்துக் கூறி, நம் குழந்தைகளை நாடு போற்றும் நல்லவர்கள் ஆக்குவோம்.

## உதடுகளை மெருகூட்ட

முக அழகைப் பிரதிபலிப்பதில் முதலிடம் வகிப்பவை உதடுகள். உதடுகளின் அமைப்பு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கும். செதுக்கி வைத்தாற் போன்ற சிவந்த உதடுகள் யாருக்கும் சாத்தியமில்லை. மேக்கப்பின் உதவியால் உதடுகளின் அழகை அதிகரித்துக் காட்டலாம்.



### பெரிய உதடுகளுக்கு

★ உதடுகளின் அளவைச் சற்றுக் குறைத்துக் காட்ட, லிப் பென்சிலால் முதலில் அவற்றின் ஓரங்களை வரையவும்.

★ மேலுதட்டின் நடுவிலிருந்து ஆரம்பித்துக் கீழ் நோக்கி வரையவும், கீழுதட்டிற்கும் அதேபோலச் செய்யவும்.

★ மேற்கூறிய முறையிலேயே லிப் பிரஷ்ஷால் லிப்ஸ்டிக்கை உதடுகளில் தடவவும்.

★ இவ்வகை உதடுகளுக்கு வெளிர் நிற, ரோஜா நிற லிப்ஸ்டிக்குகள் மிகப் பொருத்தமாக இருக்கும்.

மேலுதடு மெல்லியதாகவும், கீழுதடு தடித்தும் இருந்தால்...

★ மேலுதட்டில் முதலில் சொன்ன படியே லிப் பென்சிலால் அவுட்லைன் வரைந்து, பிறகு லிப் பிரஷ்ஷால் சற்று டார்க் நிறத்தில் லிப்ஸ்டிக் போடவும்.

★ கீழுதட்டிலும் அவுட்லைன் வரைந்து, மேலுதட்டைவிட சற்று லைட்டாக லிப்ஸ்டிக் போடவும். இது உதடுகளின் அளவைச் சீராகக் காட்டும்.

### அகலமான உதடுகளுக்கு..

★ டார்க் நிற லிப் பென்சிலால் இரண்டு உதடுகளையும் வாயின் ஓரத்தை நோக்கி அவுட்லைன் செய்யவும்.

★ மிகவும் டார்க் நிறமாகவோ, மிகவும் வெளிர் நிறமாகவோ இல்லாத நிறத்தில் லிப்ஸ்டிக் தடவவும்.

★ டார்க் நிற லிப்ஸ்டிக்குகள் மற்றும் லிப்கிளாஸ் இரண்டுமே உதடுகளை மேலும் அகலமாகக் காட்டும் என்பதால், அவற்றைத் தவிர்த்து விடவும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்

☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



**வாரம் ஒரு பட்டுச் சேலை** DH

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 14-03-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள் 25

குதிரையிலிருந்து விழுந்து புஜ எலும்பு முறிந்துகிடந்த சாள்ஸைப் பார்க்க செல்வதைவிட அங்குள்ள நோயாளர்களை பார்வையிட்டு ஆறுதல் கூறுவதே டயானாவுக்கு மனநிம்மதியளித்தது.

தன்னைக் கண்டதும் சம்பிரதாயமாக புன்னகைத்துவிட்டு முகத்தை நீட்டிக்கொள்ளும் சாள்ஸைவிட, தனது ஆறுதல் வார்த்தைகளால் உற்சாகமடையும் நோயாளர்களுடன் நேரத்தைச் செலவிடுவது திருப்தியாகவும் இருந்தது.

கார் விபத்து ஒன்றில் சிக்கி அங்கு கோமா நிலையில் கிடந்த ஒரு நோயாளர்பற்றி மருத்துவர்கள் டயானாவிடம் கூறினார்கள்.


அந்த நோயாளியைச் சென்று பார்வையிட்டார் டயானா. முதல் பார்வையிலேயே அந்த நோயாளிமீது டயானாவுக்கு பரிவு ஏற்பட்டுவிட்டது.

அவரது பெயர் டின் வூட்வேட். நடுத்தர வயது. மனைவி இளமையாக இருந்தாள். அழுது கொண்டிருந்தாள். டயானா தோளில் தட்டிக் கொடுத்தார்.

அதன்பின் அடிக்கடி டினைப் பார்வையிடச் சென்றார். டின் மெதுவாகக் குணமாகி வந்தார். டயானா அவரது கட்டிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கும் அளவுக்கு ஒட்டுதல் ஏற்பட்டிருந்தது.

'ஒரு நோயாளியின் கட்டிலில் இளவரசி அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறாரே!' கண்டோர் விழிகள் வியப்பால் விரிந்தன.

மருத்துவமனையில் இருந்து வெளியேயும் செய்தி கசிந்தது. டின் பூரண குணமடைந்தார்.


KENSINGTON PALACE

September 4th 1990.

Dear Peter,

I have been thinking of you & Neil so much during the last few days — I can't imagine what you must be going through, the pain & total devastation.

You were extraordinarily brave on Saturday, but I worried continually about how you would

டயானா எழுதிய அனுதாபக் கடிதம்

### வதந்திகள்

மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய டினை அங்கும் சென்று சந்தித்தார் டயானா.

டினின் மனைவியுடனும் டயானா சிநேகிதியானார். டின், அவரது மனைவி, டயானா மூவரும் அமர்ந்துதான் பேசிக்கொண்டிருப்பார்கள்.

டயானாவுக்கும் டினுக்கும் தப்பான எந்த உறவும் இருந்ததில்லை.

டயானா டினின் வீட்டுக்குச் சென்றுவருவதை மோப்பம் பிடித்த பத்திரிகைகள் கண்ணும், காதும், மூக்கும் வைத்து செய்திகளை வெளியிட்டன.


கனடா ரொறண்டோவில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின்போது டயானா–சாள்ஸ்

நாடியைப் பிடித்துப் பார்த்தார். மூக்கடியில் விரலை வைத்து சுவாசத்தைப் பரிசீலித்தார்.

அப் பெண் சில நிமிடங்களுக்கு முன்னரே மரணமடைந்து விட்டார் என்பதைக் கூறினார்.

கணவன் துக்கம் தாளாமல் விம்மத் தொடங்கிவிட்டார். அவரது மகனும் காதலியும் அங்குவந்து சேர்ந்தனர்.

மூவரையும் அருகில் இருந்த அறை ஒன்றுக்கு அழைத்துச்சென்ற டயானா அவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

தனது உதவியாளரை அழைத்து ஒரு மதுப்போத்தல் வாங்கிவருமாறு பணித்தார். மதுப்போத்தல் வந்ததும் அந்தக் கணவர் அருந்த கொடுத்தார்.

தங்களுக்கு இத்தனை கரிசனையாக ஆறுதல் கூறுவது டயானா என்பது அவர்கள் மூவருக்கும் தெரியவே தெரியாது.

### மறைக்க முடியவில்லை

1991ல் சாள்ஸும், டயானாவும் கனடாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

அங்கு சென்ற இடமெல்லாம் டயானாவுக்குத்தான் முதல் மரியாதை. சாள்ஸ் உள்ளே பொருமினார்.

இருவருக்கும் இடையே மனக்கசப்பு அதிகரித்து வந்த காலகட்டம் அது.

வெளிக்குப் புன்னகைத்துக் கொண்டனரே தவிர, மனதளவில் எலியும் பூனையுமாக மாறியிருந்தனர்.

டயானாவின் மனதில் எரிச்சலை ஏற்படுத்துவதுபோல, கனடாவில் அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கே ஃபோன் செய்து சாள்ஸுடன் பேசினார் கமீலா.

சாள்ஸும் இரகசியம் பேசும் தோரணையுடன் அளவளாவிக் கொண்டிருந்தார்.

டயானா அங்கிருப்பதைப் பற்றியே கவலைப்படாதவராக சாள்ஸ் ஃபோனிலேயே கொஞ்சிக் குலாவினார்.

டயானாவை சீண்டி வெறுப்பூட்டும் எண்ணத்துடன்தான் சாள்ஸ் அவ்வாறு நடந்து கொண்டார்.

சாள்ஸ் அவ்வாறு நினைத்தமையால் சாள்ஸ்- டயானா மோதல் பளிச்சென்று தெரியுமளவுக்கு அடுத்த நிகழ்ச்சி அரங்கேறியது.

கனடா ரொறண்டோவில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் சாள்ஸும் டயானாவும் கலந்துகொண்டபோது, டயானா சாள்ஸை விட்டு விலகியே நின்றார்.

இருவருக்கும் அருகருகே ஆசனங்கள் போடப்பட்டிருந்தன. ஆரம்பத்தில் இருந்தே டயானாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண்டிருந்தது. ஆசனத்தில் அமர்ந்த பின்னர் டயானாவின் முகபாவம் பளிச்சென்று தெரிந்தது.

அருகருகே அமர்ந்திருந்தபோதும் இருவரும் ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கொள்ளவே இல்லை.

இந்த மௌனமான யுத்தத்தை பத்திரிகையாளர்களும், படப்பிடிப்பாளர்களும் கவனிக்காமல் இருப்பார்களா? கவனித்தனர்.

கமராக்கள் வெளிச்சம் வீசி அக்காட்சியை கச்சிதமாகப் பிடித்துக்கொண்டன.

மறுநாள் உலகெங்கும் அந்தப்புகைப்படங்கள் பறந்தன.

சாள்ஸ்-டயானா இடையே பிளவு வலுத்து வருகிறது என்பதற்கு அந்தப் புகைப்படமே தக்க ஆதாரமாக அமைந்தது.

### மற்றொரு பிளவு.

அரச குடும்பத்தில் மற்றொரு புயல் வீசிக் கொண்டிருந்தது.

தன் மனைவிக்கு சற்றுக் கூடுதலாக செல்லம் கொடுத்துவிட்டேனோ என்று நினைத்த ஆண்ட்ரூ மெல்ல மெல்ல சாராவை கட்டுப்படுத்தத் தொடங்கினார்.

ஆண்ட்ரூவை காதலிக்க முன்னரே அமெரிக்க தொழிலதிபரான ஸ்ரீவ் என்பவருடன் சாரா நெருங்கிப் பழகிய தகவலை பத்திரிகைகள் கண்டு பிடித்து வெளியிட்டன.

சாராவோ, ஸ்ரீவ்வோ அதனை மறுக்கவில்லை. "நாங்கள் நல்ல நண்பர்கள் மட்டும் தான்!" என்றே கூறினார்கள்.

திருமணத்தின் பின்னரும் சாரா அடிக்கடி ஸ்ரீவ்வுடன் காணப்பட்டார். எண்ணெய் வியாபாரியான ஸ்ரீவ் பெண்களுடன் பொழுதைக் கழிப்பதில் பிரியமானவர்.

சாராவை கண்டிக்க முற்பட்ட ஆண்ட்ரூவை சாரா கணக்கில் எடுக்கவில்லை. "என் சுதந்திரத்தில் தலையிட்டால் நடப்பதே வேறு! என்னை என்ன டயானா மாதிரி பயந்தாங்கொள்ளி என்றா நினைத்துவிட்டீர்கள்?" என்று சத்தம் போட்டாள் சாரா.

ஆண்ட்ரூ- சாரா தம்பதிக்கு இரண்டு குழந்தைகள் அப்போது இருந்தன.

## துயரில் பங்கெடுத்த இளவரசி

'டினுடன் இளவரசி உல்லாசம், சாள்ஸ் கொடுக்க முடியாத சுகத்தை டின் கொடுக்கிறார்!' என்று செய்தி வெளியாகியது.

'தூய்மையான நட்பை இப்படி தூஷிக்கிறார்களே' என்று நினைத்து மனம் உடைந்து போனார் டயானா. அதன்பின்னர் டினின் வீட்டுக்குச் செல்வதை தவிர்த்துவிட்டார்.

"பத்திரிகைக்காரர்களுக்குப் பயந்து நான் செல்லாமல் விடவில்லை. அமைதியான அக் குடும்பம் வதந்திகளால் பாதிக்கப்பட்டு விடக் கூடாதே என்பதால்தான் போகாமல் தவிர்த்தேன். நானும் டினும், அவர் மனைவியும் ஃபோனில் பேசிக் கொள்வோம்," என்றார் டயானா.

ஒருமுறை அந்த மருத்துவமனையின் அவசரச் சிகிச்சை பிரிவுப் பக்கமாக சென்று பார்வையிட்டுக் கொண்டிருந்தார் டயானா.

அந்த நேரம், மயக்கமடைந்த நிலையில் இருந்த ஒருபெண் அருகே அவள் கணவர் அமர்ந்திருந்தார். அப்பெண்ணின் கையைப் பிடித்த வண்ணம் சோகமாக காட்சியளித்தார் அவர்.

அருகில் சென்ற டயானா ஒரு இருக்கையை இழுத்து அருகில் போட்டுக்கொண்டு, கணவனின் மற்றக் கையையும், அப் பெண்ணின் கையையும் தானே பிடித்துக்கொண்டு நீண்ட நேரம் அமர்ந்திருந்தார்.

அங்கு வந்த டாக்டர் அப்பெண்ணின்

தொலைக்காட்சி நடிகையாக இருக்கக் கூடும் என்றுதான் நினைத்திருந்தனர். மகனின் காதலி பெயரைக் கேட்டதும், டயானா மென்மையாக சிரித்தபடி, "டயானா என்றே கூப்பிடுங்களேன்!" என்றபோது மூவரும் அதிர்ச்சியடைந்தனர்.

கடந்த இரண்டு மணிநேரமாக தங்களுடன் இருந்தவர் நாட்டின் இளவரசி என்பதை அவர்கள் நம்பமுடியாமல் திக்குமுக்காடிப் போயினர்.

### அனுதாபக் கடிதம்

மனைவி இழந்த துயரம் ஒருபுறம் இருந்தாலும், டயானாவின் பெருந்தன்மையால் திருப்தியடைந்தார் அந்தக் கணவர்.

"முன்பின் தெரியாத எங்களுடன் எங்கள் குடும்பத்தில் ஒருவரைப்போல துயரத்தில் பங்கெடுத்துக் கொண்டாரே!" என்று கண்கள் பனிக்கக் கூறினார்.

அந்தக் கணவரின் பெயர் பீட்டர். 53வயது. சாதாரண தொழிலாளி.

திருமதி பீட்டரின் மரணச் சடங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது அரண்மனைச் சேவகன் ஒருவன் மலர் வளையத்துடன் வந்தான்.

மலர்வளையத்தை வைத்துவிட்டு கடிதம் ஒன்றை பீட்டரின் கையில் கொடுத்தான். இரண்டும் டயானா அனுப்பி வைத்தவை.

அனுதாபக் கடிதத்தை தன் கைப்படவே டயானா எழுதி இருந்தார். பீட்டர் என்ற அந்தத் தொழிலாளியின் கண்களில் இருந்து தாரை தாரையாக கண்ணீர் கொட்டியது.

டயானாவின் இத்தகைய நடவடிக்கைகள் அரச குடும்பத்தினருக்கு தெரிய வந்தபோது, ஏதோ பெரிய பாவ காரியத்தை டயானா செய்வதுபோல முகம் சுளித்தனர்.

உதவாக்கரை ஒன்று அரச குடும்பத்தில் தப்பித் தவறிப் புகுந்துகொண்டது என்றுதான் எண்ணினார்கள்.


இளவரசர் சாள்ஸ் போலோ விளையாட்டின்போது குதிரையிலிருந்து விழுகிறார்.

ஆண்ட்ரூ- சாரா இருவரும் விவாகரத்து செய்ய முன்வந்தனர். எலிசபெத் மகாராணிக்கு அது சரியென்றுபடவில்லை.

அரச குடும்ப மானம் கப்பலேறிக் கொண்டிருக்கிறது. இந்த நேரத்தில் சாரா - ஆண்ட்ரூ விவாகரத்து செய்தால் கேட்கவே வேண்டாம். ஒரே குழப்பமாகிவிடும். டயானா கூட அடுத்து விவாகரத்து கேட்கக்கூடும் என்று பயந்தார் மகாராணி.

சாராவும், ஆண்ட்ரூவும் முதலில் தனித்தனி அறைகளில் தூங்க ஆரம்பித்தனர். பின்னர் அரண்மனையைவிட்டே வெளியேற முடிவு செய்தார் சாரா.

சாராவும் டயானாவும் கைகோர்த்துக் கொண்டுவிட்டால் பிரச்சனை பெரிதாகிவிடும் என்று பயந்த மகாராணி டயானாவை கைக்குள் போட்டுக் கொள்ள நினைத்தார்.

இரண்டு மருமகள்களும் ஒன்று சேராமல் தடுக்க வேண்டிய மாமியாராக மாறினார் மகாராணி.

(அடுத்த வாரமும் வரும்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**கொக்குவில் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — **செல்வி சியாமினி பஞ்லிங்கம்,** புகையிரதக் கடவை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!


இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




படிப்பகம்

www.padippakam.com





சின்னஞ் சிறு கிளியே-கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
என்னைக் கலிதீர்த்தே-உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்!
-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வியாபாரியும் ஒட்டகமும்



ஒரு பாலைவனத்தினூடாக அரேபிய வியாபாரி ஒருவன் பயணம் செய்து கொண்டிருந்தான். இரவானதும் அங்கு கடுங் குளிர் ஏற்பட்டது.

எனவே வியாபாரி, கூடாரம் ஒன்றை அமைத்து அங்கே இரவுப் பொழுதைக் கழிக்கலானான்.

அப்போது பாலைவனத்தில் இருந்த ஒட்டகம் ஒன்று அவனது கூடாரத்தை நோக்கி வந்தது. அங்கு வந்து கூடாரத்தில் படுத்திருந்த வியாபாரியிடம்,

"வியாபாரியே! வெளியே சரியான குளிராக இருக்கிறது. என் தலையைக் கூடாரத்திற்குள் வைத்திருக்க அருள் கூர்ந்து அனுமதி கொடுக்க வேண்டும்!" என்று கேட்டது.

அதற்கு சரியென்று அனுமதியளித்தான் வியாபாரி. ஒட்டகமும் கூடாரத்திற்குள் தன் தலையை நுழைத்துக் கொண்டது.

பிறகு ஒட்டகம், "என் கழுத்தையும் உள்ளே நுழைத்துக் கொள்ளட்டுமா?" என்று கேட்டது. அந்த வியாபாரியும் அப்படியே செய்வதற்கு அனுமதித்தான்.

மறுபடியும் ஒட்டகம் சுற்றிப் பார்த்து,

"கூடாரத்திற்குள் என்னுடைய முன்னங் கால்களை வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டது.

வியாபாரியும் சற்று ஒதுங்கிக் கொண்டு, அதன் முன்னங்கால்களை கூடாரத்திற்குள் வைத்துக்கொள்ள அனுமதியளித்தான்.

கடைசியாக ஒட்டகம், "நான் கூடாரத்திற்குள்ளேயே வந்து நிற்கலாமா? வெளியே குளிர் தாங்க முடியவில்லை!" என்றது.

வியாபாரியும் ஒட்டகத்தின் மேல் பரிதாபப்பட்டு அதைக் கூடாரத்திற்குள் வந்து விடுமாறு கூறினான்.

ஒட்டகம் கூடாரத்திற்குள் நகர்ந்து வந்துவிட்டது. ஆனால் கூடாரம் இருவருக்கும் போதுமானதாக இருக்கவில்லை. உடனே ஒட்டகம் வியாபாரியைப் பார்த்து,

"நாம் இருவரும் இங்கே தங்க இடம் போதாது. என்னைவிட நீ சிறியவனாய் இருப்பதால் தயவு செய்து கூடாரத்திற்கு வெளியே நில். அப்போதுதான் எனக்கு இடம் போதுமானதாக இருக்கும்!" என்றது.

அப்படிச் சொன்னது மாத்திரமன்றி, வியாபாரியையும் கூடாரத்திற்கு வெளியே தள்ளி விட்டது.

இதே போன்றுதான் தீயவற்றை முதலிலேயே தடுக்க வேண்டும். இல்லாவிட்டால் கொஞ்சம் கொஞ்சமாக நம்மில்புகுந்து முடிவில் நம்மையே வென்றுவிடும்.

# அதிசயம் - ஆனால் உண்மை!



**வுட்கொக்:**

இப்பறவை தனது உணவைக் கண்ணால் பார்க்காமலேயே, மண்ணில் உணவு இருக்கும் இடத்தைத் தெரிந்து வைத்துக்கொண்டு, தனது 3 அங்குல நீள அலகை மண்ணினுள் செலுத்தி மண்புழுவை அப்படியே உட்கொள்ளும்.



**ஒஸ்ரிய தளபதி:**


ஒஸ்ரிய நாட்டுப் படைத்தளபதி கவுண்ட் அன்டன் ஸ்டாரே என்பவர் 47 வருடங்களில் 89 போர்களில் பங்கெடுத்தார். இவற்றில் 84 போர்களில் படுகாயமடைந்தார்.



**ஸ்கலாப்:**

இந்தக் கடற் சிப்பிக்கு 100 கண்கள் உள்ளன. ஒளி மிகுந்த ஒவ்வொரு பச்சை நிறக் கண்ணிலும் கண்வில்லையும் விழித்திரையும், பார்வை நரம்புகளும் உள்ளன.

**கடலைக் கடந்தவர்:**



டாக்டர் அலய்ன் பம்பார்ட் என்ற ஃபிரஞ்சுக்காரர் சிறு ஓடத்தில் ஏறி அட்லாண்டிக் கடலை 65 தினங்களில் கடந்தார். தனது பயண காலத்தில் இவர் கடல் நீரையும், தான் பிடித்த மீனையும் தவிர வேறெதையும் உட்கொள்ளவில்லை.

# வாரம் ஒரு நாடு

| | |
|---|---|
| தலைநகர் | - திரானா |
| பரப்பு | - 28,748 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 34 இலட்சம் |
| மொழி | - அல்பேனியன், கிரீக் |
| எழுத்தறிவு | - 75% |
| சமயம் | - இஸ்லாம், கிறிஸ்தவம் |
| நாணயம் | - லெக் |
| தனிநபர் வருமானம் | - 1300 டொலர். |

**அமைவிடம்:**

தென்கிழக்கு ஐரோப்பிய நாடு. அட்ரியாட்டிக் கடலில் மிக நீண்ட கடற்கரை கொண்டது. வடக்கிலும், கிழக்கிலும் யூகோஸ்லாவியாவும்; தெற்கில் கிரீசும் இதன் எல்லைகள்.

**வரலாறு:**

அந்நிய ஆதிக்கத்தில் இருந்து 1944ல் விடுதலை பெற்றது. 1945ல் நடைபெற்ற தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சியினர் பெரும்பான்மை பெற்றனர். துவக்கத்தில் ரஷ்யாவுடனும், பின்பு சீனாவுடனும் நெருங்கிய உறவு கொண்டிருந்தது. அல்பேனியா என்னும் பெயர் 1970ல் வந்த புதிய அரசியல் சட்டப்படி உருவாக்கப்பட்டது. 1992ல் கம்யூனிஸ்ட் அல்லாத அரசு பதவியேற்பு. 1992ல் ஐரோப்பாவின் முதல் இஸ்லாம் நாடாக மாறியது.




அல்பேனியா

**பொருளாதாரம்:**

கோதுமை முக்கிய உற்பத்திப் பொருள். இவற்றுடன் புகையிலை, இனிப்புக்கிழங்கு, பருத்தி போன்றவையும் உண்டு. கால்நடை வளர்ப்பும் உண்டு. நிலக்கரி எண்ணெய் உள்ளது.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.03.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 235
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 233

பரிசுக்குரியவர்:
செல்வன் சி. சந்திர சபநேமி,
வன்னி முந்தல், கற்பிட்டி.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| என். முகம்மது ஷிரோஜ், ஜாயா வித்தியாலயம், மூதூர்-04. | ∴பாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்∴போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| பே. சிவசுதன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. | செல்வராஜா எல்வின்ராஜ், பாலையூற்று, அ.த.க. பாடசாலை, திருகோணமலை. |
| செல்வன் எம். ஸவீர், ஹிரும்புர, குறுக்கு வீதி, காலி. | செல்வி மோகன் பிரியதர்ஷினி, ப.த.ம.ம. வித்தியாலயம், பண்டாரவளை. |
| கி. சரவணன், இந்து மத்திய கல்லூரி, இராகலை. | நிரோஷன் அமிர்தலிங்கம், உவெஸ்லி கல்லூரி, கொழும்பு-9. |
| செல்வன் சிந்துஷன் சந்திரசேகர், கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். | ஸ்ரீ ரஜனி வீரசிங்கம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை. |

# மெழுகுவர்த்தியின் வரலாறு

வெளிச்சம் தர மனிதன் முதலில் கண்டுபிடித்த விளக்குகளில் மிகப்பழமையானது மெழுகுவர்த்தி. கிரேக்க நாட்டவரும், எகிப்து நாட்டவரும் 5000 ஆண்டுகளுக்கு முன்னரே மெழுகுவர்த்தியைப் பயன்படுத்தியதாகத் தெரியவருகிறது.

முதலில் மரங்களில் இருந்து கிடைக்கும் ஒரு வகைத் தக்கையை மிருகக் கொழுப்பில் நனைத்து, மெழுகுவர்த்தியைப் போல் பயன்படுத்தினார்கள். பின்னர் மிருகக் கொழுப்பில் சணல் கயிறு, பருத்தி நூல் ஆகியவற்றைத் தோய்த்துப் பயன்படுத்தினார்கள்.

இதன்பின், கொழுப்புக்குப் பதிலாக தேன் மெழுகைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்பட்டது. பிறகு காலப் போக்கில், பரபின் மெழுகினால் மெழுகுவர்த்தி தயாரிக்கத் தொடங்கினார்கள்.



கிறிஸ்தவர்கள் மெழுகுவர்த்தியைப் புனிதப் பொருளாகக் கருதுகின்றனர். ஐரோப்பிய நாடுகளில் மெழுகுவர்த்தியை மிகக் கலைச்சிற்ப வேலைப்பாடுகளுடன் தயாரிக்கின்றனர். அத்துடன் ஐரோப்பியர்கள் விருந்து வைக்கும்போது மேசைமீது நிறைய மெழுகுவர்த்திகளை வைத்து உணவு பரிமாறுவார்கள்.

# காளான்கள்

மழை பெய்தால் பொழுது விடிவதற்குள்ளாக மாயாஜாலம் போன்று பூமியிலிருந்து தோன்றிவிடுகின்றன காளான்கள்.

நாம் இவற்றில் எத்தனை வண்ணங்கள், எத்தனை வடிவங்கள் என்று வேடிக்கை பார்க்கிறோம். அமெரிக்கா, ஜப்பான் நாட்டு மக்கள் இவற்றை உண்பதற்காகப் போட்டி போட்டு வாங்குகிறார்கள்.

போலந்து, பல்கேரியா, செக், ஸ்லோவாக்கியா போன்ற நாடுகள்தான் காளான் உற்பத்தியில் முன்னணியில் நிற்கின்றன. இங்கிருந்து ஜெர்மனி, ஃபிரான்ஸ்,



இத்தாலி ஆகிய நாடுகளுக்கு தினமும் பெருந்தொகையான காளான்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

காளான்களில் ஏறத்தாழ 1000ற்கும் மேற்பட்ட இனங்கள் உண்டு. இவற்றில் 30ற்கும் குறைவான காளான் இனங்களே உணவாக உண்ணப்படுகின்றன.

காளான்களில் 'அமானிடா' எனப்படும் ஒருவகைக் காளான்கள் அதிக நச்சுத்தன்மை கொண்டவை. இவை சயனைட் போன்ற விஷத்திற்கு ஈடான நச்சுத்தன்மையுடையவை.

# ஏன் தெரியுமா?



மழைகாலத்தில் இடிமுழக்கமும், மின்னலும் ஏற்படுவது உங்கள் எல்லாருக்கும் தெரியும். இடிமுழக்கம், மின்னல் இந்த இரண்டில் எது முதலில் ஏற்படும் என்று கேட்டால், எல்லாரும் மின்னல்தான் என்று சொல்வீர்கள். இது தவறு. இடிமுழக்கமும், மின்னலும் ஒரே நேரத்தில்தான் நிகழ்கின்றன.

மின்சக்தி கொண்ட மேகங்கள் உரசும்போது ஒரே நேரத்தில் இடிமுழக்கமும், மின்னலும் ஏற்படுகின்றன.

இரண்டு மின் கம்பிகள் உரசும்போது 'டப்' என்ற சத்தமும் 'பளிச்' என்று பொறியும் ஏற்படுகிறதல்லவா? அதைப்போல்தான் இதுவும். ஆனால் ஒலியை விட ஒளி வேகம் கூடுதலாக இருப்பதால் மின்னல் (ஒளி) முதலில் வந்துவிடுகிறது. இடிமுழக்கம் (ஒலி) சிறிது நேரத்தின் பின்னர் ஏற்படுகின்றது.

# சிறைக் காவியங்கள்

சிறையில் இருந்தபோது, தலைவர்கள் சிலர் எழுதிய புத்தகங்கள்:

1.மகாத்மா காந்தி - சத்திய சோதனை.
2.ஜவகர்லால் நேரு -
டிஸ்கவரி ஒஃப் இந்தியா.
3.திலகர் - கீதையின் சாரம்.
4.வ.உ.சிதம்பரம்பிள்ளை-
திலகரின் வாழ்க்கை வரலாறு.
ஜேம்ஸ் அலனின் 'எண்ணமே வாழ்வு'.
(தமிழ் மொழி பெயர்ப்பு.)
5.லால்பகதூர் சாஸ்திரி -
சுதந்திரப் போராட்ட வரலாறு.
6.சுபாஷ் சந்திர போஸ் -
சுதந்திரப் போராட்டம். (1920-1934)
7.மார்க்கோ போலோ -
பயண அனுபவங்கள்.
8.மார்ட்டின் லூதர் கிங் -
பைபிள் (ஜெர்மன் மொழியாக்கம்).
9.சேர் வோல்டர் ரேவிஃப் -
உலக வரலாறு.

# ஒருவரிச் செய்திகள்

- ★ கோலா கரடி நீர் அருந்துவதில்லை.
- ★ நண்டின் பற்கள் அதன் வயிற்றில் இருக்கும்.
- ★ சுவாசிக்காமல் வாழும் உயிரினம் 'ஈஸ்ட்.'
- ★ 'குக்புரா' என்ற பறவையின் ஒலி சிரிப்பது போல் இருக்கும்.
- ★ மிக உயரத்தில் பறக்கும் பறவை 'டெர்ன்.'
- ★ நாய்களுக்கு வியர்ப்பது இல்லை.
- ★ மிகப் பெரிய கூடு கட்டும் பறவை கழுகு.
- ★ யானை நடந்து வந்தால் சத்தமே வராது.
- ★ மிகச் சிறிய கூடுகட்டும் பறவை 'ஹம்மிங் பேட்.'
- ★ 'ஸ்லாத்' என்ற விலங்கு தலை கீழாகவும் நடக்கும்.

# தெற்காசிய நாடுகள்

| நாடுகள் | பரப்பளவு (ச.கி.மீ) | மக்கள் தொகை | நாணயம் |
|---|---|---|---|
| 1. இலங்கை | 65,610 | 1,71,35,000 | ரூபாய் |
| 2. நேபாளம் | 1,47,181 | 1,91,58,000 | ரூபாய் |
| 3. பங்களாதேஷ் | 1,43,999 | 11,79,76,000 | டாகா |
| 4. பாகிஸ்தான் | 7,96,095 | 11,31,63,000 | ரூபாய் |
| 5. பூட்டான் | 46,000 | 15,66,000 | நகுல்ட்ரம் |
| 6. மாலைதீவுகள் | 298 | 2,19,000 | ரூப்பியா |
| 7. இந்தியா | 32,87,263 | 84,39,30,861 | ரூபாய் |



படிப்பகம்

www.padippakam.com

# திக் திக் திக் புதிய தொடர் 01

# நந்தினி 440 வோல்ட்

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

ஒரு சின்ன குங்குமப் பொட்டாய், கிழக்குத் திசையைக் கீறிக் கொண்டு எட்டிப் பார்த்த சூரியனின் முதல் கதிர் வழுக்குப் பாறை எஸ்டேட் பூராவும் கனமாய்ப் பரவியிருந்த பனிப்புகையைப் பார்த்து மலைத்துப் போயிருந்தது. நேற்று சாயந்தரம் வரைக்கும் மலைச்சிகரங்களின் மேல் தூங்கிக் கொண்டிருந்த பஞ்சு மேகங்கள், கொத்துக் கொத்தாய் கீழே இறங்கிப் பள்ளத்தாக்கின் சரிவுகளில் மேய்ந்து கொண்டிருந்தன. எஸ்டேட்டின் மையத்திலிருந்த பிரமாண்டமான டீ பாக்டரியின் புகை போக்கியிலிருந்து தேயிலை வறுபடும் மணம் சுகமாய்க் காற்றில் பரவியிருந்தது. தொலை தூரத்தில் மலைகளின் இடுப்புக்களில் ஒட்டியிருந்த சின்னச் சின்ன தேயிலைத் தோட்டங்களை நோக்கி- தலையில் கவிழ்த்த கூடையோடு பெண்களின் வரிசையொன்று போய்க்கொண்டிருக்க.... பாரி தன்னுடைய அதிகாலை நேர வாக்கிங்கை முடித்துக்கொள்ள எண்ணித் திரும்பினான்.

வெள்ளைநிற பனியனிலும், வெள்ளை நிற ஷார்ட்ஸிலும் ஒரு HI-MAN மாதிரி தெரிந்த பாரிக்கு முப்பது வயது. எப்படிச் சீவினாலும் நெற்றியின் பரப்பில் பிடிவாதமாய் வந்து விழுகிற அந்த கிராப்பின் முடிக்கற்றை ஒரு விசேஷ அம்சம். அவனுடைய கூர்மையான சிறிய கண்களுக்கு எதிராளியைச் சீவுகிற பார்வை உண்டு. மேல் உதட்டுப் பரப்பு பூராவையும் அடைத்துக் கொண்டு பதிவாகியிருந்த அந்த 'கரு கரு' மீசை, அவனுடைய மனைவி நந்தினிக்கு நிரம்பவே பிடிக்கும். ராத்திரி நேரங்களில் அவனுடைய மார்பின் மேல் கவிழ்ந்து கொண்டு வலது கையின் மோதிர விரலால் அந்த மீசையை நெருடிக்கொண்டிருப்பதில் அவளுக்கு ஒரு கிறக்கம். அப்புறம்...

"ஹலோ..! குட்மார்னிங் பாரி....!"

தேயிலைத் தோட்டச் சரிவில் இறங்கிக் கொண்டிருந்த பாரி நிமிர்ந்தான். ப்ளூஸ்கை எஸ்டேட்டுக்குச் சொந்தக்காரனான வாசு, ரத்த நிற ஸ்வெட்டரிலும் க்ரே நிற பேண்டிலும் நின்றிருந்தான்.

"ஹலோ! குட்மார்னிங் வாசு, கோயமுத்தூரிலிருந்து எப்போ வந்தே...?"

"நேத்தைக்கு ராத்திரி...."

"புதுசா வாங்கின மில் எப்படி ஓடுது...?"

வாசு 'ப்ச்'சென்று சொன்ன போது- வாயிலிருந்து பனிப்புகை பறந்தது. "ஒண்ணும் சரியில்லை பாரி... மில்லை பக்காவா மாடர்னைஸ் பண்ணணும்... ஆமா.... இன்னிக்கென்ன.... இந்நேரத்துக்கே வாக்கிங்கை முடிச்சுக்கிட்டே....?"

"இன்னிக்கு மத்தியான ப்ளைட்ல பாம்பே போறேன்..."

"ஈஸிட்... பிசினஸ் டூரா...?"

"நோ...நோ... ஜாலிடூர்...! என்னோட ஒய்ப் நந்தினிக்கு ரொம்ப நாளாவே டூர் கிளம்பணும்னு ஆசை... இந்த ஆஃப் சீசன்ல பாம்பே நல்லாயிருக்கும். புனாவுக்குப் பக்கத்துல லோனாவாலான்னு ஒரு இடம். நம்ம ஊட்டி மாதிரியான க்ளைமேட். என்னோட பிஸினஸ் தோஸ்த் மாணிக்கலாலுக்குச் சொந்தமான பங்களா ஒண்ணு இருக்கு. பாம்பேயிலிருந்து திரும்பறப்போ லோனாவாலாவில் இறங்கி ஒரு வாரம் தங்கிட்டு வரலாம்னு திட்டம்..."

"ம்.....ம்.... ஜமாய்.... கல்யாணமான இந்த ரெண்டு வருஷத்துல இப்பதான் மொதல் தடவையா டூர் போறீங்க போலிருக்கு...."

"ஆமா!"

"கோயமுத்தூர் போய் ஃப்ளைட்ல போறீங்க...?"

"ஆமா!"

"விஷ்யூ ஏ ஹேப்பி ஜர்னி...."

"தேங்க்யூ...."

பாரியும் வாசுவும் புன்னகைகளோடு விலகி நடந்தார்கள். பாரி எதிரே தெரிந்த மலைச்சரிவில் வெளேரென்று தெரிந்த தன்னுடைய எஸ்டேட் பங்களாவை நோக்கி இறங்கினான். சில நிமிஷ நடைக்குப் பின் பங்களாவை நெருங்கி வாட்ச்மேனின் ரெண்டாவது சல்யூட்டை தலையசைப்பால் வாங்கிக்கொண்டு உள்ளே போனான்.

லேசாய் ஆச்சரியப்பட்டான்.

மிஸ் வயலெட்- அவனுடைய பர்சனல் செக்ரட்ரி- அந்நேரத்துக்கே வந்து வரவேற்பறையில் காத்திருந்தாள். வெளிர் மஞ்சள் நிற கவுனில் அப்போது பறித்த ஒரு சூர்யகாந்தி மாதிரி தெரிந்தாள். ஆங்கிலோ இந்தியப் பெண்களுக்கே உரித்தான ஆப்பிள் நிறம். அந்த உயரம், அந்த செழுமை, அந்த மார்புகள்- இவளிடமும் இருந்தன. தமிழைக் குதறிக் குதறிப் பேசாமல் முழுசாய்ப் பேசினாள்.

"குட்மார்னிங் சார்"

"குட்மார்னிங் மிஸ் வயலெட். என்ன இந்நேரத்துக்கே வந்துட்டீங்க....?" வயலெட் காலையில் தேய்த்த ஒழுங்கான பல்வரிசையைக் காட்டிச் சிரித்தாள்.

"இன்னிக்கு நீங்க நிறைய பைல்ஸ்ல கையெழுத்தைப் போட வேண்டியிருக்கு ஸார். நீங்க பாம்பே புறப்பட்டுப் போயிட்டிங்கன்னா எல்லாமே பெண்டிங் விழுந்துடும்... ஸோ, இன்னிக்கு நான் என்னோட ஒரு மணி நேர தூக்கத்தை தியாகம் பண்ணி குளிச்சு முடிச்சுப் புறப்பட்டு வந்துட்டேன். நீங்க எத்தனை மணிக்குக் கோயமுத்தூர் புறப்படறீங்க ஸார்...?"

"பை நைன்..."

"இனஃப்...., அதுக்குள்ளே நீங்க பைல்ஸ் முழுவதையுமே பார்த்துக் கையெழுத்துப் போட்டுடலாம்....."

"பைல்லை எடுத்து வையுங்க மிஸ் வயலெட். நான் குளிச்சுட்டு வந்துடறேன்..." சிரித்துக் கொண்டே உள்ளே போனான் பாரி.

தன்னுடைய அறைக்குள் நுழைந்தான்.

நந்தினி இன்னமும் உல்லன் போர்வைக்குள் சுருண்டிருந்தாள். அறையின் மூலையிருந்த ஹீட்டர் கம்பிகள் தக்காளி ஜாம் நிறத்தில் ஜொலித்து, அறைக்குள் இருந்த காற்றை உஷ்ணமாய் வைத்திருந்தது.

"மை ஸ்வீட் நந்து..."- கிசு கிசுப்பான குரலில் சொல்லிக் கொண்டே அந்த உல்லன் போர்வையின் மேல் இதமான கனத்தோடு படர்ந்தான்.

"உம்..."

முனகினாள் நந்தினி.

"என்னோட நந்துவுக்கு இன்னும் தூக்கம் கலையலையா...?"

"உம்..."

"என்ன உம்...?"

"என்னை நீங்க தூங்க விட்டப்போ மணி எவ்வளவு தெரியுங்களா.... ரெண்டு...."- போர்வைக்குள்ளிருந்து நந்தினியின் குரல் சிணுங்கலாய் வெளிப்பட்டது.

"நாம இன்னிக்கு பாம்பே போகப் போறோம். மறந்துட்டியா...? சீக்கிரமா எந்திரிச்சு எல்லாத்தையும் பேக் பண்ணு..."

"நேத்து ராத்திரியே பேக் பண்ணியாச்சு..."- பதில் இன்னமும் போர்வைக்குள்ளிருந்தே வந்தது. பாரி போர்வையை உருவினான்.

நந்தினி தூக்கம் பாக்கி வைத்திருந்த கண்களைச் சிரமப்பட்டு மலர்த்திக் கொண்டு சிரித்தாள். "குட்மார்னிங் என் அருமைக் கணவரே!"

"ம். எந்திரி..."- ஒரு புஷ்ப மூட்டையைத் தூக்குகிற மாதிரி அவளைத் தூக்கி உட்கார வைத்தான்-அப்படி உட்கார்ந்த நந்தினி வெள்ளைப் பூக்கள் ஓடிய நீல நிற நைட் கவுனில் இருந்தாள். பெண்களுக்கு இருக்க வேண்டிய உயரம், ஒரு அழகான பெண்ணுக்கு இருக்கவேண்டிய நிறம், மிக அழகான பெண்ணுக்கு இருக்க வேண்டிய கண்கள், மிக மிக அழகான பெண்களுக்கு இருக்க வேண்டிய அத்தனை 'அயிட்டங்களும்' அவளிடம் இருந்தன. அழகாக இருக்கும் நந்தினியைப் பற்றி இன்னொரு விஷயமும் சொல்ல வேண்டும். நந்தினிக்கு நிரம்பவும் பயந்த சுபாவம். அம்புலி மாமாவில் வரும் மாயாஜாலக் கதைகளைப் படித்துவிட்டு, அதில் வரும் சூன்யக்காரிக்காகப் பயப்பட்டு கணவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு தூங்குபவள். சினிமாவுக்குப் போனால் கதாநாயகனிடம் அடிவாங்கி இரத்தம் ஒழுக ஓடும் வில்லனின் அடியாளுக்காக 'அய்யோ பாவங்க' என்று பரிதாபப் படுபவள். கட்டிலுக்குக் கீழே ஒரு கரப்பான் பூச்சியைப் பார்த்துவிட்டால், அந்த ராத்திரி பூராவும்- நடு நடுவே விழித்துக் கட்டிலுக்குக் கீழே மிரண்டுபோன பார்வையோடு குனிந்து குனிந்து பார்ப்பவள்.

"என்னங்க...?" என்றபடி பாரியின் மடிமீது மறுபடியும் மல்லாந்து விழுந்தாள் நந்தினி.

"என்ன நந்து...?"

"நாம பம்பாய் போய்ட்டு எப்போ திரும்பி வர்றோம்...?"

"எப்படியும் பத்து நாளாயிடும்..."

"பம்பாய்ல எனக்கு என்ன வாங்கித் தரப்போறீங்க?"

"நீ எது கேட்டாலும்..."

"அப்பமுன்னு இப்ப சொல்லிட்டு... அங்கே போய் நெத்தியைத் தேய்ச்சுக்கிட்டு யோசனை பண்ணக் கூடாது..."

"மாட்டேன்..."

"எனக்கு என்ன வேணும்கிறதை இப்பவே சொல்லிடட்டுமா?"

"ம்.... சொல்லு."

"பம்பாய், ஜவேரி பஜார்ல லேட்டஸ்ட் டைமண்ட்ஸ் நிறைய வந்திருக்குமாம்... நிறைய டைமண்ட்ஸ் வெச்சி நெக்லஸ் ஒண்ணு எனக்கு வேணும்."

"நான் செத்தேன்..."

"பார்த்தீங்களா... இப்பவே... ஜகா வாங்கறீங்களே...!"

"டைமண்ட்ஸ் என்ன பட்டாணிக் கடலையா நந்து...? ஒரு கல்லுக்கே பத்தாயிரம் இருபதாயிரம்னு விலை சொல்லுவான். நெக்லஸை கேட்டா லட்ச ரூபாய் சொல்லுவான்...."

"சரி, நெக்லஸ் வேண்டாம்... வைரக் கம்மல்..."

"இப்ப கேட்டியே... இது புத்திசாலித் தனம்."

"நீங்க வாக்கிங்கை முடிச்சுட்டு வந்தாச்சா?"

"ஆச்சு...."

"ரெண்டு பேரும் ஒண்ணாவே குளிச்சுடலாமா...?"

"பரம சந்தோஷம்..."

"ஆசையைப் பாருங்க... நீங்க போய் மொதல்ல குளியலை முடிச்சுட்டு வாங்க.. நான் பேக் பண்ணி வெச்சிருக்கிறதையெல்லாம் மறுபடியும் ஒரு தடவை செக் பண்ணிக்கிறேன்."- நைட் கவுனின் முடிச்சை இறுக்கிக் கட்டிக் கொண்டே கட்டிலினின்றும் கீழே இறங்கினாள் நந்தினி.

எதிர்ப்புற ஜன்னலின் வழியே தோட்டம் தெரிந்தது.

நிறைய ரோஜாச் செடிகள். கிளைக்குக் கிளை ஏராளமான பூக்கள். போன்ஸாய் சின்ன ஸைஸிலும், பெரிய ஸைஸிலும் ரோஜா மொட்டுக்கள்.


ஜன்னல் அருகே போய் நின்றாள்.

தோட்டக்கார கிழவன் நஞ்சன். கையில் நீளமான கடப்பாறையோடு ரோஜாச் செடிகளுக்கு மத்தியில் எதையோ தேடிக் கொண்டிருந்தான்.

"நஞ்சா..."

கிழவன் கடப்பாறையோடு திரும்பிப் பார்த்தான். ஜன்னல் கம்பிகளுக்கு மத்தியில் தெரிந்த நந்தினியின் முகத்தைப் பார்த்துவிட்டு ஒரு அவசரக் கும்பிடு போட்டான்.

(தொடர்ந்து வரும்)



ராஜேஸ்குமாரின் கதை என்றால் விறு விறுப்புக்கு பஞ்சம் இருக்காதல்லவா? அதனை மீண்டும் நிரூபிக்கும் விதமாக வாரா வாரம் அசுர வேகத்தில் நகரும் கதையிது!

---

# ஒரு கெரில்லா வீரனின் கடிதம்

கியூபாவில் கெரில்லாப் போர் நடந்து கொண்டிருந்தபோது சேகுவேரா தன் துணைவிக்கு எழுதிய கடிதம்.

அன்பான பெண்ணே!

கியூபன் புதரிலிருந்து உனக்கு நான் இந்த ஜீவனுள்ள வரிகளை எழுதுகிறேன். நான் உயிரோடு இருக்கிறேன்.

இரத்தம் குடிக்கத் துடிக்கிறேன். உண்மையிலே நான் ஒருபோர் வீரன் என்று என்னை நீ கூறுவாய். (நான் கிழிந்த அழுக்கான ஆடை அணிந்திருந்த போதும்.) ஏனெனில் சாப்பாட்டுப் பாத்திரத்தை, மேஜையாகப் பயன்படுத்தி இந்தக் கடிதத்தை நான் எழுதுகிறேன்; எனது தோளில் துப்பாக்கி தொங்கிக் கொண்டிருக்கிறது. இங்கே வந்து நான் சம்பாதித்த உடமையான சுருட்டு என் பற்களுக்கிடையே கடிபட்டுக் கொண்டிருக்கிறது.

இங்கே வாழ்க்கை ஒன்றும் சுலபமாய் இல்லை. மூச்சு விடக்கூட முடியாத அளவுக்கு நாங்கள் நெருக்கியடித்துக் கொண்டு கிரான்மாவில் பயணம் செய்து, எங்களது கப்பலோட்டியின் தவறால் நாங்கள் துர்நாற்றம் பிடித்த புதர்களில் சிக்கி மேலும், ஏற்கனவேயே நீ அறிவித்தபடி அலெக்ரியா டி பியோ என்ற இடத்தில் தாக்குதலுக்கு ஆளாகி, நாங்கள் புறாக்களைப்போல சிதறுண்டு போகும்வரை எங்களைத் துரதிஷ்டம் பின்தொடர்ந்தது என்பது உனக்கு ஏற்கனவே தெரியும்.

எனக்குக் கழுத்தில் காயம் பட்டது. நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன். அதற்காக எனது பூனையின் உயிர்களுக்கு நன்றி கூற வேண்டும்.

ஏனெனில் எந்திரத் துப்பாக்கியிலிருந்து சீறி வந்த குண்டு நான் வெடிகுண்டுகள் வைத்திருந்த பெட்டியில் மோத, அப்பெட்டி எனது நெஞ்சில் விழுந்து அங்கிருந்து வழுக்கி வந்து எனது கழுத்தில் மோதியது. நான் கடுமையாகக் காயப்பட்டதால் மலைகளில் அலைந்தேன். ஏனெனில் கழுத்தில் காயம் பட்டதோடு, எனது நெஞ்சிலும் கடுமையான வலி ஏற்பட்டிருந்தது.

நீ அறிந்தவர்களில் ஜிம்மி ஹெர்ட்ஸெல் மட்டும் இறந்து போனார். அவர் எதிரிகளிடம் சரணடைந்தார். அவர்கள் அவரைக் கொன்று விட்டார்கள்.

நான் அல் மெய்டாவோடும், ரமிரிடோவுடனும்- உனக்கு இவர்களைத் தெரியும்- ஏழு நாட்கள் கழித்தேன். அந்த நாட்களில் எதிரிகள் எங்களைச்சுற்றி வளைத்திருந்தார்கள். எனவே நாங்கள் பசியாலும் தாகத்தாலும் வாடினோம். பிறகு அங்கிருந்து தப்பி விவசாயிகளின் உதவியோடு பிடலிடம் வந்து சேர்ந்தோம். (அவர்கள் நிகோ இறந்து போனதாகச் சொல்கிறார்கள். பாவம், ஆனால் அவரது இறப்பைப் பற்றி உறுதியான தகவல் இதுவரை கிடைக்கவில்லை)

நாங்கள் மீண்டும் ஒரு குழுவாக ஒருங்கிணைவதற்கும், அதிகமான ஆயுதங்களைப் பெறுவதற்கும் மிகவும் சிரமப்பட வேண்டி இருந்தது.

பிறகு நாங்கள் ஒரு இராணுவ நிலையத்தைத் தாக்கிச் சிலரைக் கொன்றோம்; சிலரைக் காயப்படுத்தினோம்; மற்றவர்களைச் சிறைப்பிடித்து வந்தோம். இறந்தவர்களை நாங்கள் போர்க்களத்திலேயே விட்டுவிட்டோம். சிறிது நேரம் கழித்து நாங்கள் மேலும் மூன்று வீரர்களைப் பிடித்து அவர்களிடமிருந்து ஆயுதங்களைப் பறித்துக் கொண்டோம்.

எங்களுக்கு எந்தவொரு இழப்பும் இல்லை என்பதும் நாங்கள் மலைகளில் சொந்த வீட்டில் வாழுவதுபோல் வாழ்கிறோம் என்பதும் உனக்கு பாடிஸ்டாவின் படை வீரர்களது திறனின்மையைத் தெளிவாகப் புலப்படுத்தி இருக்கும். எங்களைச் சுற்றி வளைப்பதில் அவர்கள் ஒருபோதும் வெற்றி பெறவே முடியாது.

ஆனால் போர் இன்னும் முடிந்து விடவில்லை. நாங்கள் இன்னும் நிறையப் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் தராசுமுள் ஏற்கனவே எங்கள் பக்கம் சாய்ந்து விட்டது.

ஒவ்வொரு நாளும் மேலும் மேலும் எங்கள் பக்கத்தில் எடை கூடிக் கொண்டே வந்து அனுகூலமான நிலை ஏற்பட்டிருக்கிறது.

இப்போது உன்னைப்பற்றிச் சில விஷயங்கள். நான் கடிதம் எழுதுகின்ற அதே விலாசத்தில்தான் நீ இன்னும் இருக்கின்றாயா? என்ற விபரத்தை எனக்குத் தெரியப்படுத்தவும்.

அங்கே நிலவரம் எப்படி இருக்கிறது? குறிப்பாக, நமது 'அன்புசால் பச்சிழம் பூவிதழாள்' எப்படி இருக்கிறாள்? அவளது மெல்லிய எலும்புகள் அனுமதிக்கிறவரை, எவ்வளவு முடியுமோ அவ்வளவு இறுக்கமாக அவளை அணை; அவளை முத்தமிடு.

நான் கிளம்புகிற அவசரத்தில் உனது போட்டோக்களை பஞ்சோவின் வீட்டிலேயே விட்டு வந்து விட்டேன். அவற்றை அனுப்பிவை.

நீ எனக்கு எழுதுகின்ற கடிதங்களை மாமாவின் முகவரிக்கோ படோஜோவின் முகவரிக்கோ அனுப்பிவை. சற்றுத் தாமதமாகலாம். ஆனால் கடிதங்கள் எனக்குக் கிடைத்து விடும் என்று நம்புகிறேன்.

அன்புடன்
'சே'



பிடலுடன் சே



படிப்பகம்

www.padippakam.com



# மேக்கப் புன்னகை

> "ஆண் நட்சத்திரங்களுடன் நடிகைகள் 'நல்ல' தொடர்பு வைத்திருந்தால் மட்டுமே தங்களின் படங்களில் நடிக்க சிபாரிசு செய்வார்கள். ஆனால் எனக்கு அப்படிப்பட்ட தொடர்பெல்லாம் கிடையாதென்பதால் யாரும் சிபாரிசு செய்வதில்லை."
>
> —இந்தி நடிகை தீப்தி பட்நாகர்... 'வண்ணத்திரை' 3–19 ஜூன் '97 இதழில்—

## 20

## பட்டுக்கோட்டை பிரபாகர்

வரிய டாக்டர் வந்து மதுமிதாவின் பெட்டில் மாட்டியிருந்த பேட் எடுத்து ட்டி டாக்டரின் ரிப்போர்ட்களைப் பார்த்தார்.

"வலி குறைஞ்சிருக்கா மேடம்?" என்றார்.

"குறைஞ்சிருக்கு டாக்டர்." என்றாள் மதுமிதா.

ஒரு சின்ன உபகரணம் கொண்டு பேண்டேஜ் போட்ட காலின் மேல் செல்லமாகத் தட்டிக் கொண்டே, "எந்த இடத்திலேயாவது லேசா வலி தெரிஞ்சா சொல்லுங்க," என்றார்.

"எந்த இடத்திலும் வலி இல்லை டாக்டர்."

"வெரிகுட். ட்ரீட்மெண்ட்ல எந்த மாற்றமும் இல்லை. நாளைக்கு நர்ஸ் துணையோட நீங்க ரூமுக்குள்ளேயே ரெண்டு தடவை நடந்து பாருங்க. வலிச்சா நடக்க வேண்டாம்."

"சரி டாக்டர்."

டாக்டர் போன கொஞ்ச நேரத்தில் துர்க்கா ஒரு கூடையோடு வந்தாள்.

"உன் கூடவே இருக்க ஆசைப்பட்டேன். உனக்குத்தான் பிடிக்கலை. ஆனா பார்க்காமலேயே வீட்ல உட்கார்ந்திருக்கிறதுக்கு பெத்த மனசு கேக்குமா மது? எப்படி இருக்கு இப்ப வலி?"

ஸ்டூலை அவளருகில் இழுத்துப் போட்டமர்ந்து கூந்தலைத் தடவியபடி கேட்டாள் துர்க்கா. இந்த மாதிரி வெகுசில சந்தர்ப்பங்களில் மதுமிதா குழம்பித் தடுமாறிப் போவாள். இந்தப் 'பாசத்துடிப்பு உண்மையானதா?'

"என்ன மது அப்படிப் பார்க்கறே?"

"ஏம்மா, என்னைப் பெத்தப்ப ஆம்பளைப் பிள்ளையா பொறக்கலையேன்னு வருத்தப்பட்டியா?"

"இல்லையே. வீட்டுக்கு முதல் குழந்தை பெண் குழந்தை பொறக்கிறது தான் நல்லது மது. உங்கப்பா பையன் தான் பொறப்பான்னு சொன்னாரு. இல்லை பொண்ணுதான்னு நான் பந்தயமே கட்டினேன்."

மதுமிதா அமைதியாகப் பார்வையைத் திருப்பினாள்.

"எதுக்கு கேட்டே?"

"சும்மாதான்"

"உனக்குப் பிடிக்குமேன்னு ஆப்பமும், தேங்காய்ப்பாலும் கொண்டு வந்திருக்கேன் மதுமிதா. சாப்பிடறியா?"

"வேணாம்மா. டிஃபன் இங்கே கொடுத்திட்டாங்க. சாப்டுட்டேன்."

"ஒண்ணே ஒண்ணு சாப்பிடேன்!"

"சரி சாப்பிடறேன். இப்ப வேணாம். கொஞ்ச நேரம் போகட்டும்." என்று சொன்ன மதுமிதாவின் மனதில் சட்டென்று ஒரு கேள்வி மின்னலாய் வெட்டியது.

'என்ன இவ்வளவு அக்கறை திடீரென்று? ஒரு வேளை தேங்காய்ப் பாலில் வேறு ஏதாவது கலந்து...'

'ச்சே! ஒரு தாய் கொலை செய்வாளா என்ன? இப்படிக் கூட விபரீதமாகச் சிந்திக்கிற அளவுக்கு அவள் நடந்திருக்கிறாளே!'

அறைக்கதவு தட்டப்பட்டு, தொடர்ந்து "எக்ஸ்கியூஸ் மீ" என்று குரலும் ஒலித்தது.

"யெஸ் யாரு?"

கோடீஸ்வர கெட்டப்பில் இருந்த சாரி, இரண்டு கைகளையும் கூப்பியபடி உள்ளே செண்ட் மணத்துடன் வந்தார். "வணக்கம்மா. நான் கைலாஷ்! உங்ககூட போன்ல பேசினேனே..."

"வாங்க சார்! அம்மா அந்த சேரை இப்படி எடுத்துப் போடு!"

துர்க்கா அவரின் தோற்றத்தில் மிரண்டு போய், அவசரமாக நாற்காலியை நகர்த்திப் போட்டாள். சாரி கொண்டு வந்த பூங்கொத்தை புன்னகையுடன் நீட்டினார். அதில் விரைவில் உடல் நலம் தேற வாழ்த்துச் செய்தி ஆங்கிலத்தில் இணைக்கப்பட்டிருந்தது. பூங்கொத்தை வாங்கி வைத்து,

"தேங்ஸ்... உக்காருங்க சார்" என்றாள் மதுமிதா.

சாரி அமர்ந்ததும் கால் மேல் கால் போட்டுக் கொண்டார்.

"உடம்பு எப்படி இருக்கும்மா மதுமிதா?"

"படிப்படியா குணமாகிட்டு வர்றேன் சார். பை தி பை... நீங்க ஏதோ கல்யாணம், தற்கொலை, அவசரம்னு ஏதேதோ சொன்னதாலதான் என்னைச் சந்திக்க அனுமதி கொடுத்தேன். டாக்டர் என்னை முழு ஓய்வில் இருக்கச் சொல்லியிருக்கார். நீங்க வந்த விஷயத்தை சீக்கிரமா– சுருக்கமா சொல்லுங்க சார்."

"சொல்றேன். இவங்க யாரு?" என்றார் துர்க்காவைக் காட்டி.

"என் அம்மாதான்."

"இவரு யாரும்மா?" என்றாள் துர்க்கா.

"எனக்கு அறிமுகமில்லை. சந்திக்கணும்னு இன்னைக்குத்தான் ஃபோன் செஞ்சார். வரச் சொன்னேன். அவரைப் பத்தி அவர்தான் சொல்லணும்."

"எனக்கு ஊர் காஷ்மீர். பேர் கைலாஷ். நிறைய ஆப்பிள் தோட்டம் இருக்கு. எத்தனை ஏக்கர்னு என்னாலேயே கணக்கு சரியாச் சொல்ல முடியாது. போன வருஷம் வருமான வரி டிபார்ட்மெண்டுக்குக் காட்டின கணக்குப் படி என் சொத்துக்களோட மதிப்பு எழுநூத்தி நாப்பது கோடி ரூபா. என்னிட்டே இரண்டாயிரம் பேர் வேலை பார்க்கிறாங்க. அரசியல்வாதியா இருந்தாலும் சரி, அதிகாரியா இருந்தாலும் சரி, இது வரைக்கும் எந்தக் காரியத்துக்காகவும் நான் நேராப் போய் யாரையும் சந்திச்சதில்லை. அவங்கதான் என் இடத்துக்கு வருவாங்க. உன்னைப் பார்க்கத்தான் நானே நேரா வந்திருக்கேன்!" என்று நிறுத்தினார் சாரி. துர்க்காவின் முகம் தகதகவென்று பிரகாசமடைந்தது.

"அதுக்குக் காரணம்..." தொடர்ந்தார். "என் மகன் ராகேஷ்"

"அவர் என்ன செஞ்சார்?"

"தற்கொலைக்கு முயற்சி செஞ்சான்."

"எப்போ?"

"ஒரு வாரம் முன்னாடி. நல்ல வேளையா காப்பாத்தியாச்சு!"

"எதுக்காக தற்கொலை முயற்சில உங்க பையன் இறங்கினாரு?" என்றாள் துர்க்கா.

"உங்க பொண்ணுதாம்மா காரணம்!"

"என்ன சொல்றீங்க?"

"என் பையன் மெட்ராஸ் எம்.ஐ.டி.ல ஆட்டோமொபைல் எஞ்ஜினியரிங் போன வருஷம்தான் படிச்சி முடிச்சான். அவன் இங்க இருந்தப்போ மதுமிதா நடிச்ச ஒவ்வொரு படத்தையும் எழுபது தடவை எண்பது தடவை பாத்திருக்கான். மதுமிதாவை அவனுக்கு அவ்வளவு பிடிச்சுப் போச்சு. மதுமிதாவோட ஃபோட்டோ எந்த பத்திரிகைல வந்தாலும் வாங்கிடுவான். கத்தரிச்சு ஒட்டி பத்து ஆல்பம் வெச்சிருக்கான். படிச்சி முடிச்சுட்டு காஷ்மீர் வந்த அவனை பிஸினெஸ் பாருடான்னு கேக்கலை. எப்பப் பார்த்தாலும் எல்.டி.பிளேயர்ல போட்டு மதுமிதா படமே பார்த்துக் கிட்டிருந்தான். ஒரு ரசிகனா மதுமிதாவை ரசிக்கிறான்னு நினைச்சா... வரவர... அவனோட செயல்கள்ல தீவிரம் வந்திடுச்சி. ரூம் சுவர் முழுக்க மதுமிதா, மதுமிதான்னு கிறுக்கிறதும், மதுமிதாவோட பெரிய சைஸ் புளோ-அப், கட்-அவுட் செஞ்சு கட்டில்ல அதை அணைச்சுக்கிட்டுத் தூங்கறதுமா ஆரம்பிச்சுட்டான்!"

"அப்புறம்..."

"ஒரு நாள் திடீர்னு என் முன்னாடி வந்து நின்னான். டாடி, எனக்கு மதுமிதாவைக் கல்யாணம் பண்ணி வையுங்கன்னான். சினிமா நட்சத்திரங்களை ரசிக்கிறதோட நிறுத்திக்கணும்னு பலவிதமா அட்வைஸ் சொன்னேன். அவன் தன் பிடிவாதத்தைத் தளர்த்திக்கலை. கடைசில எனக்கு மதுமிதாவைக் கல்யாணம் பண்ணி வைக்கல்லைன்னா தற்கொலை செய்துக்குவேன்னு சொன்னான். விளையாட்டுக்குத்தான் சொல்றான்னு நினைச்சா, நிஜமாவே விஷம் குடிச்சிட்டான். இப்ப அவனை காப்பாத்தி வீட்ல பாதுகாப்புல வெச்சிருக்கேன். இப்பவும் அவன் தன் முடிவை மாத்திக்கிறதா இல்லை. எனக்கு இருக்கிறது ஒரே பிள்ளை. அவனை இழக்க எப்படிங்க மனசு வரும்? அதான் இது விஷயமா பேசிப் பார்க்கலான்னு நேர்ல புறப்பட்டு வந்துட்டேன்!"

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த மதுமிதா, "இதுல நான் எந்த வித்த்தில உதவி செய்ய முடியும் சார்?" என்றாள்.

"இதோ பாரும்மா. எழுநூத்தி நாப்பது கோடி ரூபா சொத்து எனக்கப்புறம் அவனுக்குத்தான். அவன் பக்கா ப்ரில்லியண்ட்! என் தொழிலைத் தொடர்ந்தாலே போதும். புதுசா எதுவும் ஆரம்பிக்க வேண்டியதில்லை. ஆனா மினி கார் தயாரிக்கிற தொழிற்சாலை ஒண்ணு ஆரம்பிக்கலாம்னு பிளான்ல இருக்கான். சீரியஸாவே கேக்கறேன். அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறயாம்மா?"

மதுமிதா வாய் விட்டுச் சிரித்தாள். "என்ன சார் பேசறீங்க? என்னைக் கல்யாணம் செய்துக்க ஆசைப்படுற ஒவ்வொருத்தரையும் நான் கட்டிக்கிறதுன்னு ஆரம்பிச்சா, என் வாழ்க்கைல எத்தனை பேரை நான் கல்யாணம் செய்துக்க முடியும்? அவரை ஒரு நல்ல மனநல மருத்துவர்கிட்ட கூட்டிக்கிட்டுப் போய் முறையா வைத்தியம் பாருங்க சார். அதை விட்டுட்டு..."

"இப்படி அலட்சியப்படுத்திப் பேசாதம்மா, நான் கேட்டதில என்ன தப்பு? அவன் ஃபோட்டோ காமிக்கிறேன் பாரு. அசந்து போயிடுவே. பர்சனாலிட்டி இருக்கு. புத்தி இருக்கு. படிப்பு இருக்கு. பணம் இருக்கு. இதைத் தாண்டி வேற என்ன வேணும் உனக்குப் புருஷனா வர்றதுக்கு?"

துர்க்கா அவசரமாக, "எங்கே உங்க பையனோட ஃபோட்டோவைக் காமிங்க பார்க்கலாம்," என்றாள்.

"அம்மா, நீ பேசாம இரு!" அதட்டினாள் மதுமிதா.

சில நிமிடங்கள் அமைதியில் கழிந்தன.

"ஃபோட்டோ பார்க்கிறியாம்மா?" என்றார் சாரி.

"வேணாம் சார். யோசிச்சுப் பார்த்தேன் சார். நீங்க வந்து இப்படிக் கேட்டத்தில தப்பில்லை சார். உங்க பையனோட ஆசையை நிறைவேத்தி வைக்கணும்னு பார்க்கறீங்க. ஆனா... உங்க பையனை நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது சார்."

"ஏம்மா?"

"நான் வேற ஒருத்தரை மனசார விரும்பிக்கிட்டிருக்கேன். அவரைத்தான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்"

"என் சொத்து மதிப்பைக் கொஞ்சம் நினைச்சுப் பாரும்மா!"

"இந்தியாவையே எனக்கு எழுதி வைச்சாலும் என் முடிவுல மாற்றம் இல்லை சார்!" என்றாள் மதுமிதா.

(தொடரும்)



## நில்–கவனி–முன்னேறு

### கவியரசு கண்ணதாசன்

உடல் இறைவன் கொடுத்த ஓர் இயந்திரம். பிறப்பில் இருந்து பருவத்துக்குப் பருவம் வளர்ந்து வரும் அந்த இயந்திரம் நாற்பது வயதுக்குப் பிறகு தேயத் தொடங்குகிறது.

"விசையுறு பந்தினைப் போல் மனம் வேண்டியபடி செல்லும் உடல் வேண்டும்" என்றார் பாரதி.

உடம்பு தன் சக்தியை இழந்து விடும்போது உலகமே மயங்கித் தெரிகிறது.

யந்திரம் அசல் இயந்திரமாக ஆகி விடுகிறது.

அதிலே மனித உணர்ச்சிகள் செத்துப் போகின்றன.

ஆகவே, ஆரோக்கியமான இளைஞர்களைச் சமுதாயம் பெற, எனது அனுபவங்களை யோசனைகளாகச் சொல்ல விரும்புகிறேன்.

முதலில் ஒரு நாளைக்கு நான்கு மைல் தூரமாவது நடந்து கொண்டிருக்க வேண்டும். அல்லது காலையிலும், மாலையிலும் விளையாட வேண்டும்.

முப்பது வயதுக்கு மேல் நிச்சயமாக நடந்தே தீரவேண்டும்.

முட்டை, பட்டாணி, மூளை, முருங்கைக் கீரை, உருளைக்கிழங்கு, தட்டைப் பயறு, மொச்சை, பலாப்பழம், பலாக் கொட்டை, இறால், நண்டு, ஆடுமாடுகளின் மாமிசம், பன்றி, இறைச்சி இவற்றைத் தொடவே கூடாது.

பூமிக்கு அடியில் விளையும் கிழங்குகளில் கருணை, முள்ளங்கி, காரெட், பீட்ரூட் தவிர எதையும் தொடக்கூடாது. புகைப்பிடிப்பது அறவே கூடாது. மதுப்பழக்கங்களின் கெடுதல் பற்றிக் கால காலங்களாகப் பெரியோர் சொல்லி வந்திருக்கிறார்கள். பெதடின் ஊசி, மயக்க மருந்துகளைக் கனவிலும் கருதக் கூடாது.

இந்தப் பக்குவத்தோடு உடம்பை வைத்திருந்தால் தானும் ஆரோக்கியமாக இருந்து, ஆரோக்கியமான குழந்தைகளையும் பெற முடியும். மருந்து, மாத்திரைகளுக்கு வேலை இருக்காது.

உணவைக் குறைத்துச் சாப்பிடுவது போன்ற ஆரோக்கியம் வேறு எதுவும் கிடையாது. நமது மூதாதையர்கள் இவ்வளவு மருந்து, மாத்திரைகளையா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்?

நோயை ஏழு வகையாகப் பிரித்தார்கள். வாயு, பித்தம், கபம், சீதம், உஷ்ணம், சிலேட்டுமம், வாதம் என்பவையே அவை.

சாப்பிடும் உணவிலேயே இவற்றுக்குப் பரிகாரம் வைத்தார்கள். தூதுவளை, பிரண்டை, வெள்ளைப்பூண்டு, வெங்காயம், தேன், இஞ்சி போன்றவற்றை உணவிலேயே சேர்த்தார்கள்.

'நாளுக்கு இருமுறை; வாரம் இருமுறை; மாதம் இருமுறை; வருஷம் இரு முறை' என்று பழமொழி சொல்வார்கள்.

நாளுக்கு இருமுறை காலையிலும், மாலையிலும் மலஜலம் கழிக்க வேண்டும். வாரம் இருமுறை- புதன் சனி எண்ணெய் நீராட வேண்டும்; மாதம் இருமுறைதான் மனைவியரோடு உறவு கொள்ள வேண்டும்; வருஷம் இருமுறை பேதிக்குச் சாப்பிட வேண்டும்.

இந்த இலக்கணத்தோடு குதிரை ஏற்றமும், கால் நடையும் இருந்ததால் அவர்கள் நீண்ட நாட்கள் ஆரோக்கியத்தோடு வாழ்ந்தார்கள்.

நாமோ தின்னக் கூடாததைத் தின்கிறோம்; செய்யக் கூடாததைச் செய்கிறோம்; மருத்துவரையும் மருந்தையும் தேடி அலைகிறோம்.



தீயபழக்க வழக்கங்கள், உணவுகள் உடம்பை எவ்வளவு கெடுத்துவிடுகின்றன என்பதற்கு, என் அனுபவமே போதும். இப்போது நான் நல்ல திடகாத்திரமான ஆரோக்கியத்துக்கு ஏங்குகிறேன். சுறுசுறுப்பும், ஞாபக சக்தியும் குறைவதைக் காண்கிறேன்.

முறைப்படி வாழாததால் வந்த கொடுமையை உணர்கிறேன்.

என் கையில் இருந்த உடம்பை மருத்துவர் கையில் ஒப்படைத்திருக்கிறேன்.

வீண் தொல்லை; வீண் செலவு; விரயம்.

எந்த விவசாயிக்கோ தொழிலாளிக்கோ சர்க்கரை நீர் அல்லது இரத்தக் கொதிப்பு வந்ததாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

அறுபது வயதுத் தொழிலாளி, இருபது மூட்டை அரிசியை ஏற்றிக் கை வண்டி இழுக்கிறான்.

நாற்பது வயது நோயாளி, சாப்பிட்ட பிளேட்டைத் தூக்கி வைக்க முடியாமல் தடுமாறுகிறான்.

வியர்வை வெறியேற வெளியேறத்தான் வியாதியும் வெளியேறுகிறது.

இனி எதிர்காலத்தில் நாம் சாகிறவரை உழைக்க வேண்டியிருக்கும். பெரும் பொருளைச் சேமித்து வைத்துக் கொண்டு சுகவாசம் நடத்த முடியாது.

அதற்கு முக்கியத் தேவை, ஆரோக்கியம்.

காந்தியடிகள் இதுபற்றி எவ்வளவோ எழுதியிருக்கிறார். அதைப் படித்தும் நான் அதன்படி நடக்கவில்லை. விளைவு எனக்குத்தான் தெரியும்.

சந்நியாசி ஆரோக்கியம் சம்சாரிக்கு இல்லாமற் போனதற்குக் காரணம் என்ன?

சந்நியாசி அளந்து வாழ்கிறான்; சம்சாரி அளவுக்கு மீறி வாழ்கிறான்.

வந்த பின் வருந்திப் பயனில்லை; வருமுன்பாகவே பாதுகாப்பாக இருங்கள்.

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று சொன்னானே, அவனை நான் இப்பொழுதுதான் நினைக்கிறேன்!

நீங்கள் இப்பொழுதிருந்தே நினையுங்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# நீர்க்குமிழிகள்

பாரிதாஸ்

இரவு வந்தது. நாணம் கலந்த ஆவலோடு அறைக்குள் நுழைந்த ஆனந்திக்கு அதிர்ச்சிதான் காத்திருந்தது. குமார் நிச்சலனமாய்த் தூங்கிக் கொண்டிருந்தான். நடிக்கிறான் போலும் என்று சற்று நேரம் பொறுத்திருந்த ஆனந்தி, 'திருமணக் களைப்பில் தூங்கியிருப்பான் பாவம்! இந்தக் கிழடுகள் சீக்கிரமாய் அனுப்பினால்தானே? அவரவர் வாழ்க்கையை அசைபோட்டுக் கொண்டே காலத்தைக் கடத்திவிட்டார்கள்,' என்று தன்னைச் சமாதானப்படுத்திக் கொண்டு தூங்கிப் போனாள்.

அடுத்தடுத்து வந்த நாட்களிலும், ஆனந்தி சமையலறையைச் சுத்தம் செய்து, வேலைகளை முடித்துக்கொண்டு கையில் பாலுடன் அறைக்கு வந்தால், குமாரின் குறட்டைச் சத்தம்தான் வரவேற்கும். இரவில்தான் தூங்கி விடுகிறான். பகலிலாவது ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்தால், அதிலும் ஆனந்திக்குக் கிடைத்தது ஏமாற்றம்தான்.

தினமும் காலை எட்டு மணிக்கு மேல்தான் அவனுக்குப் பூபாளம் கேட்கும். அதன் பிறகு காலில் சுடுதண்ணீரை ஊற்றிக் கொண்டவனைப்போல அவசரம் அவசரமாய்க் கிளம்பி, அம்மாவிடம் கேட்டு காபி, டிபன் வாங்கி சாப்பிட்டுவிட்டு, அம்மாவிடம் மட்டுமே சொல்லிக்கொண்டு புறப்படுவான். ஆனந்தி இருக்கும் பக்கம்கூடத் திரும்பாமல் சர்வ ஜாக்கிரதையாய் ஸ்கூட்டரைத் திருப்பிக்கொண்டு போவான்.

எத்தனை நாள்தான் இந்தப் பாராமுகத்தைப் பொறுத்துக்கொள்ள முடியும்? ஆயிற்று இன்றோடு இரண்டு மாதம் முடிந்து மூன்றாவது மாதம் ஆரம்பம். பெரியவர்களாய்ப் பார்த்து ஏதாவது கேட்பார்கள் என்று நினைத்தால் அவர்கள் வாயைத் திறக்கக் காணோம். இனி, தானாகப் பேசினால்தான் உண்டு. 'யாரைப் போய்க் கேட்பது? யாரைக் கேட்டால் தெரியும்?' யோசனையைக் கிழித்துக்கொண்டு கோலிங்பெல் கதறியது. 'யாராயிருக்கும்? எதிர் வீட்டு மாமியாயிருக்குமோ?' என்று நினைத்துக் கொண்டே கதவைத் திறந்த ஆனந்தி ஏகமாய் அதிர்ந்தாள். அங்கு நின்றிருந்தது குமார்.

"வாங்க!" என்றுவிட்டு உள்ளே வந்தாள் ஆனந்தி. தலைகுனிந்தவாறே உள்ளே வந்த குமார் நேராகப் படுக்கையறைக்கு போனான். ஆனந்திக்கு ஒன்றும் புரியவில்லை. படுக்கையறையிலிருந்து குரல் கேட்டது.

"அம்மா...அம்மா.....!"

ஆனந்தி மெல்ல எட்டிப் பார்த்தாள். கழுத்து வரை போர்வையை மூடிக்கொண்டு படுத்திருந்தான் குமார்.

"அம்மாவோட உறவுக்காரப் பெரியவர் யாரோ எக்ஸ்பயர்ட்னு தந்தி வந்தது. உடனே அப்பாவும் அம்மாவும் கிளம்பிப் போயிட்டாங்க." தயங்கித் தயங்கிச் சொன்னாள் ஆனந்தி.

குமார் பதிலேதும் சொல்லாமல் படுத்திருந்தான். அவன் முகத்துக் குழப்ப ரேகைகள் ஆனந்திக்குத் தெளிவாகத் தெரிந்தது. சூடாக காபி கலந்து எடுத்து வந்தாள் ஆனந்தி. குமாரின் மனம் மெல்ல உருகியது. காபி தேவை என்பதை முகத்தில் படித்தவள், மனம் உருகுவதைக் கண்களில் கண்டு கொள்வாளோ? என்ற பயத்தில் குனிந்த தலை நிமிராமல் காபியை வாங்கிக் குடித்து விட்டுப் படுத்துக் கொண்டான்.

சற்று நேரம் மௌனமாயிருந்த ஆனந்தி, "ஏங்க... தலை வலிக்குதாங்க?" என்றாள்.

குமாரிடம் பதில் இல்லை. தைலம் எடுத்து வந்து மிருதுவாக அவன் நெற்றியில் தேய்க்க ஆரம்பித்தாள். சட்டென்று கையைத் தட்டிவிட்டு, "எதுவும் தேவையில்லை!" என்று வெடித்தான் குமார்.

ஆனந்திக்குக் கண்களில் நீர் முட்டிற்று. உதட்டைக் கடித்துக் கண்ணீருக்கு அணை போட்டுவிட்டு,

"உங்களுக்கு நான் என்னங்க கொடுமை செய்தேன்? ஏங்க என்னைப் பார்த்தாலே உங்களுக்குப் பிடிக்கல?" என்ற ஆனந்தி அதற்கு மேல் பேசமுடியாமல் கண்ணீரை மறைக்கக் கஷ்டப்பட்டாள்.

குமாருக்குள் புயலடித்தது. 'என்ன கொடுமை செய்தேன்? என்று கேட்கிறாளே. கொடுமை செய்தவன் நானல்லவா? எத்தனை முறை அலட்சியப்படுத்தினாலும், மேலே எறியப்பட்ட கல்லைப் போல என்னிடமே திரும்பிவந்து நியாயம் கேட்கிறாளே?'

இதற்குக் காரணம் நான் கட்டிய தாலி மட்டுமா? தாலிக்காக மட்டுமே ஒரு பெண் இத்தனை வேதனைகளையும் தாங்கிக்கொண்டு வாய் திறக்காமல் வாழமாட்டாள். அதையும்மீறி ஏதோ ஒன்று இவளை என்பால் செலுத்துகிறது. இவளிடம் உண்மையைச் சொல்லி விடலாமா?' யோசித்து முடிவுக்கு வந்த குமார் நிமிர்ந்தபோது ஆனந்தி ஆரம்பித்தாள்.

"ஏங்க... நான் என்ன தப்புப் பண்ணினேன்? என்னை உங்களுக்குப் பிடிக்கல லேன்னா தயவு செய்து காரணத்தைச் சொல்லிடுங்க. பிளீஸ்... அதுக்கப்புறம் நான் உங்களைத் தொந்தரவு பண்ணவே மாட்டேன்."

குமார் மெதுவாக ஆரம்பித்தான். "ஆனந்தி, நான் ஒண்ணு சொன்னா தப்பா எடுத்துக்க மாட்டியே? பொறுமையாகக் கேப்பியா?"

"சொல்லுங்க. அதுக்காகத்தானே காத்திட்டிருக்கேன்!"

"வந்து... ஆனந்தி... நான் ஒரு பொண்ணை லவ் பண்ணினேன்." சொல்லிவிட்டு ஆனந்தி முகத்தைப் பார்த்தான். அதிர்ச்சி துல்லியமாய்த் தெரிந்தது.

"லவ்னா... 'லிமிட்'டெல்லாம் தாண்டின லவ்."

"லிமிட் மீன்ஸ்?"

"மனசாலயும், உடம்பாலயும்தான்...."

"ம்... அப்புறம்?"

"லிமிட் தாண்டிட்டதால நிச்சயமா அவள் எனக்குத்தான்னு நம்பினேன். அதனால நிரந்தரமா ஒரு வேலை கிடைச்சதுக்கப்புறம் வீட்டுல சொல்லிக்கலாம்னு இருந்துட்டேன். ஆனால் அவங்க வீட்டுல அவளுக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சிட்டாங்க. நான் கவலைப்படல. எப்படியும் எங்க 'லிமிட்'ட சொல்லிக் கல்யாணத்தை நிறுத்திடுவாள்னு எதிர்பார்த்தேன்.

அடுத்த நாள் அவள் என்னைச் சந்தித்தாள். எங்க விஷயத்தை அடியோட மறந்துட்டு, அவங்கப்பா கையக்காட்டுற மாப்பிள்ளையைக் கட்டிக்கலேன்னா அவங்க குடும்பம் மொத்தமும் விஷம் குடிச்சு செத்துப் போயிடுவோம்னு மிரட்னதால அவள் கல்யாணத்துக்குச் சம்மதிச்சுட்டதாச் சொன்னாள்."

"நீங்க என்ன சொன்னீங்க?"

"அப்போ நான் நிரந்தரமான வேலையில



இல்லாததால என்னால எதுவும் செய்ய முடியல. அவளுக்குக் கல்யாணமாயிட்டது. இப்போ இரண்டு குழந்தைகளும் இருக்கு."

"அதுக்கும் நம்ம வாழ்க்கைக்கும் என்னங்க சம்பந்தம்?"

"என்ன ஆனந்தி இப்படிக் கேட்டுட்டே? நான் கல்யாணத்துக்கு முன்னாடியே ஒரு பொண்ணோட வாழ்ந்திருக்கேன்."

"தப்புங்க.... வாழ்ந்தேன்னு சொல்லாதீங்க. அது வாழ்க்கையில்ல வாலிபம் தந்த விபத்து."

"........"

"ஆமாங்க. நீங்க இப்போ வாழப்போறது தான் வாழ்க்கை. நான் ஒண்ணு கேட்டா பதில் சொல்வீங்களா?"

"கேளும்மா"

"இப்பவும் அந்தப்பொண்ணு உங்க மனசுல இருக்காளா?"

"நிச்சயமா இல்லை. எப்போ என்னை மறந்துட்டு இன்னொருத்தனக் கல்யாணம் பண்ணிக்கிட்டாளோ அப்பவே நான் அவளை மறந்துட்டேன்."

"குட்...! அப்புறம் ஏன் என்னையும் தவிர்க்கிறீங்க?"

"இல்லை ஆனந்தி. நான் அவளைத் தொட்டுட்டதால அவள்தான் எனக்கு மனைவின்னு முடிவு பண்ணிட்டேன். உண்மையச் சொல்லணும்னா, உன்னைக்கூட பெத்தவங்க கட்டாயத்துக்காகத்தான் கட்டிக்கிட்டேனே தவிர நான் உன்னோட வாழ விரும்பல.

அதனாலதான் தினமும் நீ ரூமுக்கு வரும் முன்னால நான் தூக்க மாத்திரையைப் போட்டுட்டுத் தூங்கிடறேன். நான் கொஞ்சம் ஓய்வா இருந்து, நீ எங்கிட்டே பேச ஆரம்பிச்சா எங்கே நான் இதையெல்லாம் உளறிடுவேனோங்றுதான், நீ கிட்ட வரும்போதல்லாம் நான் விலகிப் போயிடுறேன். அதோட நைட் ஓவர் டைம் பண்ணிட்டு தினமும் லேட்டா வந்திட்டிருக்கேன்." சொல்லிவிட்டுத் தலை கவிழ்த்தான் குமார்.

மெதுவாக அவன் கைகளைப் பற்றிய ஆனந்தி, "நீங்க தப்புப் பண்ணிட்டீங்க. இதை முதலிலேயே என்கிட்டே சொல்லியிருக்கலாம். நானே ஏதாவது தப்பு செய்திருந்தாக்கூட நிச்சயமா ஓப்பனா பேசியிருப்பேன். கல்யாணம் கிறது நாம ரெண்டு பேருக்கும் நடுவுல ஒரு ஒப்பந்தம்தான்.

கல்யாணத்துக்குப் பிறகு நீங்க எனக்கும், நான் உங்களுக்கும் உள்ளத்தாலும், உடலாலும் உண்மையா இருக்கணும். கடைசிவரைக்கும் இன்பத்தையும், துன்பத்தையும் இணைந்தே அனுபவிக்கணும்கிறதுதான் அந்த ஒப்பந்தம். அதனால நீங்க கல்யாணத்துக்கு முன்னால எப்படி இருந்திருந்தாலும் எனக்குக் கவலை இல்லை. இனிமேல் எப்படி இருக்கப் போறீங்கங்கிறதுதான் எனக்குத் தேவை."

"அப்படின்னா நான் செஞ்சது தப்பு இல்லைன்னு சொல்றியா ஆனந்தி?"

"நம்மோட வாழ்க்கைங்கிற நதியில வந்த நீர்க்குமிழ்தான் உங்களோட கடந்த பழைய சம்பவம்.

நதியில நீர்க்குமிழ் வர்றது, 'தப்பு'- 'சரி' என்கிற விவாதத்துக்கு அப்பாற்பட்ட சமாச்சாரம். தவிர்க்க முடியாத எதார்த்த சம்பவங்கள். இவைகளைப் புரிந்துகொள்ள என்னால் முடியும். நம் வாழ்க்கை என்ற நதி, பிளவுபட்டு உடைந்து சென்றால்தான் நான் கவலைப்படுவேன். சின்னச் சின்ன வலுவற்ற நீர்க்குமிழி உறவுகள் நம் உறவை நிச்சயம் பாதிக்காது. எத்தனை நீர்க்குமிழிகள் வந்தாலும் நதி தன் பாதைல போயிட்டேயிருக்கணும். அப்படித்தான் வாழ்க்கையும்."

குமாருக்குக் கண்களில் நீர் நிறைந்தது. 'இத்தனை உயர்ந்தவளா என் ஆனந்தி? நான் எத்தனை பாக்கியவான்!'

"ஆனந்தி... நீ...நீ...ரொம்ப..ரொம்....ப உயர்ந்துட்டேம்மா. இனிமேல் நான் உங்கிட்டே எதையும் மறைக்க மாட்டேன்."

நெகிழ்வோடு அவளை அணைத்துக் கொண்டான் குமார். ■

# விடிவு?



திருமகள்

அது மலையகத்து மருத்துவமனை. பிறப்பு இறப்பு மருத்துவப் பதிவாளரின் அலுவலக அறையில் என் வேலையில் மூழ்கியிருந்த நான் "அக்கா!" என்ற காந்தியின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன்.

வாசலில் 'உட்பிரவேசிக்கக்கூடாது' என்று எழுதப்பட்ட பலகையின் மறுபுறத்தில், தோளில் போட்டிருந்த துண்டினால் வாயைப் பொத்தியபடி ஒரு வயதானவரும், அவரருகே ஒரு இளைஞனும் நின்றிருந்தனர். அந்த இளைஞனின் முகத்தில், கண்களில் ஒரு வெறுமை தெரிந்தது. என் மனதில் நெருடியது.

"ஐயா என்ன வேண்டும்? உள்ளே வாருங்கள்!" என்றேன்.

குறிப்பறிந்த காந்தி 'உட்பிரவேசிக்கக் கூடாது' பலகையை எடுத்து அவர்களை உள்ளே விட்டாள்.

உள்ளே நுழைந்த பெரியவர் என் எதிரில் நின்று தன் அழுக்கடைந்த சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துப் பணிவுடன் என்முன்னால் வைத்தார்.

"தந்தி வந்ததுங்க. சிவபாக்கியம் தவறிட்டதாங்க. அதுதான் உங்களைப் பார்க்கலாமுன்னு வந்தேங்க. இவன் என் மகனுங்க. வாய் பேச முடியாதுங்க. இவன் சம்சாரந்தாங்க சிவபாக்கியம்."

'ஓ! அந்த வெறுமை அதனால் தானோ? என் மனம் புரிந்து கொண்டது. பாவம் இவன் இளமையாக இருந்தால், இறந்த இவன் மனைவி...? ஏன் இறந்தாள்?'

"எந்த வாட்டு?" என்று கேட்டேன்.

"18ம் நம்பருங்க."

'ஓ! காசநோய்! ஏழைத் தொழிலாளியின் உயிர்க்கொல்லி.'

இறந்தவர்களின் நோய் விபரங்கள் அடங்கிய கோப்பில் சிவபாக்கியத்தின் 'டிக்கட்'டைத் தேடியெடுத்தாள் காந்தி. 'டிக்கட்' ஆமாம் மறு உலகத்திற்கான டிக்கட். சிவபாக்கியம் மெலிந்திருந்தாளோ என்னவோ 'டிக்கட்' மட்டும் தடித்திருந்தது.

புரட்டிப் பார்த்தேன். முற்றிய காசநோய். 3 மாதங்களுக்கு மேல் இருந்திருக்கிறாள். ஆனால் நோய் அதிகம் முற்றிய பிறகே மருத்துவமனைக்கு வந்ததனால் மருந்துகள் பலனளிக்கவில்லை.

ஒரு பெருமூச்சை விட்டபடி,

"ஐயா இப்போதே கொண்டு போகிறீர்களா?" என்று பெரியவரிடம் கேட்டேன்.

"இல்லைங்க. எங்களுக்கு வசதி இல்லைங்க. நாங்க இருப்பது சொந்தத் தோட்டங்க. வாகனம் கொடுக்க மாட்டாங்க. அதனால அரசாங்கத்து மூலமாக அடக்கம் பண்ண ஒழுங்கு பண்ணலாமுன்னுதான் உங்ககிட்ட வந்தோங்க."

அருகே இருந்த காந்தியால் பொறுக்க முடியவில்லை. சிங்களப் பெண்ணானாலும் நன்றாகத் தமிழ் பேசுவாள். மனித நேயம் மிக்கவள்.

"ஐயா அந்த பெண் உயிரோட இருக்கும் போது வேலை செய்தது தானே? பிராவிடண்ட் பண்ட் வரும்தானே? அவள் உடலை மரியாதையாக அடக்கம் பண்ணுங்க." என்று சொன்னாள்.

என் மனதில் முன்னொரு நாள் அந்த மருத்துவமனையின் பிரேத அறைக்குப் பொறுப்பாக இருக்கும் மூக்கனுக்கும், காந்திக்கும் இடையே நடந்த உரையாடல் படமாக ஓடியது.

"மூக்கன் இன்று அடக்கம் பண்ண ரொம்பப் பேர் இருக்கிறாங்களே! 5-6 பெரியவங்க, 3 பிள்ளைகள். இவ்வளவு பேருக்கும் குழிவெட்டுவது யார்? உதவிக்கு யாரும் கிடைப்பார்களா அல்லது மூக்கனேதான் எல்லாக் குழியும் வெட்ட வேண்டுமா?"

கையில் இருந்த வெற்றிலையை வாய்க்குள் அடைத்தவாறே மூக்கன்,

"பைத்தியமா அம்மா? யார் 5-6 குழி வெட்டுவது? ஒரே குழிதான். பெரிய குழியாக வெட்டுவேன். எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு மூடி விடுவேன். சில வேளைகளில் நீளம் பத்தாமல் போகும். மண்வெட்டியால் ஒன்று போட்டால் சரியாகிவிடும்...!" என்று சிரித்தபடியே சொல்லி முடிப்பதற்குள் காந்தி அறை மூலையிலிருந்த வாஷ் பேசினில் வாந்தியெடுப்பதைக் கண்டேன்.

அன்றிலிருந்து யாராவது அரசாங்கச் செலவில் அடக்கம் பண்ணவேண்டும் என்று சொல்ல வந்தால் முடிந்தவரை அவர்களுக்குப் புத்திமதி சொல்வாள். தூர இடங்களுக்குக் கொண்டு போக வாகனத்துக்குப் பணம் இல்லாதவர்களிடம்,

"இங்கேயே உங்கள் வசதிக்கு ஏற்ற மாதிரி ஒரு சாதாரணப் பெட்டியாக வாங்கி நீங்களே தூக்கிப்போய் ஒரு குழியை வெட்டி அடக்கம் பண்ணிவிட்டுப் போங்க. உங்கள் சொந்தக்காரர்களுக்கு நீங்கள் செய்யும் கடைசி மரியாதையாக இருக்கட்டும்!" என்பாள். அவர்களுக்கும் அப்போதுதான் இப்படியும் ஒரு வழி இருக்கிறது என்பது புரியும். பலபேர் அவளின் வார்த்தைகளைக் கேட்டு அப்படியே செய்வார்கள். ஆனால் இன்று அந்தப் பெரியவர்,

"அம்மா நான் பென்சன் ஆளுங்க. இவனோ வாய் பேசமுடியாதவன். அந்தப் புள்ள மட்டுந்தாங்க வேலை. அதுவும் மூணு மாசமா வாட்டில இருக்குதா, ரொம்பக் கஷ்டங்க. அன்றாடம் சாப்பாட்டுக்கே வழியில்லீங்க. அதனால் எப்படியாவது இந்த உதவியைச் செய்யுங்க."

"சரி. அப்படியென்றால் நீங்கள் இந்த 'டிக்கட்'டில் கையொப்பம் வச்சிட்டு சிவபாக்கியத்தின் தாய் பெயர் தகப்பன் பெயர் கணவன் பெயர் என்ற விபரங்களைக் கொடுத்திட்டுப் போங்க." என்றேன்.

பெரியவர் தன் மகனின் இடது கையைப் பற்றிச் சைகை காட்டினார். அவன் தன் பெருவிரல் அடையாளத்தை காந்தி காட்டிய இடத்தில் இட்டான்.

"சரி நீங்கள் போகலாம்!"

"அம்மா..." என்று பெரியவர் தயங்கினார்.

"அந்தப் புள்ளையோட பண்டுப் பணம் எடுக்கணுங்க. அதனால மரண சேர்டிபிக்கேட் வேணுங்க... அதுக்கும் ஒழுங்கு பண்ணினா நல்லங்க."

"சரி நீங்க ஸ்டாம்ப் ஒட்டி 'ஃபோர்ம்' இல் கையொப்பம் போடுங்க. நாங்கள் அனுப்பி வைக்கிறோம்."

அந்த வேலையும் முடிந்து அவர்கள் போனதும் காந்தி குமுறினாள்.

"அக்கா! செத்தவளைப் புதைக்கும் முன்னேயே பண்டுப் பணமா?"

"அவர்களைக் குறை சொல்லிப் பயனில்லை காந்தி. அவர்கள் நிலைமை அப்படி.."

காந்தி என் சமாதானத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. முணுமுணுத்தபடியே தன் வேலையில் ஈடுபட்டாள்.

சில நாட்கள் கடந்தன. வேலை மும்முரத்தில் சிவபாக்கியம் மறந்தவளானாள்.

ஒருநாள் அழுது அரற்றியபடி ஒரு வயதான தம்பதியினர் என் அறை வாசலில் நின்றனர். ஆடைகளில் ஓரளவு வசதி தெரிந்தது.

"அம்மா எங்க மக தவறிப்போயிட்டாங்க. இப்பதான் விவரம் அறிந்து வந்தோங்க. பாருங்கம்மா அவளைக் கட்டிக்கொடுத்த இடத்துல அந்தப் புள்ளைக்கு இம்புட்டுக் கஷ்டமுன்னு எங்களுக்குத் தெரியாமப் போச்சுங்க. அநியாயமா எங்கள விட்டுட்டுப் போயிருச்சே என் தாயி...!" என்று அரற்றினாள் அந்தப் பெண்.

"அம்மா அழாதீங்க விவரம் சொல்லுங்க. பார்த்துச் சொல்லுகிறேன்." என்றாள் காந்தி.

"பேரு சிவபாக்கியங்க. கட்டிக்கொடுத்தது தங்கமலைங்க."

எனக்குச் சுர்ரென்றது. 'சிவபாக்கியம்-அதே சிவபாக்கியமா? அப்படியானால் அவள் இறந்து பல நாட்களாகிவிட்டனவே! ஒரு 20 அல்லது 25 நாள் இருக்குமா?' கணக்குப் பார்த்தது என் மனம்.

அதற்குள் காந்தி கோப்பை எடுத்துப் பார்த்தாள். "அப்படி யாரும் 2-3 நாட்களுக்குள் இறக்கவில்லையே! எந்த வாட்டு?" என்று கேட்டாள்.

"18ம் நம்பருன்னு சொன்னாங்க."

"பதினெட்டா? அப்போ சிவபாக்கியத்தின் அப்பா, அம்மா பெயர்?"

"அம்மா. நாகம்மா அப்பா கருப்பையாங்க."

"அப்போ அதே சிவபாக்கியம்தான் அக்கா!" என்றாள் காந்தி.

திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவள் போலக் கோப்பின் அடியிலுள்ள டிக்கட்டுக்களைப் பார்த்தாள். சிவபாக்கியத்தின் டிக்கட்டை எடுத்தாள்.

புரட்டிப் பார்த்தவள். "அக்கா மூக்கன் பல நாளாக வரவில்லை. சிவபாக்கியத்தை எடுக்கவும் இல்லை," என்றாள்.

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 25 நாட்களாக யாரும் அதிகம் இறக்காததினால் பிரேத அறைக் குளிர்சாதனப் பெட்டியில் இடம் இருந்திருக்க வேண்டும். மூக்கன் சிவபாக்கியத்தை அடக்கம் பண்ணவில்லை.

அந்தத் தாய் தந்தை செய்த புண்ணியம் தங்கள் மகள் முகத்தைக் கடைசியாகப் பார்க்கக் கிடைக்கும் என்று நினைத்தபடி...

"ஐயா சிவபாக்கியம் இறந்து 25 நாளாகுது. அவங்க புருஷன் வந்து அரசாங்கச் செலவில அடக்கம் பண்ணச் சொல்லிட்டுப் போயிட்டாங்க. இப்போ நீங்க என்ன செய்யப் போறீங்க?"

"நம்ம தோட்டத்துக்குக் கொண்டு போறேங்கம்மா. நாங்க லுணுகலைங்க. இந்தப் புள்ளய ஹாலி-எலயில கட்டிக்கொடுத்தோம். மூணு வருஷம் ஆச்சுங்க. அவங்க சுகமில்லாமப் போனதும் வாட்டில நிப்பாட்டிட்டு எங்களுக்கு அறிவிக்கக்கூட இல்லைங்க. ரொம்ப நாளைக் கப்புறம் தங்கமலையிலேருந்து லுணுகலைக்கு வந்த சொந்தக்காரங்க சொன்னப்புறந்தாங்க நான் என் தம்பி மகனை பெரியாஸ்பத்திரிக்குப்போய் பார்த்திட்டு வரச்சொல்லிப் பணங் கொடுத்து அனுப்பினேனுங்க. அவன் வந்து பார்த்தானோ இல்லையோ தெரியாது. என்கிட்டே வந்து 'சிவபாக்கியம் இப்போ நல்லா இருக்குது இன்னும் இரண்டு நாளில வீட்டுக்கு அனுப்பிடுவாங்க' என்னு சொல்லிப்புட்டாங்க. நான் பாவி அதை நம்பி சும்மா இருந்துட்டேங்க," என்று விம்மி அழுதார் தந்தை.


"ஏமாத்துக்காரன்! அவனைப்போய் நல்லாக் கேட்டாத்தான் என் ஆத்திரம் அடங்கும்" என்று அரற்றினாள் தாய்.

'இறைவா இவர்களுக்கு என்று விடிவு வரும்? என்று விடுதலை வரும்?'

ஆனால் இன்று சிவபாக்கியத்துக்கு அவள் உயிருடன் இருந்தபோது கிடைக்காத பாசமான பிரியாவிடை கிடைத்திருக்கிறது. காலம் கடந்தாலும் இந்தத் திருப்பம் என் மனதுக்கு ஒரு நிம்மதியைக் கொடுத்தது.

காந்தி உடலை எடுத்துச் செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தை என் கையொப்பத்திற்காக என் முன்னால் வைத்தாள்.

# ஊன்றுகோல்



வீரமுனை வாணவர்கோன்

நேற்று இரவு கட்டி வைத்திருந்த சோற்று முடிச்சை எடுத்து பேக்கினுள் வைத்த பின்னர் வெத்திலைப் பையைத் திறந்து ஒரு வாய்க்கு வெத்தில போட்டு எச்சிலைக் கொதுப்பியவாறு, "மகள் சுட்ட அப்பமெல்லாம் பெட்டிக்குள்ள இருக்கு, பனி பெய்யிறதால விடியாத மாதிரி தெரியுது. எழும்பி முகத்தைக் கழுவிற்று அப்பத்தை வித்திற்று வாவன் புள்ள, நம்மள நம்பி உத்தியோகம் செய்யுறவங்க காலைச் சாப்பாட்டுக்குக் காத்திற்று இருப்பாங்க, வித்திற்று வரும்போது நேற்று பொன்னம்மா அக்காட மகள் ராசாத்தி தரவேண்டிய காசையும் மறந்திடாம வாங்கிட்டு வா புள்ள. அவ பழைய காசும் மூன்று ரூபா தரணும். சேர்த்து வாங்கிற்று வா, ம்... பள்ளிக்கூடத்துக்கு போக மறந்திடாத!" எனக் கூற முற்பட்ட கோகிலத்தின் கண்கள் பனித்தன.

சென்ற வாரம் ஊரெல்லாம் கொலரா பரவியது. வைத்தியசாலைக்கு போவதென்றால் அருவருப்பு, இட நெருக்கடி ஒரு பக்கம், இலையான் தொல்லைகள் மறு பக்கம், சாதாரண மனிதனுக்கே வாந்தி வரும் நிலைக்கு சுகாதாரம் நிலவுகின்றது. அது மட்டுமல்லாமல் வைத்திய சாலை ஊழியர்களின் கரிசனை எதிர்மாறு. பணம் கறத்தலே அவர்களின் பிரதான நோக்கம். வாந்திபேதியென அனுமதிக்கப்பட்டவர்களில் பலர் பிழைத்ததாக எவரும் அறியவில்லை.

சாதாரண தலைச் சுற்றும், வாந்தியுமென வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட கோகிலத்தின் ஆசை மகள் ரஞ்சனா, கொலராவின் கொடூரத்துக்கு ஆட்பட்டாள். வைத்தியர்கள் இளநீர் கொடுக்குமாறும், பெரியாஸ்பத்திரியில் இருந்து இன்றைக்கு குளுகோஸ் சேலைன் வராது விட்டால், தங்களால் ஒன்றும் செய்ய முடியாது. தனியார் வைத்தியசாலைக்குத்தான் கொண்டு செல்ல வேண்டுமெனவும் கூறிச் சென்றனர்.

ஏழை வரம் கேட்டுப் பிறந்த கோகிலம் என்ன செய்வாள், இறைவனிடம் இறைஞ்சுவதைத் தவிர வேறு வழியில்லை. அர்ச்சனையும், சாஸ்த்திரியுமென அலைந்தாள். பிரயோசனம் கிடைக்கவில்லை. ரஞ்சனாவின் உயிரற்ற சடலமே கரத்தில் கிடைத்தது.

வயலில் அறுவடைக் காலமாதலால் ஏழை, எளியதுகள் வந்து கதிர் பொறுக்கி நெல்லை எடுப்பது வழக்கம். திறமை உள்ளவர்கள் ஒரு நாளைக்கு ஐந்து, ஆறு மரைக்கால் நெல்லைச் சேர்த்துக் கொள்வார்கள். கோகிலம் புதுப் பழக்கம் ஒரு மரைக்கால் நெல்லுக்குக்கூட கதிர் பொறுக்க அவளால் முடியவில்லை.

கடந்த வருடம் காய்ச்சல் எனப் படுத்த கணவனுக்கு மருந்து எடுத்துக்கொடுக்க பரிசாரியிடம் போனபோது மருந்துகள் தந்தது டன் சாராயம் முட்டையும் சேர்த்துக் கொடுக்க மாறு சொன்னார். அவரின் சொற்படி எருவில் சாராயம் அரைப் போத்தலும், நாட்டு முட்டையும் வாங்கி வந்து அன்று இரவு சாப்பாட்டுக்கு முன்னதாக பரிசாரி தந்த குளிசைகளைக் குடிக்கக் கொடுத்துவிட்டு பின்பு அரைக் கிளாஸ் சாராயத்துடன் இரண்டு முட்டைகளையும் விட்டு அடித்து கணவனுக்கு கொடுத்தாள் கோகிலம். மருந்தைக் குடித்துவிட்டு, எனக்கு பசிக்கவில்லை எழுப்ப வேண்டாம் எனக்கூறி படுத்தவர்தான் கணவன் செல்வராசா; எழும்பவே இல்லை. மரண விசாரணையில் நச்சுக் கலந்து விற்பனை செய்த சாராயத்தை அருந்தியதால் ஏற்பட்ட மரணமென தீர்ப்புக் கிடைத்தது.

அன்றில் இருந்து உறவுகளை இழந்த கோகிலம் தனது ஐந்தாம் ஆண்டு படிக்கும் மகளுடன் சீவியம் நடாத்த நிர்ப்பந்திக்கப்பட்டாள். செல்வராசா அரசாங்க அலுவலகத்தில் வேலை செய்திருந்தும்கூட தற்காலிக ஊழியனாகையால் ஒய்வூதியப் பணம் கிடைக்க வழியும் இல்லை. எத்தனையோ அரசியல்வாதிகளிடமும், அரச மேல்மட்ட உத்தியோகத்தர்களிடமும் கணவனின் சேவைக்கான ஊதியத்தைப் பெற்றுத் தருமாறு மண்டாடினாள் கோகிலம், எதுவித பிரயோசனமும் கிடைக்கவில்லை.

அரைப்பட்டினியுடன் எத்தனை நாளுக்குத்தான் மகளை வளர்ப்பாள் கோகிலம், அப்பம் சுட்டு விற்று அதில் வரும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடாத்துவதென்பது கடினமாகவே இருந்தது. ஆகையால் வேளாண்மை அறுவடை காலங்களில் வயலுக்குச் சென்று நெற்கதிர் பொறுக்கி நெல் சேமித்து வீட்டுக்குக் கொண்டு வந்து சோற்றுக்கு அதைப் பயன் படுத்தி வந்தாள் கோகிலம்.

வயலுக்கு கதிர் பொறுக்கச் சென்ற கோகிலம் வரம்பால் நடந்து சென்றபோது அங்கே புதைத்து வைக்கப்பட்டிருந்த பொறி வெடியொன்றை எதிர்பாராத விதமாக மிதிக்கவே அது வெடித்தது.

கோகிலத்தின் காலொன்று அறுவைச் சிகிச்சையில் அகற்றப்பட்டது. உறவென்று அழைக்க எவரும் இல்லாத நடைப்பிணமாகி விட்டாள் கோகிலம். அவளுக்கு புதிய உறவொன்று கிடைத்திருக்கிறது. ஊன்றுகோல். இனி அதுதான் அவளுடன் கூட இருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# காதலே நிம்மதி

'காதல் என்பது
கல்யாணம்வரை!'என்று
எந்த மூடன் சொன்னது?

வாழ்க்கை
என்பது அமுதம்!

ஆயுள் முழுவதும்
அனுபவித்து பருகினால்
தினமெல்லாம் இனிக்கும்!

வாழ்க்கை
என்பது ஓடும் நதி!

அழுக்குகள்- ஓடும்
நதியில் தேங்குவதில்லை!

வாழ்க்கை
என்பது சாக்கடையானால்
அழுக்குகளை தவிர
வேறு எதுவும் சேருவதுமில்லை!

காதல்!
கருவறையில் இருந்து
ஆரம்பிக்கிறது!
கல்லறை வரை
நீள்கிறது!

ஆரம்பம் உண்டு
ஆனால் அந்தம் கிடையாது!
அதுதான் காதல்!

"காதற்ற ஊசியும்
கடைவழிக்கு வராது"
ஆனால் காதல் வரும்!

புதைத்த இடத்தையும்
எரித்த இடத்தையும்
பனித்த விழிகளோடும்
கனத்த இதயத்தோடும்
காதல் சுற்றி வரும்!

தாயைக் காதலித்தால்
கருவறையும் கோயில்!
தாரத்தைக் காதலிப்பவனுக்கு
கல்லறையும் கோயில்!

பெண்களைச் சபித்த
பட்டினத்தாரும்
பெற்றதாய் எரிகையில்
மனம் எரிந்ததும்
காதலால்தான்!

காதல்
அழவும் வைக்கும்
அரற்றவும் வைக்கும்
ஆனந்திக்கவும் வைக்கும்!

ஆயகலைகள்
ஆறுபத்து நான்கு!
காதலில் உள்ள
கலைகளுக்கு கரையே
கிடையாது!

ஆறில்லாத ஊருக்கு
அழகு பாழ்!

காதலில்லா விட்டால்
வாழ்க்கையே பாழ்!

வீட்டுக்கு வீடு
வாசல்படி!
மனிதருக்கு மனிதர்
காதல் படி!

வாசல்
உள்ளே செல்ல!
காதல் படியும்
இன்னொருவர்
உள்ளே வரத்தான்!

ஆலயம் தொழுவது
மட்டுமல்ல,
அடுத்தாரை நேசிப்பதும்
சாலச் சிறந்ததுதான்!

காதல்
நேசிக்கக் கற்றுத்
தருகிறது!

காதல்
அடுத்தவர் உள்ளத்தை
வாசிக்கவும்
கற்றுத் தருகிறது!

பொதுநலம்
அடுத்தவருக்காக
வாழச் சொல்கிறது!

காதலோ
அடுத்தவராகவே
வாழச் செய்துவிடுகிறது!

அவள்
அவனாக வாழ்கிறாள்!
அவன்
அவளாக வாழ்கிறான்!

"உன் கண்ணில்
நீர் வழிந்தால்
என் கண்ணில்
உதிரம் கொட்டுதடி!"
என்று உருகிப்போகிறான்!

திருமணம் என்பது
காதலின் முடிவுரை
அல்ல!

திருமணம் என்பது
காதலின் முற்றுப்புள்ளி
அல்ல!

திருமணம் என்பது
காதலின் புதைகுழி அல்ல!

திருமணம் என்பது
காதலின் பலிக்களம்
அல்ல!



திருமணம் என்பது
காதலின்
இன்னொரு படிக்கட்டு!

திருமணம் என்பது
காதலின்
இன்னொரு பரிணாமம்.

திருமணம் என்பது
காதலின்
இன்னொரு களம்!

திருமணம் என்பது
காதலின்
இன்னொரு அத்தியாயம்!

காதல் என்பது
பொழுது போக்கு அன்று!

காதல் என்பது
வாலிபத் துடிப்பு அல்ல!

காதல் என்பது
பொறுப்பு!

காதல் என்பது
நிதானம்!

உனக்கு நான்
உனக்காக நான்
என்பது பொறுப்பு!

உனக்காக வாழ்வது
உனக்கேயாக இருப்பது
என்பது
பொறுப்பால்வந்த நிதானம்!

காதலி
மனைவியானால்
திருமணத்திற்கு முன்பே
திருநாள் ஆரம்பமாகிவிட்டது
என்று அர்த்தம்!

மனைவியான பின்னர்
காதலியானால்
திருமணத்தின் பின்னர்
திருநாள் ஆரம்பம்
என்று அர்த்தம்!

காதலி மனைவியானாலும்
மனைவி காதலியானாலும்
காதல்
வற்றிவிடக் கூடாது!

காதல் வற்றி விட்டால்
வாழ்க்கை பட்டுவிடும்!

இது-
பெண்ணுக்கும் பொருந்தும்.
ஆண்பால்
வரும் இடங்களில்
பெண் பால் சேர்த்துக்கொள்க!

தருவது ரசிகன்

## இலக்கிய நயம்

தன் காதலனை
வேறு ஒருத்தி
கண்களால் உண்பதை
சில காதலிகள்
பெருமையாக நினைப்பர்!

"என் ஆளைப்பார்த்து
ஏங்குகிறாள் பார்!"

தன் காதலியை
வேறு ஒருத்தர்
உற்று நோக்கினால்
கர்வப்படும்
காதலர்களும் உள்ளனர்!

"சாகிறான் பார்!"

ஆனாலும்
அவர்கள் விதி விலக்குகள்!

தன் காதலனோ
காதலியோ
பிறர் பார்வையால்
உண்ணப்படுவதை
பல காதலர்கள்
விரும்புவதில்லை!

எனக்கே எனக்கு
என்ற குழந்தை மனம்!
அங்கு வந்துவிடுகிறது.

இன்று மட்டுமல்ல
தொன்று தொட்டே
காதலர்களுக்கு
உள்ள குணம்தான்!

அதனால்தான்
திருவள்ளுவரும்;

"நிலவே! நிலவே!
பூ விழியாளாம்
என்னவள் வதனம்
போலிருக்க நீ விரும்பினால்
கண் அடிகள் படும் விதமாய்
தோன்றாதே!"
என்று காதலன்
கூறுவதாய் பகன்றுள்ளார்.

நிலவில் உள்ள மரு
பலர் கண்பட்டதால்
புண்பட்ட காயம்
என நினைத்தானோ?

காதலர்கள் பலர்
மனதளவில்
குழந்தைகளாகத்தான்
என்றுமிருக்கிறார்களோ?!

"மலரன்ன கண்ணாள் முகமொத்தி
யாயின்
பலர் காணத் தோன்றல் மதி
அதிகாரம்: 112 குறள்: 1119

## ஸ்போர்ட்ஸ்

# விக்கெட் கொய்பவர்

மேற்கிந்தியத் தீவு கிரிக்கெட் அணியினர் என்றாலே வேகப் பந்து வீச்சுக்குப் புகழ் பெற்றவர்கள் என்பது தெரியும். மைக்கேல் ஹோல்டிங், கொலின் கிராப்ட், ஜோயல் கார்னர், மல்கம் மார்ஷல், கேர்ட்லி அம்புரோஸ் போன்றவர்கள் வரிசையில் முன்னாள் கப்டன் கொட்னி வோல்ஷும் சாதனை படைத்து வருகிறார்.



ஜமெய்க்காவைச் சேர்ந்த 36 வயதான வோல்ஷ் 100 டெஸ்ட்களை இங்கிலாந்துடனான நான்காவது டெஸ்டின்போது பூர்த்தி செய்துள்ளார். உலகிலேயே 100 டெஸ்ட்களைப் பூர்த்தி செய்துள்ள 18வது வீரர் வோல்ஷ்.

முன்னாள் கப்டன் றிச்சி றிச்சர்ட்சனுக்குப் பிறகு கப்டன் பொறுப்பை ஏற்றுக்கொண்ட இவர் ஒரு சில வெற்றிகளையே அணிக்குத் தேடித் தந்திருக்கிறார். ஆனால் இவரது பந்து வீச்சு மட்டும் துல்லியமாகவே இருக்கிறது.

டெஸ்ட் போட்டியிலேயே அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய 2வது மேற்கிந்திய வீரர். முதலாவதாக இருப்பவர் மல்கம் மார்ஷல். மார்ஷலின் சாதனையை முறியடிக்க வோல்ஷ் இன்னமும் 15 விக்கெட்டுக்களை வீழ்த்தினால் போதும்.

உலக அளவில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய 7வது வீரர் என்ற சரதனையைப் பெற்றுள்ள வோல்ஷ், ரன் எதுவும் எடுக்காமல் (டக்) அவுட்டாகி சாதனை புரிந்துள்ளார். இதுவரை வோல்ஷ் 25க்கும் மேற்பட்ட தடவைகள் ரன் எதுவும் எடுக்காமல் அவுட்டாகி, 'டக்' எடுத்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் இருக்கிறார்.

தற்போது ஜமெய்க்கா அரசு வோல்ஷுக்கு தூதர் பதவியைக் கொடுத்து கௌரவப்படுத்தியிருக்கிறது. இந்தக் கௌரவத்தைப் பெறும் இரண்டாவது ஜமெய்க்கா விளையாட்டு வீரர் வோல்ஷ். இதற்கு முன் ஒலிம்பிக் வீரர் மெர்லின் ஒட்டேவுக்கு இந்தக் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

# பலியெடுத்த பந்து

அண்மையில், பங்களாதேஷில் நடைபெற்ற லீக் போட்டி ஒன்றின்போது, களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த முன்னாள் இந்திய வீரர் ராமன் லம்பா ஹெல்மெட் அணியாததால் தலை யில் பந்து பட்டு மரண மடைந்த செய்தியை அறிந்திருந்திருப்பீர்கள்.



லம்பா

முன்னாள் தொடக்க ஆட்டக்கார ரான ராமன் லம்பாவிற்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவரது மனைவியான கிம் லம்பா இத்தாலிய நாட்டுக்காரர்.

லம்பாவை விட கிரிக்கெட் பந்து பட்டு இறந்தவர்களில் பிரபல கிரிக்கெட் வீரர் வில்லியம் கில்பேர்ட் க்ரேஸின் மகன் சார்ள்ஸ், இரண்டாம் ஜோர்ஜ் மன்னரின் மகன் பிரடெரிக், பாகிஸ்தானிய வீரர் அகீல் அகமட், இங்கிலாந்து வீரர் இயன் தொம்ஸன் ஆகியோரும் அடங்குவர்.

1980ல் இரண்டு அவுஸ்திரேலிய சிறுவர்கள் விக்கெட்டுக்களுக்கு அருகில் ஆடும் பொழுது தலையில் பந்து பட்டு இறந்தார்கள். இவற்றைவிட பலர் பந்து பட்டு படுகாயமடைந்துள்ளனர். இதன் பின்னர் விக்டோரியா பாதுகாப்புத் தலைவர் கிரிக்கெட் விளையாடும்போது எல்லாரும் ஹெல்மெட் அணிய வேண்டு மென்று வலியுறுத்தினார்.

1977-78ல் மேற்கிந்தியத் தீவுக்கும், அவுஸ்திரேலிய அணிக்கு மிடையே நடைபெற்ற போட்டியின்போது கொலின் கிராப்ட் வீசிய பந்தினால் அடிபட்ட அவுஸ்தி ரேலிய வீரர் கிரஹாம் யலொப்தான் முதலில் டெஸ்ட் போட்டியில் ஹெல்மெட் அணிந்து விளையாடினார்.

துடுப்பாட்டத்தில் மட்டுமன்றி 'தற்கொலை மூலை' எனப்படும் விக்கெட்டுக்கு அருகில் களத்தடுப்பில் ஈடுபட்டிருப்பவர்களும் ஹெல்மெட் அணியவேண்டும்.

சில மாதங்களுக்கு முன் இந்திய-இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது ஹெல்மெட் அணிந்திருந்தும் ஸ்ரீநாத் வீசிய பந்து தலையில் பட்டு ஜெயசூரிய எப்படிக் கலங்கிப் போனார் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும்!

# சந்தியா பதில்கள்

**★ தொந்தியைக் குறைக்க என்ன செய்ய வேண்டும்?**

ஏ. சிவராமன், கண்டி.

நாவைக் கட்டுப்படுத்திக்கொண்டு நாள்தோறும் காலை எழுந்தவுடன் பயிற்சி செய்ய வேண்டும். கஷ்டம்தான்!

ஒருத்தர் டாக்டரிடம் போனார். "டாக்டர்! எல்லோரும் எனக்கு தொந்தி இருக்கிறதாகச் சொல்கிறார்கள். நீங்கள் சொல்லுங்கள், இருக்கிறதா?" என்றார்.

"சரி, நான் கண்டுபிடிக்கிறேன். தரையிலே இப்படி கால்நீட்டி நேராகப் படுங்கள்!" என்றார். படுத்தார்.

"இப்போது உங்கள் கண்ணை திருப்பி கால் கட்டை விரலைப் பாருங்கள். கட்டை விரல் தெரிகிறதா?" என்று கேட்டார் டாக்டர்.

"தெரிகிறது டாக்டர்!"

"நீங்கள் தெரிகிறது என்று சொல்லுறதை நான் எப்படி நம்புவது?"

"அதோ டாக்டர், கட்டை விரலில் ஒரு 'ஈ' அமர்ந்திருக்கிறது!"

உடனே டாக்டர் சொன்னார்:

"அப்படியானால் நீங்கள் பார்ப்பது கட்டைவிரல் அல்ல, உங்கள் மூக்கு நுனி. 'ஈ' அங்குதான் அமர்ந்திருக்கிறது!"

●❑

**★ மலையகத்தில் குண்டுகள் வெடிக்கிறதே?**

சி. சௌந்தர், பதுளை.

நாட்டில் எங்குதான் வெடிக்கவில்லை? மலையகத்தில் என்றதும் மட்டும் 'மலையகமும் பறிபோகப் போகிறது!' என்று பேரினவாதிகள் துள்ளுவது, இனவாதம் சார்ந்த சந்தேகத்தால்தான்!

●❑

**★ டியர் சிந்தியா! 'முத்தம்' பற்றி சிலவார்த்தைகள் கூறமுடியுமா?**

எஸ். கிருஷ்ணகுமார், மட்டக்களப்பு.

ஓ!

ஒரு பெரிய கல்யாண விருந்து நடந்து கொண்டிருந்தது. மண்டப வாசலில் ஒருவர் நின்று வருகிறவர்களையெல்லாம் மரியாதையாக வணங்கி, வருகிறவர்கள் கையைப்பிடித்து முத்தம் கொடுத்து, உள்ளே அனுப்பிக் கொண்டிருந்தார்.

அதைக் கவனித்த ஒருத்தர் அவரிடம் சென்று, "அண்ணே! நானும் எவ்வளவோ விருந்துகளுக்குப் போயிருக்கிறேன். இருந்தாலும் இத்தனை மரியாதையாக வருகிறவர்கள் கைக்கு முத்தம் கொடுத்து வரவேற்பதை இங்கேதான் பார்க்கிறேன்!" என்றார்.

அதுக்கு அவர் சொன்னார்:

"அடப்போங்க தம்பி! நான் முத்தம் கொடுக்கவில்லை. முந்தின பந்திக்கு வந்து சாப்பிட்டவர்கள் அடுத்த பந்திக்கும் வருகிறார்களா? என்று முகர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன்!" (என்ன கிருஷ், ஓகேவா?)

●❑

**★ ரஜினியின் புதுப்பட அறிவிப்பு ஏன் தாமதமாகிறது?**

எம்.எச். உவைஸ் ஷெரீப், கந்தளாய்.

அதுதான் அவரே அறிவித்திருக்கிறாரே! தேர்தல்கள் முடிந்த பின்னால்தான் ஆற அமர இருந்து புதுப்பட அறிவிப்பை வெளியிடப்போகிறார். தொழிலாளர், படைப்பாளர் பிரச்சனையை தேர்தல் முடிந்ததும் தீர்த்து வைப்பதாகவும் கருணாநிதி உறுதி கூறியுள்ளாராம். எந்தப் பக்கமும் சாராமல் படம் எடுக்க விரும்புகிறார் ரஜினி.

●❑

**★ நேரகாலம் தெரியாமல் பேசும் ஆட்களை எப்படித் திருத்துவது?**

மா. உதயசங்கர், பண்டாரவளை.

கஷ்டம்தான்! சில சமயம் அவர்கள் சுவாரசியமாகவும் நடந்து கொள்வார்கள்.

ஒருத்தருக்கு திடீரென்று நெஞ்சுவலி. உடனே ஃபோன் செய்ததும், டாக்டர் வந்தார். கையிலே ஒரு மருந்துப் பெட்டி.

நோயாளி இருக்கிற அறைக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டார். "யாரும் உள்ளே வரக்கூடாது!" என்று உத்தரவு.

மற்றவர்கள் எல்லாம் வெளியே இருந்தார்கள். அவர் வெளியே வந்து, "ஒரு ஆணி இருந்தால் தாருங்கள்!" என்று கேட்டார். 'அது எதுக்கு?' என்று யோசித்தாலும், கொடுத்தார்கள்.

ஆணியை வாங்கிக் கொண்டு கதவைச் சாத்திக்கொண்டார். உள்ளே கடா முடா என்று ஏதோ சத்தம். கொஞ்ச நேரம் கழித்து மறுபடியும் வெளியே வந்தார்.

## கூட்டணிக்கு கள்ள வாக்கு?

"ஒரு சுத்தியல் இருந்தால் தாருங்கள்!" என்றார். கொடுத்ததும், மறுபடியும் கதவைச் சாத்திக்கொண்டார். உள்ளே மீண்டும் கடா முடாச் சத்தம்.

வெளியே இருந்தவர்களுக்கு எதுவுமே புரியவில்லை. ஒரு பதினைந்து நிமிடம் கழித்து, "அப்பாடா வெற்றி, சக்ஸஸ்!" என்று சொல்லிக்கொண்டே வெளியே வந்தார்.

"என்ன ஆச்சு?" என்று எல்லோரும் ஆர்வமாகக் கேட்டார்கள்.

"நான் எடுத்துக் கொண்டு வந்த மருந்துப் பெட்டியைத் திறந்துவிட்டேன். இனிமேல் வைத்தியத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான்!" என்றார்.

●❑

**★ யாழ் தரைப்பாதை திறக்கப்படுமா?**

எம். ஆர். உதுமான், கொழும்பு-09.

ஒருவேளை தந்திரோபாயமாக புலிகள் விலகினால்கூட, தாக்குதலைத் தொடருவர் என்பதில் ஐயமில்லை. அது தெரிந்துதான் யாழுக்கு இன்னொரு விமான சேவை நடத்த துணிந்து முதலிட்டுள்ளது ஓய்வுபெற்ற படைவீரர்களின் குழுமம் ஒன்று. ஆகவே பாதையால் படைபோனாலும் பயணம் தொடராது.

●❑

**★ யாழ் நகரை அபிவிருத்தி செய்யப்போவதாக கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் கூறியுள்ளாரே?**

கே. நவா, யாழ்ப்பாணம்.

'போருக்கு மத்தியிலே அபிவிருத்தி என்பது அர்த்தமற்றது' என்று மட்டக்களப்பு கூட்டணித்தூண் ஜோசப் பரராஜசிங்கம் சிவாவுக்கு பதில் கொடுத்துவிட்டாரே!

●❑

**★ மீனா மறுபடி முன்னணியில் வருகிறார் போலிருக்கிறதே?**

செ. ராஜேஸ், கொழும்பு-11.

'நாம் இருவர் நமக்கு இருவர்' போன்று நாலு படம் நடித்தால் போதும்; ஜொள்ளர்களுக்கே அட இவ்வளவுதானே. என்று திகட்டிவிடும்.

●❑

**★ யாழ் மாநகர சபைத் தேர்தலில் கூட்டணிக்காக கள்ள வாக்குகள் போடப்பட்டதா?**

வி. செந்தில்வேல், கொழும்பு-06.

அப்படிச் சொல்வது மெத்தப்பெரிய பொய்! யாழ் உள்ளூராட்சித் தேர்தலில் கள்ளவாக்கு ஒன்றுகூட போடாத கட்சி கூட்டணிதான்! கூட்டணியை தேர்தலில் போட்டியிடவைக்க அரசு விரும்பியது, முயன்றது என்பதெல்லாம் உண்மைதான். ஆனால் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு அரசோ, படையோ ஒரு துரும்பளவுகூட உதவ வில்லை! நியாயமாகப் பெறப்பட்ட வெற்றிதான்! நிற்க, கூட் டணிக்காக வாக்குப் பெட்டிகள் மாற்றப்பட்டது என்பதுபோல சில தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. ஆனால் பாராளுமன்றத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தனும், ஈ.பி.டி.பி. எம்.பி. சிவதாசனும் தேர்தலை ஒழுங்காக- நீதியாக நடத்தி முடித்ததுக்காக படையினரைப் பாராட்டியுள்ளனரே!

●❑

**★ சிந்தியா! நடிகை மஞ்சுளாவின் மகள் ப்ரீதா-மஞ்சுளா போன்றே இருப்பதாக 'சினி விசிட்'டில் செய்தி கண்டோம். அவரது படம் காணவில்லையே! நீங்களாவது பிரசுரிப்பீர்களா?**

செல்வி என். செந்தூரி, வவுனியா.

உங்கள் விருப்பம் நிறைவேறுகிறது!



'சந்திப்போமா' படத்தில் சூர்யாவுடன் ப்ரீதா

●❑

**★ யாழ் குடாநாட்டில் கூட்டணியின் அலை வீசியிருக்கிறதே?**

சி. ரவிக்குமார், சுவிற்ஸர்லாந்து.

அலை என்று சொல்ல முடியாது! அக்கட்சிக்கு ஏற்கனவே இருந்த வாக்கு வங்கிகூட சேதமாகி இருக்கிறது! ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு வாக்கு வங்கி என்பதே கிடையாது. இனியும் உருவாகுமா என்பது சந்தேகமே. அதனால் கூட்டணி தனது முன்னாள் வாக்கு வங்கிகளை மீட்டுக் கொள்ளக்கூடிய சாதகம் இருக்கிறது. ஏனைய தமிழ்க்கட்சிகளின் தப்புத் தப்பான அரசியல் கூட்டணிக்கே கொத்துக் கொத்தான வாக்குகளைச் சேர்க்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம்

உலக மகா காவியங்களுள் முதன்மையான இராம காதையை வாசகப் பெருமக்களாகிய உங்கள் முன் படைக்கும் அரியவாய்ப்பினைப் பெற்றேன். இதனால் வாசகர்களாகிய உங்களுக்கு எத்தகைய பயன்கிட்டியதோ யான் அறியேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் உண்மையில் பெருமையடைகிறேன்; பெரும் பயனும் அடைகிறேன்.

# நிறைவுரை

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த வால்மீகி மாமுனிவரால் யாக்கப் பெற்று, ஒன்பதாம் நூற் றாண்டளவில் வாழ்ந்த கவிச்சக்கரவர்த்தி கம்பர் பெருமானால் தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு அறிமுகப் படுத்தப்பட்ட இராமகாதை, மாமேதை ராஜாஜி போன்றோராலும் தமிழுலகில் நன்கு அறிமுகப்படுத்தப்பட்ட காப்பியமாகும். காலத்துக்குக் காலம் பல்வேறு அறிஞர்களாலும் இராமசரிதம் சொல்லப்பட்டு வந்துள்ளது.

இத்தகைய சான்றோரால் பல கோணங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட இத் தெய்வீகக் காதையை- எத்தகைய அருகதையோ, அறிவோ, ஆற்றலோ சிறிதளவேனும் இல்லாத நான் உங்கள் முன் கூறவந்தமை உண்மையில் தெய்வீக சக்தியின் விளைவேயன்றி வேறில்லை.

சின்னஞ்சிறுவனாக இருந்த காலத்தில் 'இராம நாடகம்' நாட்டுக்கூத்தை பல தடவைகள் பார்த்திருக்கிறேன். வட்டக் களரியில் மாலை முதல் அடுத்த நாள் பொழுது புலரும் வரை, இராம நாடகம் ஆடப்படும். களரியைச் சுற்றி வளைந்திருந்து மக்கள் பார்ப்பார்கள். ஒரு தடவையல்ல, எத்தனை தடவை மேடையேறினாலும், ஏற்கனவே பார்த்துப் பரவசமடைந்தவர்களே மீண்டும் மீண்டும் பார்ப்பார்கள்.

எனக்கு சுமார் 8 வயதிருக்கும்போதே இராம நாடகம் முதன் முதலில்- எனது தாயாரின் மடியிலிருந்த வண்ணம்- பார்த்த நினைவுண்டு. எனது இருபதாவது வயது வரை பல தடவைகள் இந்நாடகம் பார்த்தமையினால் இராமர் மீதும், அனுமார் மீதும், சீதாப்பிராட்டியார் மீதும் பற்றுதல் ஏற்பட்டிருந்தது. கம்பராமாயணத்தை அப்போது முழுமையாகப் படித்தின்புற முடியாமற் போனாலும், பள்ளியில் படிக்கும் காலத்தில் கம்பர் பெருமானின் சில செய்யுள்களை மட்டும் மனனம் செய்யும் பேறு பெற்றேன், அதுவும் பரீட்சைக்காக.

## திரைப்படங்கள்

'ராம்ராஜ்யம்' என்ற திரைப்படம் இந்தியில் வந்தது. தொடர்ந்து தமிழிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு திரையிடப் பட்டது. இவ்விரண்டையும் பார்த்தின்புறும் வாய்ப்புக்கிட்டியது. 'சம்பூர்ண ராமாயணம்' என்றொரு தமிழ்ப்படமும் வந்தது. இதனை நான்கு தடவைகள் பார்த்ததாக ஞாபகம்.

நாற்பதாம் ஆண்டுகளில் தமிழ்நாட்டிலிருந்து வாராவாரம் வெளிவந்துகொண்டிருந்த 'ஹனுமான்' எனும் வாரசஞ்சிகைதான் எனக்கு முதன் முதலாக அறிமுகமான பல்சுவை வார ஏடு. இப்பத்திரிகையின் முன்பக்கத்தின் மேல்புறம் அனுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தாங்கிவரும் காட்சி என் மனதில் இன்றும் நிலையாக நிற்கிறது. இதே பத்திரிகையில் சிறுவர் பகுதிக்கு நான் எழுதியனுப்பிய முதற் கவிதை- கட்டம் கட்டி, தடித்த எழுத்துக்களில்-பிரசுரமாகியிருந்தது. இதிலிருந்தே அனுமன் மீது ஒரு பற்றுதல் ஏற்பட்டது.

'கல்கி' வார ஏட்டில் அப்போது 'சித்திர ராமாயணம்' என்று தொடராகப் படங்களுடன் இராமகாதை பிரசுரமாகியது. அடுத்த இதழ் எப்போது வரும் என்று ஏங்கியவண்ணம் காத்திருப்பேன். ராஜாஜி அவர்கள் எழுதிய 'சக்கரவர்த்தித் திருமக'னும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இளமையில் குடியிருந்த தெருவின் அடுத்த தெருவில் 'அனுமார்மாவடி' என்று ஒரு மாமரத்தின் அடியில் ஒரு பீடம் அமைக்கப்பட்டு ஆஞ்சநேயருக்குத் தினசரி பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இன்று அந்த மாமரம் இல்லாவிட்டாலும் அனுமனுக்கான ஒரு சிறு ஆலயம் அமைக்கப்பட்டு பூசைகள் நடைபெற்று வருகின்றன. இளமையிலிருந்தே அனுமனைத் தியானித்து வணங்கும் பழக்கமும் அனுமார்மாவடி உறைந்த ஆஞ்சநேயரால் ஏற்பட்டது.

## இராவண காவியம்

கம்பராமாயணத்தை முழுமையாகப் படிக்கும் வாய்ப்பில்லாத போதிலும், புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' எனும் நூலை முழுமையாகப் படித்ததுண்டு. இக் காவியத்தின் கதாநாயகன் இராவணேசனே. அத்துடன் அறிஞர் அண்ணாவின் 'கம்பரசம்' எனும் நூலையும் கற்க முடிந்தது. இந்நூல் கம்பர் பெருமானை ஒரு காமரசப் புலவராகக் காட்டுகிறது. இவ்விரு நூல்களும் தமிழ் நாட்டில் திராவிடர் இயக்கம் வேகமாகப் பரவிய காலத்தில் எழுந்தவை.

தமிழ் நாட்டிலுள்ள காரைக்குடியில் அறிஞர் சா. கணேசன் அவர்களால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வந்த 'கம்பர் விழா' வைக் காணும் வாய்ப்பினை 1956ம் ஆண்டு பெற்றேன். கம்பர் பெருமானின் மேன்மை



இராஜகுமாரன்

யையும் இராமபிரானின் தெய்வீகத் தன்மையையும் அப்போது உணர முடிந்தது. அதே ஆண்டின் பிற்பகுதியில் கம்போடியா சென்றிருந்தபோது அங்குள்ள 'அங்கோர் வாட்' என்ற பண்டையச் சிறப்புமிக்க ஆலயப் பிரகாரச் சுவர்களில் இராமாயணக் காட்சிகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டிருந்ததையும் காணும் சந்தர்ப்பம் கிட்டியது. அதே போன்று தாய்லாந்து நாட்டின் தலைநகரம் பாங்கொக்கில், அரண்மனையுடன் கூடிய நூதனசாலையில், வாலியும் சுக்கிரீவனும் போரிடும் நிலையை, ஒரே கல்லில் சிற்பமாக வடித்திருந்ததையும் காணும் பேறு கிடைத்தது. பாங்கொக் அந்நாட்டின் தலைநகராக்கப்படுவதற்கு முன்னர் 'அயோத்தியா' என்றொரு நகரம் தலைநகராக இருந்துள்ளது. பாங்கொக்கின் வட புறத்தே சுமார் 60 கிலோமீட்டர் தொலைவில் இந்நகரம் இருக்கிறது. தாய்லாந்து மன்னர்கள் இராமபிரானின் வழிவந்தவர்கள் என்று கருதப்படுகிறது. இதனால் இவர்கள் இராமர் என்ற சிறப்புப் பெயராலும் அழைக்கப்படுகின்றனர். அயோத்தி நகரிலிருந்து அரசர் ஆட்சிபுரிவதாகக் கற்பிக்கப்பட்டு வந்தது. அழகிய மாளிகைகளையுடைய இந் நகரம் அரசகுடும்பத்தின் கோடைகால வாசஸ்தலமாகவும், உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாகவும் உள்ளது. இந்தோனேஷியாவின் கிழக்கேயுள்ள பாலித்தீவில் இராமாயணத்துக்குள்ள நன்மதிப்பையும் கண்டேன். பாலி நங்கையர் இராமகாதையின் பாகங்களை நடனமாக அமைத்து ஆடுவதையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

திருக்கோணேஸ்வரம் தரிசனத்துக்காகச் செல்லும் காலங்களில் கோணேசர் மலையிலுள்ள இராவணன் வெட்டைப் பார்க்கும் போதும் இராமகாதையின் சிறப்பம்சங்கள் உள்ளத்திரையில் விரிவடையும்.

## கலைவாணருடன்...

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், 1954ம் ஆண்டு தமது நாடகக் குழுவினருடன் வந்திருந்தபோது, கிருஷ்ணன்- மதுரம் பயணம் செய்த அதே வண்டியின் முன் இருக்கையில் அமர்ந்து பல நாட்கள் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்றிருந்தேன். நுவரெலியாவுக்கு அணித்தாகவுள்ள சீத்தா எலியாவில், ஒரு நீர்ச்சுனையின் அருகில் சீதை அம்மன் கோவில் என்றோர் சிறு ஆலயமுண்டு. கிருஷ்ணன்- மதுரத்துடன் அந்த ஆலயத்தின் முன் நின்று வழிப்பட்டதுண்டு.

தமிழ் நாட்டில் நாகர்கோவில் அருகே சுசீந்திரம் என்றோர் திருத்தலம் உள்ளது. இவ்வாலயத்தின் ஒரு புறத்தே ஆஞ்சநேயரின் விசுவரூபச்சிலை இருக்கிறது. இங்கும் அப்பெருமானைப் பிரார்த்தனை செய்துள்ளேன். 1975ம் ஆண்டு பண்டைப் பெருமைமிக்க இராமேஸ்வரம் திருப்பதியில் நடைபெற்ற திருக்குட முழுக்கு விழா காணும் வாய்ப்புக்கிட்டியது. தசரதச் சக்கரவர்த்தி குழந்தைப் பாக்கியம் வேண்டி திருத்தல யாத்திரை செய்தபோது இராமநாதபுரத்திலுள்ள திருப்புள்ளாணி (திருப்புல் அணை) என்ற தலத்தில் தர்ப்பப் புல்லினால் தொட்டில் செய்து வழிபட்டாராம். அதேதலத்தையும் தரிசித்தேன். அவ்விடத்திலிருந்து சில கல்தூரம் இருக்கும் சேதுக்கரையிலுள்ள ஆஞ்சநேயர் ஆலயமும் காணும் வாய்ப்புக் கிட்டியது. இராவண வதம் முடிந்து இராமபிரான் திரும்புகையில் இவ்விடத்திலும் சிறிது நேரம் தங்கியிருந்தாராம். கடந்த ஆண்டு டிசம்பரில் சென்னையை அடுத்துள்ள நங்கநல்லூரில் எழுந்தருளியிருக்கும்- சுமார் 36 அடி உயரமுடைய ஆஞ்ச நேயரின் விசுவரூப தரிசனமும் கிட்டியது.

தெஹிவளையில் கோயில் கொண்டிருக்கும் ஆஞ்சநேயரின் தரிசனமும் கிட்டியது. இவ்வாலய ஸ்தாபகரான ஸ்ரீ சந்திரசேகர சுவாமிகளின் நல்லாசியும் கிடைக்கப்பெற்றது. இவை தவிர, இராமபிரானுடைய அநுக்கிரகம் பெற்ற பல சந்தர்ப்பங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஒன்றன்பின் ஒன்றாக இவ்வாறு எமக்குக் கிடைத்த அரும்பெரும் சந்தர்ப்பங்களினால்தான் இராமகாதையை எம்மால் தொடர்ந்து தர முடிந்ததேயன்றி எம்முடைய அறிவாற்றலோ, அசாத்தியத் தகைமையோ காரணமல்ல என்பதனை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இம்மாபெரும் பணியினை நாம் ஏற்றுத் தொடங்கியதில் கவனக்குறைவாக- கவலையீனமாகத் தவறுகள் பல நேர்ந்திருக்கலாம். தவறுகளை வாசகர்கள் உரிமையோடு சுட்டிக்காட்டியபோது இயன்றவரை அவற்றைத் திருத்தும் சந்தர்ப்பம் கிட்டியது. இவைதவிர, இம்முயற்சியைப் பாராட்டியது போல், 'பழைய பத்தாம் பசலிக் கதைகளைக் கூறி பத்திரிகையின் இடத்தை வீணடிப்பதுடன் வாசகர்களின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம்!' என்று கண்டனக் கணைகளும் வீசப்பட்டன.

இராமகாதைக்கு சில கற்பனைப் பாத்திரங்களையும் இணைத்துச் சிறப்பூட்டலாம் என்றோர் எண்ணமும் இருந்தது. இப்பெரும் காப்பியத்துக்கு அது பொருந்தாது என்று சில வாசகர்கள் சுட்டிக் காட்டியமையினால் அம்முயற்சியைக் கைவிட்டுவிட்டோம்.

கடந்த 123 வாரங்களாக இத்தெய்வீகத் தன்மை வாய்ந்த காவியத்தை- அவனருளால் அவன் தாள் பணிந்து- தந்தோம். இந்த அறிவிலியின் முயற்சியில் உள்ள நலன்களை மட்டும் பற்றி, நலமற்றவற்றை நீக்கி-மறந்து விடுங்கள் என்று கூறி இராமாயணத்தை நிறைவு செய்கிறேன்.

வாசகர்களின் விமர்சனங்கள் எமக்கு மென்மேலும் ஊக்கமளிக்கும் என்பதைக் கூறி வைக்க விரும்புகிறேன்.

இராம சரிதம் இத்து டன் முடிவுற்றதாகக் கூறிவிட முடியாது. இராமனுக்கும் சீதாப்பிராட்டியாருக்கும் வாரிசுகள் தோன்றியதாகக் கூறு ம் 'உத்தர இராமாயணம்' என்றொரு நூலு ம் இருக்கிறது. இதனையும் தொடராக எழுதுவதற்கு முன்னர் திருமறை என வழங்கும் விவிலியம் தரும் கதைகளையும் வாசகர்களுக்குப் படைக்கலாம் என்றோர் அவாவுண்டு. இப்பணியினைத் தொடருமாறு முரசு எமக்குப் பணித்துள்ளது. முரசின் பணிப்பு என்பது வாசகர்களாகிய உங்களின் ஆணைதானே.!

## இராமாயணப் போட்டி: 122

**சரியானவிடை:- வசிட்ட மா முனிவர்**

1. எஸ். சுகந்தி, 147/15, மனோஜ்வாசா, கலஹா.
2. பீ. [illegible]லவாணி, சித்தாண்டி-3, மொறக்கொட்டாஞ்சேனை.
3. ஏ. றினோலியா, 141/1, சென்றல் பிளேஸ், திஹாரிய.
4. ஸம் ஸம் நிஸ்பானு நிஸார், 547, ஸம் ஸம் வீதி, மருதமுனை-03.
5. செல்வி நிதர்ஷினி ராஜதாஸ், 46/10, சென். பெனடிக் மாவத்தை, கொழும்பு-15.

# தொழிலாளரும் தொண்டரும்

கா.பூ.க: வணக்கம்! தொண்டருக்கு தொண்டரே! வேலை நிறுத்தத்தை ஏன் பாதியில் முடித்தீர்கள்.

தொண்: புலிகளைப் பாருங்க, தொடர்ந்தா சுட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இடைக்கிடையே நிறுத்திவிட்டுத்தானே சுடுகிறார்கள். அப்படித்தான் இதுவும்.

கா.பூ.க: கேட்ட சம்பளம் கிடைக்கவில்லையே?

தொண்: கேட்டதும் கொடுக்க முதலாளி என்ன கடவுளா என்கிறேன். பில் கிளின்ரன் கேட்பதையெல்லாம் சதாம் உசேன் கொடுத்தாரா? சதாம் உசேன் கேட்பதையெல்லாம் பில் கிளின்ரன் கொடுத்தாரா? அத்தனை ஏன், பிரபாகரன் கேட்டதை பிரேமதாசா கொடுத்தாரா? பிரேமதாசா கேட்டதை பிரபாகரன் கொடுத்தாரா? கிடைப்பதை எல்லாம் கேட்கலாம். கேட்பதெல்லாம் கிடைக்கும் என்று நம்பக்கூடாது.

கா.பூ.க: ஏன் அவசரப்பட்டு முடிவு செய்தீர்கள்?

தொண்: சனத் ஜெயசூரியா அவசரப்பட்டு அடிக்கிறதாலேதான் சிக்ஸர் பறக்குது. ரீமும் ஜெயிக்குது. அவரைப் போய் நிதானமாக அடியுங்க என்று சொல்வீங்களா? வேகமாக அடிக்க வேண்டிய நேரத்திலே வேகமாக அடிச்சாத்தான் காரியம் நடக்கும். அவசரப் பட்டது அதனாலதான்.

கா.பூ.க: ஆனாலும், ஏனைய சங்கங்களுடன் கலந்து பேசி முடிவு செய்திருக்கலாம் அல்லவா?

தொண்: இப்ப பாருங்க, தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதி இருக்கிறார். கலந்து பேசி முடிவெடுக்கிறாரா கேளுங்கள். அப்படி முடிவு எடுத்திருந்தா மருமகன் மாறன் அமைச்சராக மாறியிருக்க முடியுமா? மகன் ஸ்டாலின் மேயராகி இருக்கத்தான் முடியுமா?

கா.பூ.க: பிரதியமைச்சர் சந்திரசேகரன் எதிர்ப்புத் தெரிவித்திருந்தாரே?

தொண்: அவர் குட்டியமைச்சர். நான் கெட்டிக்கார அமைச்சர்.

கா.பூ.க: தொழிலாளர்களும் சம்பளம் போதாது என்று தானே கூறுகிறார்கள்?

தொண்: பத்து ரூபா வல்ல, பத்தாயிரம் ரூபா கூட்டிக் கொடுத்தாக்கூட அவங்களுக்கு போதவே போதாது. குடிக்கிறாங்க. கூத்தடிக்கிறாங்க. ஒரு போத்தல் சாராயம் என்ன விலை? என்கிறேன். இப்படியே குடிச்சுக் கிட்டிருந்தா சம்பளம் கட்டுப்படியாகுமா? என்கிறேன். இன்னமும் சம்பளத்தை கூட்டிக் கொடுத்தா என்னாகும்? குடிச்சுக் குடிச்சு குடலைப் புண்ணாக்கிக் கொள்ளுவாங்க. முதல்ல குடியை நிறுத்தட்டும். பின்னாடி கூலியைப்பத்திப் பேசலாம்.



கா.பூ.க: குடிக்காதே என்று சொல்லுங்கள். அதற்காக கூலியைக் கொடுக்காதே என்று முதலாளிமாரிடம் ஏன் சொல்கிறீர்கள்?

தொண்: நான் முதலாளிமாரிடம் சம்பளம் கூட்டிக் கொடுக்க வேணாம் என்றும் சொல்லலை. தொழிலாளிகிட்ட குடிக்க வேண்டாம் என்றும் சொல்லலை.

கா.பூ.க: பின்னே என்னதான் சொல்ல வருகிறீர்கள்?

தொண்: நான் வாங்கித் தரும் கூலியை வாங்கி கண்ணிலே ஒற்றிக்கொண்டு போக வேண்டியதுதானே. வாங்கிக் கொடுத்ததை மறக்காம அடுத்த தேர்தலிலே வாக்குப் போட வேண்டியதுதானே. புதுசா என்ன கேள்வி வேண்டிக் கிடக்கு? மலையக அமைதியை குலைக்க சில தீய சக்திகள் முற்படுகிறார்கள்.

கா.பூ.க: உங்கள் உத்தரவையும் மீறி தொழிலாளர் வேலைக்குச் செல்லாமல் புறக்கணித்தார்களே?

தொண்: புறக்கணிக்கவில்லை, உடனே வேலைக்கு திரும்புமாறு கூறியிருந்தேன், உடனே என்றால் என்ன அர்த்தம் என்று தொழிலாளர்களுக்கு புரியவில்லை.

கா.பூ.க: நாள் குறிப்பிட்டுத்தானே சொல்லியிருந்தீர்கள்?

தொண்: தொழிலாளர்கள் தங்கள் வீட்டில் என்ன நாட்காட்டியா வைத்திருக்கப் போகிறார்கள். நாளும் தெரியாமல் பொழுதும் தெரியாமல் குடித்து கெட்டுப் போகத்தான் தெரிந்து வைத்திருக்கிறார்கள்.

கா.பூ.க: எத்தனை மணிக்கு என்றுகூட கூறியிருந்தீர்களே?

தொண்: மணி கூறி என்ன, மணிக்கூட்டைக் கூட மதுபான கடையிலே அடைவு வைத்திருப்பார்கள். அதனால் தான் நான் குறிப்பிட நேரத்தை தவறவிட்டிருப்பார்கள்.

கா.பூ.க: உங்கள் தலைமைக்கு சவால் வருகிறது என்று கருதலாமா?

தொண்: எங்கள் சின்னம் சேவல், எங்களுக்கு யார் விடுவது சவால், உலகத்துக்கு ஒரே ஒரு சூரியன்தான். மலையகத் தொழிலாளர்களுக்கு ஒரே ஒரு தலைவன்தான். ஒரே உறைக்குள் இரண்டு கத்தி இருந்தால் என்னாகும்?

கா.பூ.க: ஒன்று தொலைந்தால் இன்னொன்றை எடுத்து பாவிக்கலாம்.

தொண்: நான் என்ன சவரக் கத்தியைப் பற்றியா பேசுகிறேன்? சண்டைக் கத்தியைப் பற்றி பேசுகிறேன்!

கா.பூ.க: மலையகத்தில் நீங்களே வன்முறையை தூண்டப்போகிறீர்களோ?

தொண்: எங்கள் தலைமைக்கு ஆபத்து என்றால் வன்முறை கூடாது. எங்கள் தலைமைக்கு ஆதாயம் என்றால் வன்முறையும் வெடிக்கலாம். நானே தலைவன், நானே ராஜா. நானே மந்திரி.

(உணர்சிவசப்படுகிறார். பாடல் ஒலிக்கிறது)

"ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே
ஏமாற்றாதே ஏமாற்றாதே
ஏமாறாதே ஏமாறாதே"

# தமிழ்க் கட்சிகள் ஒன்று கலந்தன

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ் மக்களுக்காக போராட முடிவு செய்துள்ளன.

இந்த உலக அதிசயச் செய்தியை நேற்று மாலை அக் கட்சிகள் வெளியிட்டன.

தங்களில் யார் வேண்டுமானாலும் தலைவராக இருக்கலாம் என்று சகல தலைவர்களும் ஒருமனதாக அறிவித்தனர்.

அதனையடுத்து குலுக்கல் முறையில் தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

"கொள்கை வேறுபாடு கிடையாது. ஏன், கொள்கையேகூட கிடையாது. அப்படியிருந்தும் பல கட்சிகள், பல கொடிகள், பல சின்னங்களுடன் நாங்கள் குழுக் குழுவாகப் பிரிந்திருந்ததை நினைத்தால், எங்கள்மீதே எங்களுக்கு கெட்ட கோபம் வருகிறது. புதுசாக வெட்கம்கூட வருகிறது." என்று முன்னாள் தலைவர்கள் எல்லோரும் அழுதழுது (ஆனந்தக் கண்ணீராம்) கூறிக் கொண்டிருந்தனர்.

தமிழ்க் கட்சிகள் கடல்நீரில் உப்புக் கட்டி கரைந்தது போல ஒன்றான செய்தியை அறிந்த இலங்கை அரசு ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்துள்ளது.

ஏப்ரல் ஃபூல் தினத்தன்று தமிழ்க் கட்சிகள் கூட்டாக விடுத்த அறிக்கையில் தான் மேற்கண்ட ஞானோதயம் காணப் பட்டது.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# காற்றுள்ள போதே...



➡ ஆடைகளைத் தோய்த்து கொடியில் உலரப் போடுவது நம் வீடுகளில் நடக்கிற சங்கதிதான். தலைநகரில் நிறைந்த வாடகையில் குறைந்த இடப் பரப்பில் குடியிருப்பவர்கள் பலருக்கு கொடி கட்டக்கூட இடம் கிடைப்பதில்லை. ஊரில் என்றால் கொடி கொடியாகக் கட்டலாம்.

ஆனால், எப்படித்தான் நாமெல்லாம் கொடி கட்டினாலும் உலகிலேயே ஆடைகள் உலர்த்துவதற்காக கட்டப்பட்ட மிக நீ.நீ.நீ.நீ.ண்டட்ட கொடி படத்தில் உள்ளதுதான். ஒரே கொடியை சுற்றிச் சுற்றி கட்டியிருக்கிறார்கள். இந்த ஆடை உலர்த்தும் உலக சாதனைக் கொடியின் நீளம் 5 ஆயிரத்தி 272.55 மீட்டர். (கிட்டத்தட்ட ஐந்தேகால் கிலோமீட்டர்). அடிக்கணக்கில் சொல்வதாயின் 17 ஆயிரத்தி 298 அடி.

நெதர்லாந்தில் உள்ள பவெல் என்ற இடத்தில் 1996 ஜூன் 26ம் திகதி இந்த சாதனை படைக்கப்பட்டது.

துணிகள் சொற்ப நேரத்தில் பலரால் துவைக்கப்பட்டு உடன் தயாரான கொடியில் மாட்டப்பட்டன. மிக நீண்ட கொடியில் ஒரே நேரத்தில் துவைக்கப்பட்ட ஆடைகளை உலரப்போட்டு உலக சாதனை படைக்கப்பட்டது.

ஜாலி




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்


SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


# நீர் ஆட்டம்



➡ நீருக்கு மேலே கால்கள் ஆட்டம் போடுகின்றன. தலையைக் காணவில்லை. நீலத்திரைபோன்ற நீச்சல் தடாகத்தை தலையால் குத்தி ஊடறுத்து விட்டார். இது சாதாரண சாதனையல்ல உலக சாதனை.

உயரமான பலகையில் நின்று மிகவும் கச்சிதமாக டைவ் அடித்து, துளியும் பிசகாமல் நீரை நச்சென்று குத்திப்புகும் விதமாக 'டைவ்' அடித்தவர் கிரேக் லெலிசனின். அமெரிக்கர். இதுவரைகால நீச்சல் விளையாட்டு வரலாற்றில் கச்சிதமாக டைவ் அடித்து உலக சாதனை படைத்திருப்பவர் இவர்தான். நடுவர்கள் மூன்றுபேர் அவரது சாதனையை பார்த்தனர்.

1978ல் உயரமான பலகையில் ஹைபோட் இருந்தும், 1982, 1986களில் ஹைபோட் மற்றும் பதிவான ஸ்பிறில் போட்டிலிருந்தும் டைவ் அடித்து உலக சாதனைகள் படைத்தார். 1984 மற்றும் 1988ல் ஒலிம்பிக்கில் நான்கு தங்கப் பதக்கங்களை வென்றார். நீச்சல் தடாகத்தில் 'டைவ்' அடிப்பதில் இவரை மிஞ்ச இன்றுவரை வேறு ஆள் கிடையாது.




தினமுரசு வாரமலர்

← ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் திருவிழா மாதிரியாகிவிட்டன. ஆண்கள் பெண்கள் வயது வித்தியாசமின்றி கண்டு களிக்கும் திருவிழா. மேலும் மேலும் இந்தத் திருவிழாவை சிறப்பிக்க முயற்சிகள் நடக்கின்றன.

மைதானத்தில் கட்டழகிகளின் துள்ளல்கள், விதம் விதமான களியாட்டங்கள் என்று ரசிக பட்டாளத்தை கவர பல உத்திகள் கையாளப்படுகின்றன. கிரிக்கெட் இலாபம் தரும் தொழிலாகிவிட்ட பின்னர் அதனை நோக்கி மேலும் மேலும் மக்களைக் கவரும் விதமான எத்தனங்கள் அதிகமாகியுள்ளன.

படத்தில் காணப்படும் முகமூடி மனிதர்களும், கால் முளைத்த பிரமாண்ட பந்தும் தென்னாபிரிக்க மைதானத்தில் கிரிக்கெட் போட்டிகளுக்கு முன்னர் நடைபெற்ற களியாட்டத்தில் 'கிளிக்' செய்யப்பட்டது. கொண்டாட்டம்தான்!

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



ஈசன்-உதயா (நெல்லியடி, திருகோணமலை) தம்பதியினரின் செல்வப் புதல்வி சி.வர்ஷினி தனது 2வது பிறந்த தினத்தை (27.02.98) கனடா மொன்றியலில் சிறப்பாகக் கொண்டினாள். வர்ஷினியை அன்பு அப்பா, அம்மா (கனடா), அப்பப்பா, அம்மம்மா (நெல்லியடி),

### செல்வி சி. வர்ஷினி

அம்மப்பா, அம்மம்மா, (திருகோணமலை), நவம் மாமா, கிருபா அத்தை, சஷம்பா மச்சான் (பிரான்ஸ்), வசந்தன் மாமா, ராணி அத்தை, கதரின் மச்சாள், (டென்மார்க்), ராஜன் மாமா, ரதி அத்தை, சஞ்ஷித் மச்சான், (திருகோணமலை), கிருஷ்ணன் சித்தப்பா, தஜந்தா சித்தி, (திருகோணமலை), குகன் சித்தப்பா, (நெல்லியடி), குமார் மாமா, (கனடா) சசி மாமா (திருகோணமலை), திருமலை அம்மம்மா, அப்பம்மா, மாமாமார், மற்றும் உற்றார் உறவினர் திருகோணமலை பத்திரகாளி அம்பாள் அருளுடன் எல்லா செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: சசி மாமா, திருகோணமலை.

நூறு






அவுஸ்திரேலிய அணியின் இரு தூண்கள் ஸ்ரீவ் வோவ், மார்க் வோவ் இரட்டையர். இவர்களில் ஒருநாள் போட்டிகளின்போது அணிக்கு கப்டனாக இருப்பவர் ஸ்ரீவ் வோவ்.

32 வயதான ஸ்ரீவ் வோவ் நூறு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பெருமையை பெற்றுள்ளார். உலகில் இதுவரை 17 வீரர்கள்தான் 100 டெஸ்ட் போட்டிகளை தாண்டியுள்ளனர். அதில் ஸ்ரீவ் வோவ் உட்பட நான்குபேர் அவுஸ்திரேலியர்கள். 100 டெஸ்ட்டில் 6 ஆயிரத்தி 288 ஓட்டங்கள். 14 சதங்கள். 37 அரைச் சதங்கள். பந்துவீச்சில் 85 விக்கெட்டுக்கள் சாய்த்தார். 75 கேட்ச் பிடித்தார். சிறந்த பந்துவீச்சு 5/28. ஐந்து விக்கெட்டுக்குமேல் 3 தடவை சாய்த்துள்ளார்.

சென்ற ஆண்டில் சாதனை படைத்த மற்றொரு கிரிக்கெட் வீரர் பாகிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் சக்லெய்ன் முஷ்டாக். கடந்த வருடம் 36 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்று 69 விக்கெட்டுக்களை சாய்த்தார். அதன் மூலம் ஒரு வருட காலத்தில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்திய உலக சாதனையாளரானார்.

அதற்கு முன்னர் 65 விக்கெட்டுக்களை சாய்த்ததே உலக சாதனையாக இருந்தது. அந்தச் சாதனையும் 1996ல் இவரால் படைக்கப்பட்டதுதான். அதனால் ஒரு வருடத்தில் 50 விக்கெட்டுக்களுக்கு மேல் இரு தடவைகள் சாய்த்த உலக சாதனையும் இவருக்கு சேருகிறது.

முதலிடம்